38

ஓம்

ஸ்ரீ ஜிநாயநம:

பஞ்சாஸ்திகாய வசன ஸங்கிரஹம்

260

OFFICE OF THE ... 2-OCT 1936 MADRAS

இஃது

வீடூர் - கு. அப்பாசாமி சாஸ்திரியார் குமாரர்

A. தர்மசாம்ராஜ்யம் அவர்களால்

வசனமாக எழுதப்பட்டு

சாஸ்திரதானம் செய்யும்பொருட்டு

வீடூர். மகா-ள-ள-ஸ்ரீ அ. சக்கரவர்த்தி நயினர்

ஷெயார் பாரியாள்

ஸ்ரீமதி - தங்கம்மாள்

இவர்களின் பொருளுதவியினல்

சென்னைச் சாது அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது

1936

ஓம்

ஸ்ரீ ஜிநாயநம:

பஞ்சாஸ்திகாய

வசன ஸங்கிரஹம்

இஃது

வீடூர் - து. அப்பாசாமி சாஸ்திரியார் குமாரர்

A. தர்மசாம்ராஜ்யம் அவர்களால்

வசனமாக எழுதப்பட்டு

சாஸ்திரதானம் செய்யும்பொருட்டு

வீடூர். மகா-ா-ா-ஸ்ரீ அ. சக்கரவர்த்தி நயினர்

ஷெயார் பாரியாள்

ஸ்ரீமதி - தங்கம்மாள்

இவர்களின் பொருளுதவியினுல்

சென்னைச் சாது அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது

1936

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2 - OCT 1936
MADRAS

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2-OCT 1936
MADRAS

முகவுரை

பஞ்சாஸ்திகாயம் என்னும் பெயரினையுடைய இந்த சாஸ்திரம் ஸ்ரீ குந்தகுந்தாசாரியர் என்னும் பதிவரரால் நூற்றெண்பது காதைகளினுல் இயற்றப் பட்டதாகும். அதற்கு அநேக ஆசாரியர்கள் உரை யியற்றிஇருக்கிருர்கள். அவற்றுள் மல்லிஷேணுசாரியரா லியற்றப்பட்ட தமிழுரையையும் ஜயஸேனுசாரியரா லியற்றப்பட்டசமஸ்கிருதஉரையையும் தழுவித்தமிழில் வசன நடையாக இது எழுதப்பட்டது. இதைத் தமிழ் மொழிகளினுலேயே எழுதுமிடத்துப் பெரும்பாலும் சமஸ்கிருத பதங்கள் பிரயோகிக்கப்பட் டிருப்பதன் காரணமென்னவெனில்? ஜைனமத தத்துவ விஷயங் களில் பூர்வாசாரியர்களால் பிரயோகிக்கப்பட்டு வழங்கி வருகின்ற அநேக பதங்களைத் தமிழில் எழுதுவ தானுல் நூல்விரிவாகும்; அன்றியும் அபிப்ராய பேதப் படும்படியான நிலையையுமடையும். ஆதலால் அவை அவ் விதமே எழுதப்படலாயின.

அங்ஙனமாயின் இவ்விதமாக மணிப்பிரவாள மாக எழுதுவதிற் பயனென்னை யெனில்? காதை களையும் அவற்றின் பதவுரையையும் பாதனிகை தாத் பரியங்களையும்படித்து விஷயங்களை ஸ்வீகரிப்பதைவிட அவைகளைத் தொகுத்து எழுதியுள்ள இதிலிருந்து எளி தில் விஷயங்களை ஸ்வீகரிக்கக் கூடுமென்று கருதலா னேன். கருதியபடி இது எழுதப்பட்டது. இங்ஙனம்

இதனை எழுதியதற்கு முக்கிய கருத்தாவது நம் தமிழ் நாட்டில் இந்த சாஸ்திரம் காதாரூபமாகிய மூலத்துடன் பாதனிகை பதவுரை தாத்பரியங்களோடு கூடிய தமிழ் வியாக்கியான ரூபமாக ஏட்டுப் பிரதிகளாகவே இருத்தலாலும், அதனை அவ்விதமே அச்சியற்றின் சமஸ்கிருத அக்ஷராப்பியாசமில்லாத அநேகருக்குப் பயன்படாததுடன் பணச்செலவும் அதிகமாகுமாதலாலும் அவ்விஷயங்களைத் தொகுத்துச் சுருக்கமாக இது எழுதப்பட்டது. பவ்வியர்களுக்கு உபகாரமாகும் என்னும் அபிப்ராயத்தைக் கொண்டே இவ்விதமாக எழுதத் துணிவுற்றனம்.

ஆத்ம ஸ்வரூபத்தைப் பற்றித் தெளிவாகவும் விரிவாகவும் முக்கியமாகவும் இந்தப் பஞ்சாஸ்திகாயம் பிரவசனஸாரம் ஸமயஸாரம் என்னும் கிரந்தங்களில் சொல்லப்பட் டிருப்பதால் இந்தக் கிரந்தங்கள் அத்தியாத்ம சாஸ்திரங்களென்று சொல்லப்படுமென்றும், மற்றத் திரவியங்களைப்பற்றியும் விரிவாகத் தெரிவிக்கப்படுவதாகிய தத்துவார்த்த ஸூத்திரம் கோமடஸாரம் முதலிய மற்றக் கிரந்தங்களெல்லாம் ஆகம சாஸ்திரங்களென்று சொல்லப்படுமென்றும் ஆசாரியர்கள் கூறியுள்ளார்கள்.

இந்த சாஸ்திரம் அத்தியாத்ம சாஸ்திரமானதால் இதிற் கூறியவற்றை மறுபடியுங் கூறுதலும் இலக்கண இலக்கிய நியமங்களின்மையும் இவை முதலியன குற்றமாகாதெனவும் பூர்வாசாரியர்களே கூறியுள்ளார்கள். ஏனென்றால்? தத்துவார்த்தங்களைப் பற்றி அறிந்து கொள்ள விரும்புபவர்களுக்கு ஆரம்பத்தில்

ஒரு விஷயத்தைப் பற்றித் திரும்பத் திரும்பவும் கூற வேண்டிய தவசியமாதலாலும் மற்றும் பாவனைக்கு யோக்கியமாகிய கிரந்த மாதலாலும் இதில் புனருக்த தோஷமென்பது கவனிக்கப்படமாட்டா தென்றும் தத்துவார்த்தங்களைப் பற்றி அறியுமவன் அதனுடன் கூட இலக்கண இலக்கிய நியமங்களையும் அறிந்து கொண்டு கஷ்டப்படாதிருக்கும் பொருட்டே இந் நூலாசிரியர் இந்த சாஸ்திரத்தினைப் பிராக்கிரத சம் பந்தமாகிய காதா ரூபங்களினு லியற்றினு ரென்றும் கூறியுளர்.

மற்றும் இந்த க்ஷேத்திரத்தில் இக்காலத்தில் மனிதர்களுக்குப் பலமும் ஆயுஷ்யமும் அற்பமாகிய தால் பலவாகிய ஆகம கிரந்தங்களை அப்பியசித்துப் பிரயாஸ ஸாத்தியத்தினுல் ஆத்ம ஸ்வரூபத்தை அறி வதைவிட அத்தியாத்ம சாஸ்திராப்பியாசமே அவ சியம் செய்யத் தகுந்ததென்றும் பூர்வாசாரியர்கள் பல ரும் கூறியுள்ளார்கள்.

ஆதலால் அத்தியாத்ம சாஸ்திரமாகிய இத னைப் பவ்வியர்கள் அவசியம் அப்பியசித்துப் பய னடையக் கடவர்கள். மற்றும் இந்த வசன நடையில் ஏதேனும் பிழைகள் காணப்படுமாயினும்,

"குற்றம் களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்"

என்றபடி நீரினை நீக்கிப் பாலினைப் பருகும் அன்னப் பக்ஷியைப்போலத் தோஷங்களைநீக்கிக் குணங்களை ஸ்வீ கரித்துக் கொள்ளக் கோருகிறேன். தற்காலம் சாஸ்

திரதானம் செய்ய வேண்டி இதனைப் பிரசுரித்தற்கு மனப்பூர்த்தியாய் விஸ்வாஸத்துடன் பொருளுதவி செய்ய முன்வந்த வீடூர். நயினர் அருகதாஸ நயினர் குமாரர் மகா-ா-ா-ஸ்ரீ அ. சக்கரவர்த்தி நயினர் ஷியார் பாரியாள் ஸ்ரீமதி தங்கம்மாள் ஆகிய இவர்களின் பரோபகார சிந்தையினைப் பவ்வியர்கள் மிகவும் புகழ்ந்து பாராட்டக் கடமைப்பட்டவர்களாவார்கள்.

ஆகமத்தின் முறைப்படியே அந்தரங்க சுத்தியுடன் எழுதும்போது எனக்கு எழுத்து வேலைகளில் கூடவிருந்து உதவி புரிந்தும் இதனை அச்சிடும் வேலைகளையும் அதிக சிரத்தையுடன் தம்முடைய சரீர கஷ்டத்தினைப் பாராமல் செய்தும் இதனை இனிது நிறைவேற்றிய வீடூர். மகா-ா-ா-ஸ்ரீ கூ. அப்பாவு சக்கரவர்த்தி நயினர் அவர்களின் நன்றி என்னுலும் உலகத்திலுள்ள உத்தமர்களினுலும் என்றும் மறக்கற்பாலதன்று.

வீடூர்
20-6-1936

இங்ஙனம்:
A. தர்மஸாம்ராஜ்யம்.

ஓம்

ஸ்ரீஜிநாயநம:

பஞ்சாஸ்தி காயம்

சிறப்புக ளூற்றச் சிநவர னடிகளே
மறப்ப தின்றி நம்மனத்து ணிறுத்துவாம்.

1-வது பஞ்சாஸ்திகாய ஷட்திரவிய விவரண மஹாதிகாரம்

நூற்றுவர், இந்திரர்களால் வணங்கிப் பூஜிக்கும்படியான பூஜாதிசயத்தை யுடையவரும்; மூன்றுலகத்திலுமுள்ள பவ்வியர்களுக்கு சுத்தாத்ம ஸ்வரூபத்தினை யடைவதற்கு உபாயத்தைத்தெரிவிப்பதால் ஹிதமும், பரமார்த்தத்தில் பிரீதியினையுடைய ஜீவர்களின் மனதை மகிழச் செய்வதால் மதுரமும், சந்தேகம் முதலான தோஷங்களை நீக்கக் கூடியதாயும் சுத்த ஜீவாஸ்திகாயம் முதலான பஞ்சாஸ்திகாய ஷட்திரவிய ஸப்ததத்துவ நவபதார்த்த ஸ்வரூபங்களைத் தெளியச் செய்வதாயும் முன்னுக்குப்பின்

மாறுதலில்லாததாயும் ஒரே ஸமயத்தில் எல்லா ஜீவர்களுக்கும் அவரவர்கள் பாஷை யினால் தெளிவாக அறிவிக்கக் கூடியதாயும் இருப்பதால், ஸ்பஷ்டமுமாகிய ஸ்வபாவத் தினையுடைய திவ்வியத் துவனியாகிறவாக் அதிசயத்தினை யுடையவரும்; காலம் க்ஷேத் திரம் முதலானவைகளினால் அளவறுக்கப் படாத கேவல ஞானம் முதலான அனந்த குணங்களை யுடையவராகையால் ஞானாதி சயத்தையுடையவரும்; பிறப்பு இறப்புகளி னால் தொடர்ந்து சுழன்றுவரும் சம்ஸாரத் தினைக் கெடுத்தவராகையினால் காதி கர்ம அபாயாதிசயத்தினையும் இந் நான்கதிசயங் களுடன் அனுகதமாகிய இதர அதிசயங்களை யுடையவருமாகிய ஜிநேஸ்வரரின் பொருட்டு நமஸ்காரம் என்றிவ்விதமாக மங்களார்த்த மாக இஷ்டதேவதா நமஸ்காரம் செய்யப் பட்டது.

சாஸ்திரத்தின் ஆரம்பத்தில் ஆசிரியர்கள் மங்களார்த்தமாகப் பரமேஷ்டிகுண ஸ்தோத் திரமாகிய நமஸ்காரத்தினை ஏன் செய்ய வேண்டுமென்றால், மங்கள நமஸ்காரத்தினால் புண்ணியமாம். புண்ணியத்தினால் (நிர்விக் கினமாக) இடையூறின்றி முடியும் பொருட்டு

என்ருல், தேவதா நமஸ்காரம் தானம் பூஜை முதலியுவைகளே முதலில் செய்து ஆரம்பித்த ஒரு காரியமும் விக்கினமாகின்றதே! அவை களின்றியே தொடங்கும் காரியமும் ஓரிடத்து இனிது நிறைவேறுகின்றதே! இதற்குக் கார ணம் என்ன வெனில்? தேவதா நமஸ்கார தானம் பூஜை முதலிய தர்மங்களேச் செய் தும் விக்கினத்தையடைவது, முன்ருற்செய்த பாபத்தின் மிகுதியினுலென்று அறியவும்; தர்மத்தினுற் கெட்டதன்று. ஆதலால், தர்ம தூஷணம் செய்வது யுக்தமல்ல. அந்தத் தர் மங்களின்றியுந் தொடங்கினகாரியம் இனிது நிறைவேறுவது, முன் செய்த தர்மத்தினு டைய பலத்தினுலென்றறியவும்; பாபத்தினு லன்று.

சாஸ்திரம், மங்களமா அமங்களமா? அமங்களமாயின், அங்ஙனமாகியசாஸ்திரத்தி ஞல் என்ன பிரயோஜனம்? மங்களமாயின், மங்களத்திற்கு மற்றுமொருமங்களம்எதற்காக என்ருல், ஒளி யுருவினனுகிய சூரியனேத் தீபத்தால் அர்ச்சிப்பதும், கலே வாணியாகிய சரஸ்வதியை வசனங்களினுல் ஸ்துதிப்பதும் போல, பக்தி விசேஷத்தினுல் மங்களமாகிய சாஸ்திரத்திற்கு, மங்களார்த்தமாக இஷ்ட

தேவதா நமஸ்காரம் செய்வது யுக்தமே. மற்றும், ஞானமுண்டாவது சாஸ்திரத்தினால் ஆதலாலும், அந்தசாஸ்திரம் ஆப்தனால்தெரிவிக்கப்பட்ட தாகையாலும், அங்ஙனமாகிய ஆப்தனை முதலில்ஸ்துதிப்பது செய்ந்நன்றி மறவாத தன்மையாகும். இதுவரை மங்களத்தைப்பற்றிச் சொல்லப்பட்டது. இனி, நிமித்தமென்பது, காரணம். வீதராகராகிய ஜிநேஸ்வரரிடத்தினின்றும் திவ்வியத்துவனி மூலமாக சாஸ்திரம் வெளிப்படுவதற்குக் காரணம் என்ன? பவ்வியர்களினுடைய புண்ணியத்தினாலென்றறிக. இந்த சாஸ்திரத்திற்குச் சாமான்ய காரணம், சகல பவ்வியர்களுமாவர். விசேஷ காரணம், சிவகுமார மஹாராஜனும். பலம், பிரத்தியக்ஷ பரோக்ஷ பேதத்தினால் இருவிதமாகும். இந்த சாஸ்திரத்தை அப்பியசித்தற்கும் அதன்படி நடப்பதற்கும் பிரத்தியக்ஷ பலம், அஞ்ஞானம் நீங்கி ஸஞ்ஞானம் உண்டாதலும் அநேக நற்குணங்களின் விருத்தியும் கர்மங்களின் நிர்ஜ்ஜரையுமாகும். பரோக்ஷபலம், அப்யுதய நிஸ்ரேயஸபேதத்தினால் இரண்டுவிதமாம். மனுஷ்ய தேவகதிகளில் மேன்மையான பதவியை யடைந்து அனுபவிக்கப்படுகின்ற சம்ஸார

சுகானுபவம் அப்யுதய பலமாகும். அரு கத் ஸித்த பதவிகளேயடைந்து அனுபவிக் கின்ற அதீந்திரியமும் அனந்தமுமாகிய பரம சுகம் நிஃஸ்ரேயஸ பலமாகும். பிரமாணம் சப்த அர்த்த பேதத்தினுல் இரண்டு விதங் களாம்.

இந்த சாஸ்திரம், சப்தத்தினுல் ஸங் கியாதமும், அர்த்தத்தினுல் அனந்தமு மாகும். நாமம் அன்வர்த்த நாமமென்றும் இதர நாமமென்றும் இருதிறமாவன. குண னுருபமாகிய பெயர் அன்வர்த்த நாமமாம். இதரமாகிய பெயர் இதர நாமமாம். பிரக்கி ரஷ்டமாகிய அர்த்தங்களினுல் பிரதமாகையி னுல் இந்தப் பஞ்சாஸ்திகாயப் பிரவசனஸார ஸமயஸாரமென்னும் மூன்றினுக்கும் பொது வாகப் பிராப்ரதத்திரயம் என்பது பெயர். பஞ்சாஸ்தி காயங்களுடைய ஸ்வருபத்தைத் தெரிவிப்பதால் இதற்குத் தனியாகப் பஞ் சாஸ்திகாயமென்கிற பெயர் அன்வர்த்த நாமமாகும்.

கர்த்தாக்கள் மூவராவர். தற்காலத் தைக் குறித்து ஸ்ரீ மஹாவீர வர்த்தமான ஸ்வாமியானவர் ஜீவாதி சகலார்த்த உப தேசகராகையால் மூலகர்த்தாவும், கௌதமர்

முதலிய கணதரர்கள் அவரா லுபதேசித்த அர்த்தங்களைத் துவாதசாங்க அங்க பாஹ்ய ரூபமாகிய கிரந்தங்களாகச் செய்து சகல பவ்வியர்களுக்கும் உபதேசித்தவர்க ளாகை யால் உத்தரகர்த்தாக்களும், அதன் பிறகு பரம்பரையினுல் உபதேசித்துவந்து ஸ்ரீகுந்த குந்தர் பரியந்தம் வர்த்தித்துவந்த ஞானஸம் பன்னராகிய யதிப்பிரதானர்கள் உத்தரோத் தர கர்த்தாக்களுமாவர். இவ்விதம் மங்களம் முதலாகிய ஆறு விஷயங்களைப்பற்றிச் சொல் லப்பட்டது. அதற்பின், ஸர்வஞ்ஞனுகிய ஜிநருடைய முகத்தினின்றும் புறப்பட்டதாகி அர்த்தத்தினை யுடையதும் நான்கு கதிகளில் சுழலும் தன்மையை நீக்கக் கூடியதும் சகல கர்மங்களின் விடுதலையாகிய மோக்ஷத்தினை எய்துவிப்பதற்குச் சாமர்த்தியமானதும் கண தர தேவர்களால் கிரந்த ரூபமாகச் செய்யப் பட்டதுமாகிய சப்த ஸமயத்தினுக்கு நான் எனது (உத்தமாங்கத்தினுல்)சிரசினுல் நமஸ் காரம் செய்து, அர்த்த ஸமயங்களைப் பற்றி ஞான ஸமயம் உண்டாதற் பொருட்டுச் சொல்லுவேன். பவ்வியர்கள் கேளுங்கள் :

ஜிநரா லுபதேசிக்கப்பட்டு, கணதரர்களி னுல் கிரந்தமாகச் செய்யப்பட்ட சாஸ்திரம்

சப்த ஸமயமென்பது. அந்த சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கும் பொருள்கள் அர்த்த ஸமய மென்பது. அவற்றைப் பற்றித் தெளிந்த அறிவானது ஞானஸமயமென்பது. அவற்றுள் ஆஸன்ன பவ்வியர்கள் வீதராக ஸர்வஞ்ஞர் முகத்தினின்றும் வெளியானதாகிய சப்த ஸமயத்தினைக் கேட்டுப் பிறகு அந்த சப்த ஸமயத்தில் சொல்லப்பட்டிருக்கும் அர்த்த ஸமயங்களின் தன்மையை அறிகின்றார்கள். அந்த அர்த்த ஸமயங்களில் அனுகதமாகிய சுத்த ஜீவாஸ்திகாய லக்ஷணமாகிய நிஜாத்மனாகிய அர்த்தத்திலேயே நின்று .நான்கு கதிகளில் சுழற்சியாகிற சம்ஸாரத்தினை நீக்குகின்றார்கள். சம்ஸாரம் நீங்குதலினாலேயே மோக்ஷத்தினை யடைந்து அனந்த சுகத்தினையும் பெறுகின்றார்கள். ஆதலினால் திரவியாகம ரூபமாகிய சப்த ஸமயம் நமஸ்கரிப்பதற்கு யோக்கியமாகும்.

ஜீவாஸ்திகாயம்முதலாகிய ஐந்துவிதமாகிய அர்த்தங்களின் கூட்டமே, அர்த்த ஸமயமென்று ஜிநேஸ்வரரால் சொல்லப்பட்டது. அந்த ஐந்து அர்த்தங்களின் கூட்டமே, லோகமென்னும் பெயரினை யுடையது. அந்த லோகத்தினுக்குப் புறம்பு அனந்தானந்தப்

பிரதேச ரூபமாகிய சுத்த ஆகாசத் திரவியம் அலோக மென்பது. அந்த ஜீவாதி ஐந்து அர்த்தங்களுடைய கூட்டம் அர்த்த ஸமயம் என்பது. அந்த அர்த்த ஸமயத்தைப்பற்றி விவரிக்கும் அக்ஷர பத வாக்கிய ஸமூக ஸ்வ ரூபமாகிய பரமாகமம் சப்த ஸமயம் என்ப தாம். அதில் சொல்லிய ஐந்து அர்த்தங் களின் ஸ்வரூபத்தை மித்தியாத்துவ கர்ம உதயமில்லாதபோது சந்தேஹ விபரீதங்க ளில்லாமல் தெளிவது ஞான ஸமயமென்ப தாம். ஜீவாதி ஐந்து அர்த்தங்கள் காணப் படுகின்ற இடம் லோகமென்றும், சுத்தாகாச ரூபமாகியது அலோகமென்றும் சொல்லப் படும்.

முன் சொன்ன அந்த ஐந்து அர்த் தங்கள் எவைகளெனில்? ஜீவாஸ்திகாயம், புத்கலாஸ்திகாயம், தர்மாஸ்திகாயம், அதர் மாஸ்திகாயம், ஆகாசாஸ்திகாயம் என ஐந் தாம். அவைகளுள் சைதன்ய ஸ்வரூபத் தை யுடையவை ஜீவாஸ்திகாயங்கள். பஞ் சேந்திரியங்களுக்கு விஷயமாகியவைகள் புத் கலாஸ்திகாயங்கள். ஜீவபுத்கலமாகிய அவை இரண்டினுக்கும் செல்கைக்குக் காரணமான லக்ஷணத்தை யுடையது தர்மாஸ்திகாயம்.

நிற்றலுக்குக் காரணமாகிய லக்ஷணத்தை யுடையது அதர்மாஸ்திகாயம். எல்லாப் பொருள்களுக்கும் இடத்தினைக் கொடுக்கும் லக்ஷணத்தினை யுடையது ஆகாசாஸ்தி காயம். இவைகள் ஒவ்வொன்றும் முக்காலத் தும் அழியாத அஸ்தித்வமான தன்மை யானவைகளும் பஹுப் பிரதேசங்களில் விசா லித்து நிற்கும்படியானவைகளு மாதலால், அஸ்தி காயங்களென்கிற பெயர்கள் அனாதி ஸித்தாந்த பதங்களும் குணநாமங்களுமாகும்.

ஒரு புத்கல பரமாணு வியாபித்த ஆகாச க்ஷேத்திரம் பிரதேசமென்பது. அங்ஙன மாகிய பிரதேசங்களில் பரம்பும் சக்தி இந்த ஐந்து திரவியங்களுக்கும் உடையதாகையால் அஸ்திகாயங்களென்று சொல்லப்பட்டன. புத்கல பரமாணுக்கள் பல ஒன்றோடொன்று சேர்ந்து பந்திக்கின்ற சக்தி உடையனவாகை யால் ஸ்கந்தாபேக்ஷயினால் புத்கலத் திர வியத்தினுக்கும் அஸ்திகாயத்வ மென்கிற பெயர் விரோதமாகாது. சக்தியினாலும் வியக்தியினாலும் எவ்விதத்திலும் காலத் திரவியத்தினுக்குப் பஹுப் பிரதேசமில்லை யாகையினால் காயத்வம் இல்லையாகையால் ஜீவத்திரவியம் முதலாக முன்சொன்ன

ஐந்து திரவியங்களே அஸ்திகாயமென்பவையாம். மற்றும் அவைகள், அவையவைகளுக்குள்ள பலவிதமாகிய குணங்களுடனும், பரியாயங்களுடனும் கூடி அஸ்தித்வத்தினையுடையவைக ளானதாலும், மூவுலகத்தினுடைய அவயவங்கள், இந்த ஐந்து திரவியங்களினாலேயே நிறையப் பட்டதாலும் அஸ்திகாயங்க ளென்று சொல்லப்படும். அவைகளுள், ஜீவாஸ்தி காயத்தினுடைய குணங்களாவன :

கேவல ஞானம் கேவல தரிசனம் முதலியன ஸ்வபாவ குணங்கள் ; மதிஞானம் முதலியன விபாவ குணங்கள். . ஸித்த ரூபம், ஸ்வபாவ பரியாயம். மனுஷ்ய தேவ முதலிய ரூபங்கள் விபாவ பரியாயங்கள். புத்கலாஸ்திகாயத்தினுக்குச் சுத்த பரமாணுவின் வர்ணம் முதலியன ஸ்வபாவ குணங்கள். இரண்டு முதலாக பல அணுக்கள் சேர்ந்த ஸ்கந்தங்களின் வர்ணம் முதலியன விபாவ குணங்கள். சுத்த ஏக பரமாணு ரூபம் ஸ்வபாவ பரியாயம். ஸ்கந்தரூபம், விபாவ பரியாயம். இவைகள் ஜீவபுத்கலங்களுடைய விசேஷ குண பரியாயங்களாம். அஸ்தித்வம் வஸ்துத்வம் பிரமேயத்வம் அகுருலகுத்வம்

முதலியன எல்லாத் திரவியங்களுக்கும்பொது வான குணங்களாம். தர்மாஸ்திகாயம் முதலிய வற்றினுடைய விசேஷ குண பரியாயங்களைப் பற்றி அவைகளைப் பற்றிச் சொல்லுமிடத் தில் தெரிவிக்கப்படும். முன் சொன்ன அந்த ஐந்து அஸ்திகாயங்களும் பலவாகிய பரியா யங்களில், பரியாயார்த்திக நயத்தினுல் உத் பத்தி விநாசத்துடன் கூடிப் பரிணமித்தும் திரவியார்த்திக நயத்தினுல் நித்தியமானவைக ளாகிப் பரிவர்த்தனையினை அடையாளமாக வுடைய காலத்திரவியத்தோடுகூடித் திரவியங் களென்று சொல்லப்படுவன. முன் இருந்த தும் இப்போது இருக்கின்றதும் இனி இருக் கப்போவதுமான தன்மையை யுடைத்தாகை யினுல் இவ்வாறும் திரவியங்களென்று சொல் லப்படுவனவாம். இந்த ஆறு திரவியங்களுள் ஒன்று மற்ருென்றினைச் சென்று அடைந்தன வாகிலும் ஒன்று மற்ருென்றினுக்கு இருக்க இடத்தினைக் கொடுத்தனவாகிலும் கூடி யிருந் தனவாகிலும் அதனதன் ஸ்வபாவங்களை என் றும் விடாதனவாம். அவைகளுள் ஜீவ புத் கல திரவியங்கள் இரண்டும் செல்லும் சக்தி யுடையனவாம். அதற்பின் அஸ்தித்வத்தின் லக்ஷணம் எப்படி யெனில்? எல்லாத் திர

வியத்தினிடத்துமுடையதும் விஸ்வ ரூபத்திலுமுடையதும் அனந்த பரியாயங்களிலுமுள்ளதும் உத்பத்தி விநாச துருவத்தினையுடையதும் ஒன்றானதும் இச்சொன்ன ஒவ்வொன்றினுக்கும் பிரதிபக்ஷமானதிலும் உள்ளதாம். அதாவது, ஸ்வதிரவிய க்ஷேத்திரம் முதலானவைகளினால் ஏற்பட்ட அஸ்தித்வத்திற்கு அன்னிய திரவிய க்ஷேத்திரம் முதலானவைகளால் ஏற்பட்ட அஸ்தித்வம் பிரதிபக்ஷம் ஆகும். எல்லாப்பதார்த்தங்களிலுமுள்ள அஸ்தித்வத்திற்குத் தனித்தனி ஒவ்வொரு பதார்த்தத்தினுடைய அஸ்தித்வம் பிரதிபக்ஷம். அப்படியே விஷ்வருபத்தினுக்கு ஒரு ரூபமும் அனந்த பரியாயங்களுக்கு ஒரு பரியாயமும் உத்பத்தி விநாச துருவசமேதத்தினுக்கு மூன்றில் ஒன்றும் ஒன்றினுக்கு அனேகமும் பிரதிபக்ஷங்களாம்.

இவ்வண்ணமாகிய, அஸ்தித்வ விகல்பங்கள், ஸர்வதா ஏகாந்தவாதிகளுடைய துரபிப்ராயத்திற்கு விரோதமாகத் தோன்றினாலும் அனேகாந்தவாத ஸ⁻மதத்தின்கண் திரவிய பரியாயநய விவக்ஷையினால் விரோதமல்ல. அங்ஙனமாகிய அஸ்தித்வத்தினில் வேறில்லாதனவாகி, அவையவைகளுக்குச் சொல்லப்

பட்ட ஸ்வபாவ விபாவ பரியாயங்களில் (வர்த்திக்குமோ) செல்லுமோ அவைகள் திரவியங்கள்என்பன. அந்தத்திரவியங்களுக்கும் அஸ்தித்வத்திற்கும் வசனத்தினுல் பேதமாகிலும் பிரதேசத்தினுல் பேதமில்லையாகையால் நிச்சய நயத்தினுல் வேறுபாடில்லையென்றறியவும். மற்றும், அஸ்தித்வத்தை லக்ஷணமாகவுடையதும் உத்பத்தி விநாச துருவத்துடன் கூடியதும் குணபரியாயங்களுக்கு ஆதாரமானதும் திரவியமாகுமென்று ஸர்வஞ்ஞர் உபதேசித்துளர்.

இவ்விதமாகிய மூன்று லக்ஷணங்களில் ஒவ்வொரு லக்ஷணத்தில் மற்ற இரண்டு லக்ஷணங்களும் அடங்கியுள்ளனவாம். எப்படியெனில்? திரவியம் அஸ்தித்வ லக்ஷணத்தையுடையதென்று சொல்லு மிடத்தில், உத்பத்தி விநாச துருவத்வமின்றி அஸ்தித்வம் கூடாது. குணபரியாய பரிணமனமின்றி உத்பத்தி விநாச துருவத்வம் கூடாது. அங்ஙனமே, மற்ற இரண்டு லக்ஷணங்களிலும் இதரமாகிய லக்ஷணங்கள் அடங்கியிருப்பதை யோஜித்தறிந்து கொள்ளவும். திரவியங்களுக்குத் திரவியார்த்திக நயத்தினுல் உத்பத்தியும் விநாசமும் இல்லை; அஸ்தித்வ

லக்ஷணமுண்டு. அங்ஙனமாகிய அந்த திரவியத்தினுக்கே பரியாயார்த்திக நயத்தினுல் உத்பத்தி விநாசங்களுண்டு. பொன்னுனது பொன்னுன தன்மையில் உத்பத்தி விநாசங்களை அடையாமலே கடகம் மோதிரம் முதலான பரியாயங்களினுல் உத்பத்தி விநாசத்தை யடைவதுபோல, திரவியமும் திரவியார்த்திக நயவிவக்ஷையினுல் நித்தியமும் பரியாயார்த்திக நயவிவக்ஷையினுல் அநித்தியமும் ஆகின்றது. மேலும், கடகம் மோதிரம் முதலான பரியாயங்களில் வேருன பொன் இல்லாதது போலவும், பால் தயிர் நெய் முதலிய பரியாயங்களில் வேருன கோரஸம் இல்லாதது போலவும் மனுஷ்ய தேவ முதலாகிய பரியாயங்களில் வேருகிய ஜீவாதித் திரவியம் இல்லை. பொன்னில் வேருகிய மோதிரம் முதலிய பரியாயங்கள் இல்லையாதற் போலவும் கோரஸத்தில் வேருகிய பால் தயிர் முதலிய பரியாயங்கள் இல்லையாதற் போலவும் ஜீவாதித் திரவியங்களில் எப்பிரகாரத்தாலும் வேருகிய தேவ மனுஷ்ய முதலிய பரியாயங்களுமில்லை. ஆதலால் அந்தத் திரவியங்களுக்கும் அவைகளின் பரியாயங்களுக்கும் வசனத்தினுல்

பேதமுண்டே தவிர, பிரதேசபேதமில்லை யாகையால், நிச்சய நயத்தினுல் பேதமாகா தென்பதும் ஸர்வஞ்ஞ ருபதேசமாம். அவ் விதமாகவே புத்கலத் திரவியத்தில் வேருகிய வர்ணம் முதலியன இல்லையாதற்போல ஜீவ திரவியம் முதலிய திரவியங்களில் வேருகிய ஞானம் முதலிய குணங்கள் இல்லை. வர்ணம் முதலிய குணங்களில் வேருகிய புத்கலத் திரவியம் இல்லாததுபோல ஞானம் முதலியகுணங்களில் வேருகிய ஜீவத்திரவியம் முதலிய திரவியங்களும் இல்லை. அது காரணத்தினுல் வசனம் முதலியவற்ருல் திரவிய குணங்களுக்குக் கதஞ்சித் பேதமாகிலும் திரவிய க்ஷேத்திர கால பாவங்களினுலும் பிரதேசத்தினுலும் பேதமில்லை யாகையினுல் நிச்சயத்தினுல் ஸ்வரூப பேதமாகாது. அதற்பின் இங்ஙனமாகிய விகல்பங்களை யெல்லாம் நிராகரிக்க வேண்டிப் பிரமாண ஸப்த பங்கியினைப் பற்றிச் சொல்லப்படும். ஜீவத்திரவியம் முதலிய ஒவ்வொரு திரவியங் களையும் அவைகளின் நிலைமையைப் பற்றிப் பேசுமிடத்தில், ஸ்யாத் அஸ்தி திரவியம் என்றும், ஸ்யாத் நாஸ்தி திரவியம் என்றும், ஸ்யாத் அஸ்திநாஸ்தி திரவியம் என்றும்,

ஸ்யாத் அவக்தவ்யம் திரவியம் என்றும், ஸ்யாத் அஸ்தி அவக்தவ்யம் திரவியம் என்றும், ஸ்யாத்நாஸ்தி அவக்தவ்யம் திரவியம் என்றும், ஸ்யாத் அஸ்திநாஸ்தி அவக்தவ்யம் திரவியம் என்றும் இப்படி நிர்விவாதத்தின் பொருட்டு ஏழு விதமாகும். எங்ஙனமெனில் ? ஸ்யாத், என்கிற வசனம், கதஞ்சித், அதாவது ஒரு பிரகாரத்தினுல் சொல்லுமிடத்தில் என்பதைக் குறிக்கும்.

அப்படிச் சொல்லாமல் அஸ்தி திரவியமென்று சொல்லும் பக்ஷத்தில், திரவியங்களுள் அஸ்தித்வம் அதிவியாப்தியினுல் வர்த்தித்து அதனதன் திரவியக்ஷேத்திர காலபாவங்களினுல் வஸ்துக்களை நியமிக்கவும் அன்னிய திரவிய க்ஷேத்திர காலபாவங்களினுல் நிவாரித்தற்கும்இயலாதுபோகும்.எங்ஙனமெனில்? உதாரணமாக, அஸ்தி கடம் என்று ஸ்யாத்காரம் இல்லாமல் சொன்னுல் உலகம் முழுவதும் கடமொன்றேயாகும். கடத்தினைப் படம் அல்லவென்று நிவாரித்தற்கும் ஸ்வதிரவியத்தின்கண் நியமித்தற்கும் ஸ்யாத் அஸ்தி கடம் என்று சொல்ல வேண்டியதாகின்றது. அப்படியே, அஸ்திகடம் என்ருல் அது இருக்கின்ற இடத்தில் மாத்திரமா உலகம்

முழுவதிலுமா என்ருல், அது வைத்த இடத்தில் தான் இருக்கின்றதென்னும் பக்ஷத்தில் மற்றெங்கும் இல்லாமையாலே ஸ்யாத்நாஸ்தித்வமும் அந்தக் கடத்திற்கு ஏற்படுகின்றது.

அங்ஙனமாகாவிட்டால் உலக முழுவதிலும் அந்தக் கடம் ஆகவேண்டும். மற்றும் நேற்றுக்கடம் இருந்தது இன்றைக்கு இல்லை என்று சொல்லப்படுகிறதால், காலத்தினுலும் அந்தக் கடத்திற்கு அஸ்தி நாஸ்தித்வம் ஏற்படுகின்றது. அப்படியே பாவத்தினுலும் அஸ்திநாஸ்தித்வம் ஏற்படுவதை யோஜித்தறியவும். ஆதலால் கதஞ்சித் அர்த்தத்தினை யுடைய ஸ்யாத் என்கிற வசனமில்லாமல், திரவியம்அஸ்திநாஸ்தியென்னுமிடத்தில் அதிவியாப்தியாகுமென்று அறியவும். ஆதலால் திரவியம் அஸ்தியா நாஸ்தியா என்று விசாரிக்குமிடத்து, (1) ஸ்யாத் அஸ்திதிரவியம் அதாவது, கதஞ்சித் விவக்ஷித பிரகாரத்திஞல், அதாவது ஒரு விதத்திஞல் திரவியம் அஸ்தியென்றும், (2) ஸ்யாத்நாஸ்தி திரவியம்,ஒரு பிரகாரத்தால் நாஸ்தி திரவியமென்றும், (3) ஸ்யாத் அஸ்தி நாஸ்தி திரவியம், ஒரு விதத்திஞல் அஸ்தி நாஸ்தி திரவியமென்றும், (4) ஸ்யாத் அவக்தவ்யம் திரவி

யம், ஒரு விதத்தினுல் அவக்தவ்யம் திரவிய மென்றும், அதாவது, திரவியம் சொல்ல வியலாத தன்மையையுடைய தென்றும், (5) ஸ்யாத் அஸ்தி அவக்தவ்யம் திரவியம், ஒரு விதத்திஞல் அஸ்தியென்றும், சொல்ல விய லாத தன்மையையு முடையது திரவியமென் றும், (6) ஸ்யாத்நாஸ்தி அவக்தவ்யம் திரவி யம், ஒருவிதத்திஞல் திரவியம் நாஸ்தியென் றும், சொல்லவியலாத தன்மையையுமுடைய தென்றும், (7) ஸ்யாத் அஸ்திநாஸ்தி அவக் தவ்யம்திரவியம், ஒருபிரகாரத்திஞல் அஸ்தி நாஸ்தியென்றும், சொல்லவியலாத தன்மை யையுமுடையது திரவிய மென்றும். இப்படி ஏழுவிதமாகச் சொல்லப்படும்.

அதாவது ஸ்யாத் அஸ்தி திரவிய மென்ற விடத்துத் தனது திரவிய க்ஷேத்திர கால பாவங்களால் திரவியம் அஸ்தி யென்று அறியப்படும். ஸ்யாத் நாஸ்தி திரவியம் என்ற விடத்து அன்னிய திரவிய க்ஷேத்திர கால பாவங்களால் திரவியத்தினுக்கு நாஸ் தித்வம் அறியப்படும். ஸ்யாத் அஸ்தி நாஸ்திதிரவியம் என்றவிடத்துத் தனது திர விய க்ஷேத்திர கால பாவங்களாலும் அன் னிய திரவிய க்ஷேத்திர கால பாவங்களிஞ

லும் முறையே அஸ்திநாஸ்தித்வம் திரவி யத்தினுக்கு அறியப்படும். ஸ்யாத் அவக்தவ் யம் திரவியம் என்ற விடத்து அஸ்திநாஸ் தித்வங்களை ஒருக்காலே சொல்ல அபேக்ஷை யானவிடத்து வசனம் இல்லாத காரணத்தி ளுல் திரவியம் கதஞ்சித் அவக்தவ்யமும் ஆகிறதென்று அறியவும். எப்பிரகாரத்தாலும் சொல்லவியலாத தன்மையுள்ள தென்ருல் அது முற்றிலும் விரோதமாகும். இப்படியே மற்ற மூன்று விதங்களுக்கும் யோஜித்தறிந்து கொள்ளவும். ஆதலால் ஸ்யாத்வாதமில்லாத அபிப்ராயத்தினுல் வஸ்துக்களின் யதார்த்த மான தன்மையினை அறிய வியலாது.

ஒரு வஸ்துவிற்கு இப்படி ஏழுவிதமான தன்மைகள் எப்படிப் பொருந்துமென்ருல் தேவதத்தன் என்ற பெயருடைய ஒரே மனி தனை அவனுடைய பிதாவின் அபேக்ஷையி ளுல் புத்திரனென்றும், அவன் புத்திரனு டைய அபேக்ஷையினுல் பிதாவென்றும், மனை வியின் அபேக்ஷையினுல் பர்த்தாவென்றும், சகோதரர்களின் அபேக்ஷையினுல் சகோதர னென்றும், மாமனுர் அபேக்ஷையால் மருக னென்றும், மருகனின் அபேக்ஷையினுல் மாம ளுரென்றும் சொல்லப்படுவது போலென்க.

திரவியங்களுக்கு இப்படிச் சொல்லப்பட்ட ஸப்தபங்கி நியாயங்கள் திரவியார்த்திக பரியா யார்த்திக நயவிவக்ஷையினால் கூடுவனவாம். அவற்றுள் பொன்னானது பொன்னான தன்மையில் உத்பத்திவிநாச மில்லாதிருந்து மோதிரம் முதலிய பரியாயங்களினாலும், அவ் வப்போது ஏற்படுகின்ற வர்ணம் முதலிய குணங்களினாலும் உத்பத்திவிநாசங்களையடை வதுபோல, ஜீவதிரவியம் முதலிய திரவியங் களும் திரவியத்தினால் உத்பத்தி விநாசங்க ளில்லாதனவாகையால் நித்தியங்களாகியும் ஞானம் முதலிய குணங்களிலும் நர நாரக முதலிய பரியாயங்களிலும் மாறுதலடைந்து பரிணமிக்கும் காரணத்தினால் உத்பத்தி விநா சங்களையு முடையனவாகையால் திரவியங்கள் கதஞ்சித் நித்தியாநித்தியங்களையு முடையன வாம்.

ஜீவதிரவியம் முதலாகிய ஆறு திரவியங் களும் பதார்த்தங்களெனப்படுவன. அவைக ளுள் ஜீவதிரவியத்தினுடைய குணபரியாயங் களைச் சொல்லுமிடத்தில் ஸாமான்யமாகிய சேதனையும் விசேஷமாகிய உபயோகமும் ஜீவதிரவியத்தின் குணங்களாம். ஒவ்வொன் றிலும் பல பேதங்களையுடைய தேவமனுஷ்ய

நாரக திரியக் ரூப அவஸ்தைகள் ஜீவதிரவி யத்தின் பரியாயங்கள் என்பனவாகும். ஜீவ திரவியத்திற்கு ஸ்வபாவ குணங்கள் சுத்த சேதனையும் அதன் விசேஷங்களாகிய கேவல ஞான தரிசனங்களும் ஆவன. அசுத்த சேதனையும், அதன் விசேஷங்களாகிய மதி ஞானம் முதலிய ஏழு ஞானங்களும் அதா வது மதி சுருத அவதி மனப்பரியயமென் னும் ஸம்மியக்ஞானங்கள் நான்கும் குமதி குஸ்ருத விபங்கமென்னும் அஞ்ஞானங்கள் மூன்றும் ஆகிய ஏழு ஞானங்களும் சக்ஷு தரிசன அசக்ஷு தரிசன அவதிதரிசனமென் னும் மூன்று தரிசனங்களும் ஆகிய இவை கள் விபாவகுணங்க ளென்க.

ஸித்தபரியாயம் ஸ்வபாவபரியாயம். கர் மங்களின் உதயத்தினு லேற்பட்ட தேவ மனுஷ்ய முதலிய பரியாயங்கள் விபாவ பரியாயங்கள். இவ்விதமாகவே மற்றத் திரவி யங்களினுடைய குணபரியாயங்களை அவை யவைகளைப்பற்றிப் பின்னுல் சொல்லுமிடத் தில் அறிந்து கொள்ளவும். அதற்பின் திரவியங்கள் பரியாயார்த்திக நயத்தினுல் விநாச உத்பாதங்களை யுடையனவாகிலும், திரவியார்த்திகநயத்தினுல் உத்பத்தி விநா

சங்களை யுடையனவல்ல. எப்படியெனில், பொன்னானது மோதிரமாகிய பரியாயத்தின் விநாசத்தினையடைந்து குண்டலமாகிய பரியாயமாக உத்பத்தியினை யடைந்தாலும் இரண்டிற்கும் ஆதாரமாகிய பொன்னான தன்மையில் விநாச உத்பத்திகளை யடையாதது போல, மனுஷ்ய பரியாயத்தினால் மரணமடைந்த ஒரு ஸம்ஸார ஜீவதிரவியம் புண்ணிய வசத்தினால் தேவபரியாயத்தையோ அல்லது அதன் கர்ம வசத்தின்படி வேறு பரியாயங்களையோ அடைகின்றது.

அந்த இரண்டு பரியாயங்களுள்ளும் அன்விதமாகிய ஜீவ திரவியம் முன் பரியாய விநாசத்துள் திரவியார்த்திக நயத்தினால் திரவியத்தினில் கெட்டது மில்லை; பின் உத்பத்தியினை யடைந்த பரியாயத்தில் ஜீவதிரவிய மின்றி மற்றொன்று உண்டானதுமில்லை என்றதனால் ஏகாந்தமாக ஸர்வதாநித்தியமே திரவியங்கள் என்னும் அபிப்ராயமும் ஸர்வதா அநித்தியமேயென்னும் (உடன்பாடும்) அபிப்ராயமும் நிராகரிக்கப்பட்டன. மற்றும் அந்த ஜீவதிரவியம் பரியாயார்த்திக நயத்தினால் நூதன பரியாய உத்பத்தியினையும் பூர்வபரியாய விநாசத்தினையும்

அடைந்த தாகியும் திரவியார்த்திக நயத்தினுல் திரவியத்தினுல் கெட்டதுமில்லை; இல்லாததுபிறந்தது மில்லை. அங்ஙன மாயின் உத்பத்தி விநாசங்கள் என்பன எங்ஙன மாயிற்றென்ருல், உத்பத்தி யாயிற்றென்பதும் கெட்டதென்பதும் தேவ மனுஷ்ய என்னும் பரியாயங்களேயாம்.

உத்பத்தியும் விநாசமும் உண்டாகில் அந்தப் பதார்த்தத்திற்கு நித்தியத்துவம் எப்படிக் கூடும்? அல்லது நித்தியத்துவ மாகில் அதுவே உத்பத்தி விநாசத்தினை எப்படியடையும்? அப்படி உண்டென்று சொல்லுவது (ஒன்றுக் கொன்று) முன்னுக்குப்பின் விரோதமாகும். என்ருல் யாவர் சிலருடைய மதத்தில் வஸ்துக்களை ஏகாந்த மாக எப்பிரகாரத்தாலும் (ஸர்வதா) நித்தியமே அல்லது அநித்தியமேயென்று சொல்லப் படுகிறதோ அதுதான் முன்னுக்குப் பின் விரோதமாகும். எந்த ரூபத்தினுல் நித்தியத்துவம் என்று ஏகாந்தமாகச் சொல்லப்பட்டதோ அதே ரூபத்தினுல் அநித்தியத்துவம் வஸ்துக்களுக்குக் கூடாது. எந்தக்காரணத்தினுல் அநித்தியத்துவம் என்று சொல்லப்பட்டதோ அதே காரணத்தினுல் நித்தியத்து

வம் கூடாது. ஏனென்றால்? அவர்களுடைய மதத்தில் வஸ்துக்களுக்கு ஒரே ஸ்வபாவம்.

ஜைன மதத்தினில் வஸ்துக்களுக்கு அநேக ஸ்வபாவங்களுண்டென்பதால் வஸ்துக்களுக்குத் திரவியார்த்திக நயத்தினால் நித்தியத்துவமும் பரியாயார்த்திக நயத்தினால் அநித்தியத்துவமும் கூடுவது விரோதமாகாது. இவ்விதமாக ஜீவ பாதார்த்தம் முதலிய பதார்த்தங்களுக்குத் திரவியார்த்திக நயத்தினால்கேடும் உத்பத்தியு மில்லை என்ற விடத்து மூன்று பல்லகாலம் போக பூமியிலிருந்து பிறகு மரணத்தை யடைகின்றான் என்றும், முப்பத்து மூன்று கடற்காலம் உத்கிரஷ்டமாக தேவலோகத்திலும் அல்லது நரகத்திலும் இருந்து பிறகு அந்த ஜீவர்கள் மரணத்தை யடைகின்றார்க ளென்றும் ஆகமத்தில் சொல்லப்படுவது எப்படியென்றால்? அந்த மூன்று பல்லம் முதலிய காலப்பிரமாணம் கதி நாமகர்ம உதயத்தினாலேற்பட்ட பரியாயங்களுக்கே தவிர ஜீவ திரவியத்திற்கல்ல. ஜீவதிரவியம் ஸ்வபாவத்தினால் என்றும் அழிவில்லாத ஸ்வரூபத்தினையுடைத்தாகியும் நாமகர்மம் முதலிய கர்மங்களின் உதயத்தினால் நரக முதலிய பல பரி

யாயங்களில் பரிணமித்து அந்தந்த கதி நாம கர்ம ஸமாப்தியினுல் பல வேஷங்களைத் தரிக்கின்ற நடிகனைப் போல வேறு வேருகிய கதிகளை யடைந்து சுழலுமிடத்தும் திரவியத்தினுல் உத்பத்தி விநாசங்களில்லாததே.

மற்றும் பஞ்சலப்தி ஸம்யோக வசத்தினுல் மோக்ஷத்தினை யடைந்தாலும் ஜீவ திரவியம் அவிநாசியே. மாசுடன் கூடியிருந்த போதும் சாணை முதலிய ஸம்ஸ்காரத்தினுல் மாசு நீங்கி விளங்கும் போதும் மாணிக்கம் திரவியத்தினுல் எவ்வண்ணம் வேறில்லாததாகின்றதோ, அவ் வண்ணமே ஆத்மத் திரவியமும் ஸம்ஸார பரியாயத்துள்ளும் அவற்றின் நீங்கி யடைந்த மோக்ஷ பரியாயத்துள்ளும் திரவியத்தினுல் வேறில்லாததே. ஆசை முதலிய விபாவபரிணுமங்களில் பரிணமிக்கப்பட்ட ஸம்ஸார ஜீவனிடத்தில் கட்டப்பட்ட ஞானுவரணீயம் முதலிய கர்மங்கள் பிறகு அந்த ஜீவன்களுக்குக் காலலப்தி முதலிய பஞ்சலப்தி ஸம்யோக வசத்தினுல் ஏற்பட்ட நிஜஸ்வரூப பாவனுபலத்தினுல் விநாசத்தினை யடைவதாகும். அதனுல் அந்த ஜீவதிரவியம் முன்னெருபோதும் அறியாத ஸித்தபரியாயத்தினையும் அடைவதாகும்.

திரவியகர்ம பாவகர்ம நோகர்மங்களென்கிற இவைகள் ஆத்மனில் மிகவும் வேருன தன்மையை யுடையவைகளாயினும் பொன்னுடன் கிட்ட காளிகைகள்போல ஸம்ஸார ஜீவனுடன் அனுதிசம்பந்தத்தினையடைந்து ஒன்ருனுற்போலக் கூடியிருந்தும் ஆத்மனுக்கு உண்டாகிய பரமபேத பாவனுபலத்தினுல் ஆத்மனில் கர்மங்கள் அகன்றுபோனவிடத்து முன்னென்றும் பரிணமித்தறியாத ஸித்தபரியாயத்துள்ளும் ஜீவன் பரிணமிக்கும் என்பதனுல் ஸம்ஸாரபரியாய விநாசத்துள்ளும் மோக்ஷபரியாய உத்பத்தியிலும் ஆத்மதிரவியம் நித்தியமென்று அறியவும்.

குணபரியாயங்களோடு கூடிற்ருகி ஸம்ஸாரத்தில்சுழல்கின்றஜீவன்கள்இச்சொன்ன பிரகாரத்தினுல் மனுஷ்யாதி பரியாயத்தினுடைய விநாசத்தினையும், தேவாதி பரியாயத்தினுடைய உத்பத்தியினையும் மறுபடியும் அடைந்து வர்த்திக்கின்ற தேவாதி பரியாய விநாசத்தினையும் முன் கெட்ட மனுஷ்யாதி பரியாய உத்பத்தியினையும் கிரமத்தினுல் பரியாயார்த்திக நயத்தினுல் செய்வனவாம். பஞ்சாஸ்தி காயங்களோடு காலத் திரவியமும் கூடியதாகி வர்த்திப்பதாலும் அந்தக் காலத்

திரவியம் பஞ்சாஸ்தி காயங்களுக்கு உபகாரியாகையினாலும் அதைப்பற்றி இவ்விடத்துச் சிறிது சுருக்கமாகச் சொல்லப்படும்.

அஸ்தித்வத்தினை ஸ்வபாவமாக வுடையனவும் யாவராலும் செய்யப்படாதனவும், லோகத்திற்குக் காரணமானவையுமாகிய ஜீவ புத்கல தர்ம அதர்ம ஆகாசமென்கிற இந்தப் பஞ்சாஸ்தி காயங்களினுடைய நவ ஜீர்ண பராவர்த்தனை யாதொன்றினாற் பிறந்ததோ, அது நிச்சய காலமென்று சொல்லப்பட்டது.

ஸமயம் நிமிஷம் முதலிய பரியாயாத்மகமாகிய வியவஹார காலம் ஆறு வகை திரவியங்களினுடைய நவஜீர்ண பராவர்த்தனையினின்றும் வியக்தியினை யடையும். அந்த வர்த்தனையினுக்கு முக்கிய காரணமாவது திரவிய காலம். அந்தத் திரவிய மில்லாமல் பரியாயம் ஆகாச புஷ்பசமானமாகிக் கூடாது. அதனால் ஸமயம் நிமிஷம் முதலிய பரியாய கால ஸத்பாவமானது நிச்சய கால ஸத்பாவ ஸாதகமென்றறியவும்.

அந்த நிச்சய காலத்தினுடைய தன்மை எப்பெற்றியதெனில், ஸ்பரிச ரஸ வர்ண கந்தங்களில்லாத தாகையால் அமூர்த்தமும், திரவியத்தினுக்குக் காரணமாகிய அகுருலகுத்வ

மென்னும் குணத்தினையுடையதும், எல்லாத் திரவியங்களுடைய வர்த்தனையாகிய .தனது காரியத்தால் நிச்சயிக்கப் படுவதும், லோகா காசப் பிரதேசங்களில் தனித்தனியாக இரத் தின ராசிபோல நிறைந்த காலாணுக்களாகிற ரூபத்தினுல் உள்ளதுமாகும்.

நிச்சயத்தினுல், தாமாகவே நவ ஜீர்ண பரிணதியினை யடையும் எல்லாத் திரவியங்க ளுக்கும் வர்த்தனையினுக்குக் காலாணு ரூபமா கிய நிச்சயகாலம் பாஹ்ய நிமித்தமாகின்ற தென்று அறியவும். எங்ஙனமெனில், குளிர் காலத்தில் தானுகப் படிக்கின்ற ஒரு புருஷ னுக்கு, அக்கினி ஸஹகாரியாவது போலவும், தானுகச்சுழலும் தன்மையுள்ளகுயவனுடைய சக்கரத்திற்கு அதன் கீழுள்ள கல் ஸஹகாரி யாவது போலவும் எல்லாத் திரவியங்களி னுடைய நவஜீர்ண பரிணதியினுக்குக் காலத் திரவியம் ஸஹகாரியாகின்றது.

அங்ஙனமாகில் லோகா காசத்திற்குப் புறம்பு காலத் திரவியம் இல்லை. அவ்விடத் துள்ள அலோகாகாசத்திற்குப் பரிணதி எப் படியாகுமெனில், குயவனுடைய சக்கரத்தி லாவது அல்லது நீண்ட ஒரு மூங்கில் மரத் திலாவது ஓரிடத்தில் அசைத்தால் முழுவ

தும் அசைவது போலவும், ஸ்பரிசனேந் திரியத்திலாவது ரஸனேந்திரியத்திலாவது மனதிற்கு ரம்மியமாகிய ஒரு விஷயத்தால் ஸ்பர்சிக்கப்பட்ட தாகில் சர்வாங்கமும் சுகானுபவமாவது போலவும், ஓரிடத்தில் தேள் கொட்டப்பட்டாலும் அல்லது ஓரிடத்தில் இரணமுண்டானாலும் சர்வாங்கமும் துக்கமடைவது போலவும் காலத்திரவியம் லோகாகாசப் பிரமாணத்திருந்தும் அலோகாகாசத்திலும் பரிணதியாகும். எப்படியென்ருல், ஆகாசத்திரவியம் ஒரே திரவியமாகையினுல் எவ்விடத்தும் பரிணதியாகுமென்று அறியவும்.

காலத்திரவியம் அன்னியத்திரவியங்களினுடைய பரிணதிக்கு ஸஹகாரிகாரணமாகும். காலத் திரவியத்தினுடைய பரிணதியினுக்கு எது ஸஹகாரி காரணமெனில்? ஆகாசத்திற்கு ஆகாசமே ஆதாரமாவது போலவும், ஞானமும் சூரியனும் இரத்தின தீபமுமாகிய இவைகள் தன்னையும் இதரவஸ்துக்களையும் பிரகாசிப்பிக்கின்றது போலவும், காலத்திரவியத்தினுடைய பரிணதியினுக்குக் காலத்திரவியமே ஸஹகாரி காரணமாகும். அப்படியானல் காலத்திரவியம் தனது பரிணதியி

னுக்குத் தானே ஸஹகாரியாவதுபோல இதர திரவியங்களும் அவையவைகளின் பரிண திக்கு அவையவைகளே ஸஹகாரியாகக் கூடும். காலத்திரவியத்தினுல் என்ன பிரயோ ஜனமென்ருல், எல்லாத் திரவியங்களும் பரிணதியினை யடைவதற்கு ஸஹகாரித்வ மாவது காலத்திரவியத்தினுடைய குணமே யாகும். எப்படியென்ருல் ? ஆகாசம் பொது வாக எல்லாத் திரவியங்களுக்கும் இருக்க இடத்தினைக் கொடுப்பதுபோலவும், தர்மத் திரவியம் எல்லாத் திரவியங்களுக்கும் செல் கைக்குக் காரணமாவதுபோலவும், அதர்மத் திரவியம் நிற்றலுக்குக் காரணமாவதுபோல வும் ஆகுமென்றறியவும்.

அந்த நிச்சயகாலத் திரவியத்தினுடைய பரியாயங்களாகிய சமயம் நிமிஷம் முதலிய வியவஹாரகாலம் ஜீவபுத்கலங்களுடைய நவ ஜீர்ண பரிணதியினுல் வியக்தியினையடைகின்ற காரணத்தினுல் கதஞ்சித்பராயத்தமும் ஆகும். அவைகளின் தன்மை எப்பெற்றியதெனில் ? மந்தகதியினுல் மற்ருெரு பிரதேசத்தை யடை ந்த புத்கல பரமாணுவின் நிமித்தத்தினுல் வியக்தியினையடைந்த நிர்விபாககாலாம்ச ரூப மாகிய சமயமும், அஸங்கியாத ஸமயம்

கொண்ட நிமிஷமும், பதினைந்து நிமிஷப் பிரமாணமாகிய காஷ்டையும், முப்பது காஷ்டைகளளவாகிய கலையும், இருபது கலைகளளவாகிய நாழிகையும், இரண்டு நாழிகையாகிய முகூர்த்தமும், முப்பது முகூர்த்தங்கள் கொண்ட திவஸமும், திவஸங்கள் முப்பது கொண்ட மாஸமும், இரண்டு மாஸமாகிய ருதுவும், மூன்று ருதுகொண்ட அயனமும், அயனம் இரண்டுகொண்ட வருஷமும், மற்றும் யுக பூர்வாங்க பூர்வ பல்லியோபம ஸாகரோபமம் முதலியவைகளும் வியவஹார காலங்களாவன ; அல்லது பரியாயகாலங்கள் என்பனவாம்.

ஸமயரூபமாகிய சீக்கிரகாலமும் பல்லியோபமம் முதலிய நெடுங் காலம் முதலியனவும் அளவைச் செய்யும் வஸ்துவின்றிக் கூடாவாம். அந்த அளவும் பரமாணுமுதலிய புத்கலத்திரவியமின்றிக் கூடாது. அதாவது புத்கலபரமாணு மந்தகதியினால் அடுத்தப் பிரதேசத்தை யடைவதைக் கொண்டு அந்தக் காலம் சமயமென்னும் வியக்தியினை யடையப் பட்டதாம்.

ஜலபாத்திரம் முதலிய பஹிரங்க நிமித்தமான புத்கலத்தினால் வியக்தியினையடைந்தது

நிமிஷமென்பதாம். சூரியபிம்பத்தின் செல்கையினுல் திவஸம் வியக்தியினையடையப் பட்டதாகும். ஆகையால் வியவஹாரகாலம் கதஞ்சித்பராயத்தமும் ஆகும். அஃதெப்படியெனில் ? நிச்சயத்தினுல் முக்கியமாக மண்ணின் (உபாதான காரணத்தினுலேயே) முக்கியகாரணத்தினுலேயே குடம் உண்டானுலும் வியவஹாரத்தினுல் குயவனுகிற நிமித்தத்தினுல் உண்டானதால் குடம் குயவனுல் செய்யப்பட்டதென்று சொல்லப்படுவது போல, ஸமயம்முதலிய வியவஹாரகாலம் நிச்சயத்தினுல் திரவியகாலத்தின் உபாதான காரணத்தினுல் உண்டானுலும் ஸமயத்திற்கு நிமித்தமான பரமாணுவினுலும் நாழிகைக்கு நிமித்தமான ஜல பாத்திரம் முதலிய புத்கலத் திரவியத்தினுலும் வியக்தியினை யடைகின்ற காரணத்தினுல் புத்கலத்தினுல் உண்டானதென்றும் ஆதலால் கதஞ்சித் பராயத்தமும் ஆகுமென்றும் சொல்லப்படும்.

ஸமயம் முதலியவியவஹார காலங்களுக்கு உபாதான காரண மானதும் எப்பொழுதும் நாசமில்லாததும் லோகாகாசப்பிரதேசப் பிரமாண காலாணு ரூபங்களுமாகியது நிச்சய காலம் என்பதாம்.

அந்த நிச்சயகால உபாதான காரணத்தினுல் உண்டானுலும் புத்கலத் திரவியத்தினுல் வியக்தியினை யடைந்த ஸமயம் நாழிகை திவஸம் முதலிய கல்பனையினுல் சொல்லப் பட்டவை வியவஹார காலங்க ளென்க.

இவ்விதம் காலத் திரவியத்தைப் பற்றித் தெரிவித்ததனுல் இதுவரையிற் சென்ற அன ந்தம் காலமாக நாம் நமது விசுத்த ஞானதரி சன ஸ்வபாவத்தினையுடைய சுத்த ஜீவாஸ்தி காயமான தன்மையினை அடையாமல் ஸம் ஸாரத்திற் சுழல்கின்ருேம் என்பதை யறிந்து, இனியாகிலும் வீதராக நிர்விகல்ப ஸமாதியில் நின்று அதாவது வேறு பொருள்களில் ஆசையின்றிச் சுத்தாத்ம ஸ்வரூபத்தையே இடை விடாமல் தியானித் துச் சுத்த ஜீவாஸ்தி காய ஸ்வரூபத்தை அடைவோமாக.

இவ்விதமாகிய காலத் திரவியத்துடன் கூடித் திரவியங்கள் ஆறு வகையாம். அவை ஜீவத் திரவியம், புத்கலத் திரவியம், தர் மத் திரவியம், அதர்மத்திரவியம், ஆகாசத்திர வியம், காலத்திரவியம் என்பனவாம். அவைக ளுள் ஜீவத்திரவியம் புத்கலத்திரவியம் என் னும் இவ்விரண்டு திரவியங்களும் ஸ்வபாவ

விபாவ பரிணமங்களில் பரிணமிக்கக் கூடி யவையாகையால் பரிணமிகளாகும். இதர நான்கு திரவியங்களும் விபாவ வியஞ்ஜன பரியாயங்க ளில்லாதன வாகையால் முக்கிய விரத்தியினுல் அபரிணமிகளாவன. ஜீவத் திரவியம் ஒன்றும் நிச்சயநயத்தினுல் விசுத்த ஞான தரிசன ஸ்வபாவமாகிய சுத்த சைதன் யப் பிராணனேடு கூடியும் வியவஹார நயத்தி னுல் கர்மோதயங்களினுல் ஏற்பட்ட திரவிய பாவ ரூபங்களாகிய நான்கு பிராணன்களோடு கூடியும், முன் ஜீவித்தது இப்பொழுதுஜீவிக் கின்றது இனி ஜீவிக்கும் ஸ்வபாவத்தினையு முடையதாகையால் ஜீவத்வத்தினை யுடை யது.

புத்கலம் முதலிய மற்ற ஐந்து திரவியங் களும், அஜீவ ஸ்வரூபத்தினை யுடையன வாம்; அதாவது அசேதனமாம். புத்கலத்திர வியம் ஒன்றும் ஸ்பரிச ரஸ கந்த வர்ணங்களை உடையதாகையால் மூர்த்தத் திரவியமாம். ஜீவத்திரவியம் அனுபசரித அஸத்பூதவியவ ஹாரத்தினுல் மூர்த்தமானுலும் சுத்த நிச்சய நயத்தினுல் அமூர்த்தமாகும். தர்ம, அதர்ம, ஆகாச, காலத் திரவியங்கள் அமூர்த்தங்க ளாவன. லோகாகாசப்பிரமாண அஸங்கியாத

பிரதேசங்களை யுடையவைகளாகையால் ஜீவ புத்கல, தர்ம அதர்ம ஆகாசத் திரவியம் என் கிற இவ்வைந்தும் பிரதேசங்களை யுடையன. அதனல் அவை அஸ்திகாயங்க ளென்றும் சொல்லப்படும்.

காலத் திரவியத்தினுக்குப் பஹு ப் பிர தேச லக்ஷணமாகிய காயத்வம் இல்லையாத லால் அது அப்பிரதேசத்திரவியமாகும். திரவி யார்த்திக நயத்தினல் தர்ம அதர்ம ஆகாசத் திரவியங்கள் தனித்தனி ஒவ்வொரு திரவியங் களாகும். ஜீவ புத்கல காலத் திரவியங்கள் அனேக திரவியங்களாகும். எல்லாத் திரவியங் களுக்கும் இடம் கொடுக்கும் ஸாமர்த்தியத்தி னையுடையதால் ஆகாசத் திரவிய மொன்றே க்ஷேத்திரத்தினை யுடையது. மற்ற ஐந்து திர வியங்களும் அக்ஷேத்திரமானவைக ளாகும். ஓரிடத்தினின்றும் மற்ருேரிடத்திற்குச் செல் லும்படியான சலன ஸ்வபாவமான கிரியை ஜீவ புத்கலத் திரவியங்க ளிரண்டிற்குமே யாகும். மற்ற நான்கு திரவியங்களும் நிஷ் கிரியங்களாகும். தர்ம அதர்ம ஆகாச காலத் திரவியங்கள் அர்த்த பரியாயங்களினல் அநித்தியத்தினையு முடையனவாகிலும் முக் கியத்தினல் விபாவ வியஞ்ஜன பரியாயங்க ளில்லாதன வாகையால் நித்தியங்களாகும்.

திரவியார்த்திக நயத்தினுல் ஜீவ புத்கலத் திரவியங்க ளிரண்டும் நித்தியங்களாயினும், அகுருலகு பரிணதி ரூபஸ்வபாவ பரி யாயா பேக்ஷயினுலும் விபாவ வியஞ்ஜன பரியாயா பேக்ஷயினுலும் அநித்தியங்க ளாகும். புத்கல தர்ம அதர்ம ஆகாச காலத் திரவியங்கள், வியவஹார நயத்தினுல் ஜீவ னுக்குச் சரீர வாக் மன பிராணுபாணு திகளை யும், கதி ஸ்திதி அவகாஹ வர்த்தனு காரி யங்களையும் செய்வதனுல் காரணங்களாவன. ஜீவத் திரவியம் குரு சிஷ்ய முதலிய ஸ்வ ரூபங்களினுல் ஒன்றுக்கொன்று உபகாரம் செய்கின்றது. ஆயினும், புத்கலம் முதலிய ஐந்து திரவியங்களுக்கு ஒன்றும் செய்யப் பட்டதல்லவாகையால் அகாரணமாகும்.

சுத்த பாரிணுமிக பரமபாவ ஸ்வீகாரத்தி னுலும் சுத்தத் திரவியார்த்திக நயத்தினு லும், பந்த மோக்ஷ திரவிய பாவ ரூப புண் ணிய பாப கடம் படம் முதலியவைகளுக்கு ஜீவத் திரவியம் அகர்த்தாவாகும். அவ்வித மாயினும், அசுத்த நிச்சய நயத்தினுல், சுப அசுபோப யோகங்களில் பரிணமித்து, புண் ணிய பாப பந்தங்களுக்குக் கர்த்தாவாயும், அந்தப் பலத்தை அனுபவிப்பதாயும் ஆகின்

றது. மற்றும், சுத்தோப யோகத்திற் பரிண மித்து. மோக்ஷத்திற்கும் கர்த்தாவாயும், அந்தப் பலத்தை அனுபவிப்பதாயும் ஆகின் றது என்றதனுல் ஜீவத் திரவியம் சுப அசுப சுத்த பரிணுமங்களிற் பரிணமிப்பதற்குக் கர்த்தாவாகின்றதென்று அறியவும். புத்கலம் முதலான மற்ற ஐந்து திரவியங்களும் அத னதன் பரிணுமத்திலேயே பரிணமிப்பதற்குக் கர்த்தாவாம். வஸ்துத் தன்மையினுல் புண் ணிய பாபம் முதலியவைகளுக்கு அகர்த் தாக்களாம். லோக அலோக மெங்குமுள்ள அபேக்ஷயினுல் ஆகாசத் திரவியம் ஸர்வ கதமாம். லோகமெங்குமுள்ள அபேக்ஷயி னுல் தர்ம அதர்மத் திரவியங்களும் ஸர்வகத மாம். ஜீவத் திரவியம் ஒவ்வொரு ஜீவா பேக்ஷயினுல், லோக பூரணுவஸ்தையின்றி நின்றதைக் குறித்து ஸர்வகதமாகாது. எல்லா ஜீவன்களேயும் பற்றி யோசிக்கு மிடத்து ஸர்வகதமாம். புத்கலத் திரவியம், லோகரூப மஹாஸ்கந்தா பேக்ஷயினுல் ஸர்வகதமாம். மற்றப் புத்கலா பேக்ஷயி னுல் ஸர்வகதமல்ல. காலத்திரவியம், ஒரு காலாணுத்திரவிய அபேக்ஷயினுல் ஸர்வ கதமல்ல. லோகப்பிரதேசப் பிரமாண எல்லாக்

காலாணுக்களின் அபேக்ஷையினுல் லோகத்தில் ஸர்வகதமாகும்.

இவ்விதமாகிய ஆறு திரவியங்களும், வியவஹாரத்தினுல் ஒரு க்ஷேத்திர அவகஹனத்தினுல் ஒன்ருென்றினுள் பிரவேசித்திருந்தாலும், நிச்சயத்தினுல் சேதனம் அசேதனம் முதலிய அவையவைகளின் ஸ்வரூபத்தை விடப்பட்டவைகளாகா. இந்த ஆறு திரவியங்களுள், வீதராக சிதானந்தம் முதலிய குணஸ்வபாவங்களையுடைய சுபாசுப மனவசனகாய வியாபாரங்களில் நீங்கின நிஜ சுத்தாத்மத் திரவியமே ஸ்வீகரிக்கத் தகுந்ததென்று அறியவும்.

முதலாவது திரவியபீடிகை அத்தியாயம் முற்றிற்று.

2 - வது ஜீவாஸ்திகாய அத்தியாயம்

அனந்தரம், பஞ்சாஸ்திகாயங்களுடைய ஸ்வரூபத்தை விஸ்தாரமாகச் சொல்லுமிடத்து முதலாவதாகிய ஜீவாஸ்திகாயத்தைப்பற்றித் தெரிவிக்கப்படும். எங்ஙனமெனில்? ஜீவன் ஜீவிக்கும் தர்மத்தையுடையதும் சேதயிதாவும் ஞான தரிசன மென்னும் உபயோகத்தினுல் விசேஷிக்கப்பட்டதும் பந்த மோக்ஷங்களுக்குத் தானே ஸாமர்த்தியமானதும் கர்மங்களுக்குக் கர்த்தாவும் அந்தக் கர்மங்களுடைய பலத்தினை அனுபவிப்பதும் தான் ஸ்வீகரித்த சரீரப் பிரமாணமானதும் அமூர்த்தமும் எட்டுவித கர்மங்களோடு அனுதியாகவே கூடியதும் ஆகிய இந்த ஒன்பது (தர்மங்களையும்) ஸ்வபாவங்களையும் ஸோபாதி நிருபாதிகளால் அதாவது இயற்கை வசத்தினுலும் சேர்க்கை வசத்தினுலுமுடையதாம்.

இவற்றுள் புத்கலத் திரவிய சேர்க்கை வசத்தினுலான பத்துவித பிராணுத்மகமாகிய ஜீவத்வமும் கர்ம காரிய கர்ம பலானுபவ அசுத்த சேதனையும் க்ஷாயோப சமிகமாகிய ஞான தரிசனேபயோகமும் ஸம்ஸார பரி

யாய காரிய காரண சமர்த்தத்துவ லக்ஷண மாகிய பிரபுத்வமும் திரவிய கர்ம, பாவ கர்ம நிர்மாண ரூப கர்த்ருத்வமும் அந்தக் கர்மங்களின் பலனை அனுபவிப்பதாகிய போக்த்ருத்வமும் நாம கர்ம உதயத்தினு லேற்படுகின்ற ஐந்துவிதமாகிய சரீரப் பிர மாணத்வமும் அனுதிகர்ம பந்தவசத்தினு லான கதஞ்சித் மூர்த்தத்வமும் ஞானு வரணீ யம் முதலிய கர்ம ஸம்யுக்தத்வமும் என் றிந்த ஒன்பதுவகைகளும் ஸோபாதியினுல் அதாவது சேர்க்கையினுலாகிய தர்மங்க ளாம்.

மற்றும் சுத்தசைதன்ய ஸ்வரூப, சுத்தப் பிராண ஸஹித ஜீவத்வமும் அனந்தமாகிய சுத்த ஞானஸ்வரூபா னுபவரூப சேதயித் ரத்வமும் க்ஷாயிக ஞான தரிசனுேப யோக மும் சகலகர்ம க்ஷயகாரண ஸமர்த்த லக்ஷண பிரபுத்வமும் ஸ்வபாவ பரியாயத்தில் நிறை கின்ற லக்ஷண கர்த்ருத்வமும் நிஜாத்ம னிடத் துண்டாகிய அனந்த சுகானுபவ ரூப போக் த்ருத்வமும் சரம தேஹமாத்ர நிஜாத்ம பிரதேசாத்மக தேஹ மாத்ரத்வ மும் வர்ண கந்த ரஸ ஸ்பரிச சப்தங்களில் லாததால் அமூர்த்தத்வமும் சகல கர்ம ரஹி

தத்வமும் என்றிந்த ஒன்பதும் நிரு பாதி தார்மங்களென்க. அதாவது இயற்கையினு லாகும் ஸ்வ பாவங்கள்.

அவற்றுள் பிரபுத்வம் எங்ஙனமெனில்? ஆத்மன் ஸம்ஸாரத் திற்குக் காரணமாகிய மித்தியா தரிசனம் முதலிய விபாவ பரிணமங் களிற் பரிணமிப் பதற்கு ஸாமர்த்தியத் தினை யுடைய பிரபுத்வத்தை யுடையது போலவே மூன்னென்றும் அடையாத மோக்ஷத்தினை ஸாதிக்கும் ஸம்மியக் தரிசனம் முதலிய நிஜ பரிணமங்களிற் பரிணமிப்பதற்கும் தானே ஸாமர்த் தியத்தினையுடையதாகிக் கர்மங்களில் நீங்கி மோக்ஷத்தினை யடைந்து அனந்த ஞானம் தரிசனம் சுகம் வீரியம் முதலிய அனந்த குணங்களோடுகூடி, அதீந்திரிய மான அனந்தசுகத்தினை அனுபவிக்குமிடத்தி லும் பிரபுவாகும். ஆத்மன், ஸம்ஸார மோக்ஷங்களைத் தானே ஸாதித்தற்கு ஸமர்த்த னதலில் பிரபுவென்று அறியவும்.

மற்றும், ஜீவன் சுத்த நிச்சய நயத்தி னல், சுத்த சைதன்ய பிராணன்களோடு ஜீவித்திருப்பதாயினும் அனுபசரித அஸத் பூத வியவஹார நயத்தினல் திரவிய பாவ ரூப நாலுவித பிராணன்களோடு கூடி ஸம்

ஸாராவஸ்தையில் ஜீவிக்கின்றதும் முனை ஜீவித்ததும் இனி ஜீவிக்கும் இயல்பினையு முடையது. அந்தப் பிராணன்கள் யாவை யெனில்? பல பிராணன் இந்திரியப் பிராணன் ஆயுஷ்யப் பிராணன் உச்வாஸ நிச்வாஸப் பிராணன் என நான்கு பிரகாரம். அவற்றுள் பல பிராணன் மன வசன காய பேதத்தினால் மூன்றுவிதமாம். இந்திரியப் பிராணன் மெய் வாய் மூக்கு கண் செவி யென ஐந்துவிதமாம். ஆயுஷ்யப் பிராணன் ஒன்றும் உச்வாஸ நிச்வாஸப் பிராணன் ஒன்றும் ஆகும்.

அனந்தமாகிய அகுருலகுத்வ குணங்களினால் பரிணமிக்கப்பட்ட எல்லா ஜீவத் திரவியங்களும், லோகாகாசப் பிரமாணமான அஸங்கியாத பிரதேசங்களையும் உடையவைகளும், ஸூக்ஷ்ம ஏகேந்திரிய ஜீவன்களினாலும், லோக பூரணாவஸ்தையினை யடைந்த ஜீவன்களினாலும், லோக வியாபக மானவைகளும், லோக பூரணாவஸ்தை யினை யடையாத ஜீவன்களினாலும், பாதரேகேந்திரிய விகலேந்திரிய பஞ்சேந்திரிய முதலிய ஜீவன்களினாலும் லோகவியாபகமல்லாதனவும் ஆகும். மற்றும், மித்தியா

தரிசன கஷாய யோகங்களோடு கூடிய ஜீவன்கள் சம்ஸார ஜீவன்களென்றும், அவைகளிலகன்ற ஜீவன்கள் ஸித்த ஜீவன்களென்றும் இரண்டு விதமாம்.

இருவகை ஜீவன்களும் ஒவ்வொரு வகையிலும் அனந்தங்களுமாகும். ஒரு பத்மராக இரத்தினம் பாலில் இடப்பட்டதாகில், தனது பிரபையினுல் எப்படி அந்தப் பால் முழுவதையும் சிவக்கச்செய்யுமோ அவ்விதமாகவே ஸம்சார ஜீவனும் தான் ஸ்வீகரித்திருக்கின்ற சரீரம் முழுமையும் விசாலித்து நிற்கும். அக்கினியின் ஸம்யோக வசத்தினுல், அந்தப் பால் பொங்கி விருத்தியினை யடைந்தால், அந்தப் பிரபையும் விருத்தியினை யடைவதுபோல, ஆஹார வசத்தினுல் சரீரம் விருத்தியினை யடைந்தபோது ஆத்மப் பிரதேசமும் விசாலிக்கும். அப்படியே கொஞ்சம் பாலில் இடப்பட்டதாகில், கொஞ்சம் பாலில் பிரபை யடைவதுபோலவும், அதிகமான பாலில் இடப்பட்டதாகில் அதில் முழுமையும் பிரபையடைவதுபோலவும், உத்கிரஷ்ட அவகாஹமான மஹாமஸ்ய சரீரப் பிரமாண ஆயிரம் யோஜனையிலும் விஸ்தரிப்பதாம்.

ஜகன்ய சரீர அவகாஹமான உத்ஸேத கனுங்குல அஸங்கியாத பாகப் பிரமிதமான லப்தி அபூர்ண ஸூக்ஷ்ம நிகோத சரீரத்தை யடைந்தாலும் அதில் விசாலித்து நிற்ப தாகும். மத்தியம அவகாஹ சரீரங்களிலும், அந்தந்த சரீரம் முழுமையும் விசாலித்து நிற்பதாகும். அவ்விதமாகவே முன் அடைந் திருந்த சரீரத்திலும் இனி அடையும் சரீ ரத்திலும் அதே ஜீவன் பரிணமிப்பதாகும். அல்லது சரீரத்தில் எவ்விடங்களிலும் ஜீவன் உள்ளதாகும். ஆயினும் நிச்சய நயத்தினுல் சரீரமும் ஜீவனும் ஒன்றல்ல.

அனுபசரித அஸத்பூத வியவஹார நயத்தினுல் பாலும் நீரும் கலந்தது போல ஒன்ருகி யிருத்தலால் ஒன்றுமாம். அவ்வித மாகிய ஜீவன்கள் சுத்த நிச்சயத்தினுல் கேவல ஞான தரிசன ஸ்வபாவங்களை யுடை யனவாயினும் வியவஹாரத்தினுல் அனுதி கர்ம பந்த வசத்தினுல் மித்தியாத்துவம் ஆசை, கோபம் முதலிய அத்தியவஸான ரூபமாகிய பாவகர்மங்களினுலும், அதனு லேற்படுகின்ற திரவிய கர்மங்களினுலும் சூழப்பட்டு மற்ருெரு பவங்களை யடைந்து நூதன சரீரங்களைக் கிரஹிப்பதாகின்றது.

திரவிய கர்ம பாவகர்ம நோகர்மங்களினு லகன்று காரணத்தினுல் யாவை சில ஜீவன்க ளுக்குக் கர்ம உதயத்தினுலாகும் பத்து வித மாகிய திரவியபாவ பிராண ரூபமாகிய ஜீவ ஸ்வபாவமில்லையாகிச் சுத்த சைதன்ய சுத்த பிராண ஸ்வபாவமுண்டோ அந்த ஜீவர்கள் ஸித்த ஜீவர்களாவார்கள். அந்த ஸித்த ஜீவர் கள் சரீரத்தின் நீங்கினவர்களாகியும் அந்திய சரீரத்தில் சிறிது குறைந்த பிரமாணமாகிய சுத்தப் பிரதேசங்களை யுடையவர்களும், வச னங்களினுல் சொல்ல வியலாத அனந்த குணுதாரமாகிய மஹிமா ஸ்வபாவங்களையு முடையவர்களுமாவார்கள். அவர்கள் ஒருக் காலும் மறுபடியும் எக்காரணத்தினுலும் சம் ஸாரத்தில் பிறக்கமாட்டார்கள். ஆதலால் அவர்கள் சம்ஸாரத்திற்குக் காரியமுமல்லர்; எப்பொழுதும் எக்காரணத்தினுலும் சம்ஸா ரத்தைச் சிறிதாகிலும் செய்யப்பட்டவரு மல் லர். ஆதலால் அவர்கள் சம்ஸாரத்திற்குக் காரணமும் ஆகார்.

மோக்ஷத்தின்கண் ஸித்தாத்மன் திரவி யார்த்திக நயத்தினுல் நித்தியனும் பரியா யார்த்திக நயத்தினுல் அநித்தியனும் க்ஷாயிக பாரிணுமிக பாவங்களுள் பரிணமித்தானுத

லால் பவ்வியனும் முன் கெட்ட ஔதயிகம் முதலான பரிணமங்களுள் பரிணமித்ததால் அபவ்வியனும் அன்னியத் திரவிய க்ஷேத்திர காலபாவங்களினால் நீங்கினன் ஆதலால்சூன் யனும் தனது திரவிய க்ஷேத்திர கால பாவங் களினால் நிறைந்தவனாதலால் அசூன்யனும் கேவல ஞானத்தினால் லோகா லோகங்களை அறிவானாதலால் விஞ்ஞானியும் மதிஞானம் முதலிய க்ஷாயோபசமிக ஞானங்களால் அறி யாதவனாகையால் அவிஞ்ஞானியும் என்கிற இந்த எட்டுக் குணங்களும் முக்தியுள் ஸித் தர்க்கு அஸ்தித்வ மில்லையாகில் கூடாமற் போகும். ஸித்தர்களுக்கு இந்த எட்டுக்குணங் களுமுண்டாகையால் அவ்விடத்து ஸத் பாவம் சந்தேஹ மில்லாமல் உண்டென்று அறியவும்.

புத்தமதாவலம்பிகள் பரியாய ரூபத்தி னால் பதார்த்தங்களின் விநாசத்தினைக் கண்டு அதிவியாப்தியினால் திரவிய ரூபத்தினாலும் விநாசத்தையுடைய தென்று கருதுகின்றார் கள். அப்படியே இந்திரியம் முதலிய புத் கலப் பிராணன்களோடு கூடிய அசுத்த ஜீவ ஸ்வபாவம் விநாசமாவதைக் கண்டு மோக்ஷத் திலும் கேவல ஞானம் முதலிய அனந்த

குணங்களோடு கூடிய சுத்த ஜீவஸ்வ பாவ மும் விநாசத்தினையுடைய தென்று கருது கின்றவர்களாகின்றனர். அதற்பின் சேதனை யைப் பற்றிச் சொல்லு மிடத்தில் ஒருவகை ஜீவஸமூஹங்கள் கர்மபல சேதனையினை அனு பவிக்கும். மற்றொருவகை ஜீவ ஸமூஹங்கள் காரியத்தோடு கூடின கர்மசேதனை யினை அனுபவிக்கும். மற்றொரு வகை ஜீவராசி சுத்த கேவல ஞானசேதனை யினை அனுபவிக் கும். இவ்விதமாகிய மூன்று சேதனைகளில் ஜீவன்கள் பிரவர்த்திக்கும்.

கர்மோதயத்தினு லேற்பட்டவைகளும் அசுத்தாத்ம ஸம் பந்திகளு மாதலால் முதலி ரண்டு சேதனைகள் அசுத்தங்கள். கர்மக்ஷயம் செய்த பரமாத்மனது ஸம்பந்தியாதலால் ஞான சேதனை பரமசுத்த மாகும். அவைக ளுள் எல்லா ஸ்தாவர காய ஜீவன்களும் கர்ம பல சேதனையினை அனுபவிக்கப் பட்டன வாம். எல்லாத் திரஸகாய ஜீவன்களும் செல்வதும் நிற்றலுமாகிய காரியத்தோடு கூடின கர்ம பலானுபவ ரூபமாகிய காரிய சேதனையினை அனுபவிப்பன. பத்துவித மான புத்கலப் பிராண ரூபமாகிய அசுத்த ஜீவஸ்வபாவத்தினின்றும் நீங்கின சுத்தாத்

மர்கள் அதாவது ஸித்த ஜீவர்கள் ஞான சேதனையினையே அனுபவிப்பார்கள்.

சீதம் உஷ்ணம் முதலியவைகளினால் பீடிக்கப்பட்டாலும் இருந்த இடத்தைவிட்டுச் செல்லமுடியாத பிரத்வி அப்பு தேயு வாத வனஸ்பதி யென்னும் ஐந்துவகை ஸ்தாவர காய ஜீவன்களும் அவ்வியக்தமான சுகதுக்கானுபவ ரூபமாகிய சுப அசுபகர்மங்களின் பலனை மாத்திரம் அனுபவிக்கக் கூடியவை யாம். த்வீந்திரியம் முதலாகிய த்ரஸ காய ஜீவன்கள் அந்தக் கர்மங்களின் பலத்தினை விசேஷமாகிய ஆசை கோபம் முதலிய காரிய சேதனையோடு கூடி அனுபவிப்பன வாம். ஸித்த ஜீவர்கள், பத்துவித புத்கல மயமாகிய பிராணன்களினின்றும் நீங்கிக் கேவலஞான சேதனையினை அனுபவிப்பார்கள்.

இனி, உபயோகஸ்வரூபம் எப்பெற்றியதெனில், ஆத்மனுடைய சைதன்ய சம்பந்தமான விசேஷ பரிணமங்கள் உபயோகமென்பது. அதுவிசேஷமாக அறிவதாகிய ஞானோபயோகமென்றும், பொதுவாகக் காண்பதாகிய தரிசனோபயோகமென்றும் இரண்டு விதமாம். அந்த உபயோகம், ஜீவனிடத்தினின்றும்

எக்காலத்தும் வேறில்லாததென்று அறிய வும். அந்த ஞானோபயோகமானது மதி ஞானம் சுருதஞானம் அவதிஞானம் மனப் பரியயஞானம் கேவலஞானம் என ஸம்மியக் ஞானங்கள் ஐந்து பேதங்களும், குமதி ஞானம் குஸ்ருத ஞானம் விபங்க ஞானம் என்று மித்தியா ஞானங்கள் மூன்று பேதங் களுமாகும்.

சூரிய பிம்பம் ஒரே தன்மையை யுடைய தானாலும் மேகங்கள் மறைக்கின்ற வசத்தி னால், அதனுடைய ஒளி பல பேதங்களாகக் காணப்படுவதுபோல நிச்சய நயத்தினால் ஆத்மாவும் லோகாலோகம் முழுமையும் ஒரே சமயத்தி லறியக்கூடிய ஒப்பற்ற ஸ்வ ரூபத்தை யுடையதாயினும் வியவஹார நயத்தினால் கர்ம படலங்களினால் சூழப்பட்ட தாகி, மதிஞானம் முதலிய பல பேதமாகிய ஞானங்களை யடைகின்றது. ஸம்மியக் தரிச னத்தோடு கூடிய மதி சுருத அவதிகள் ஸம்மியக் ஞானங்களாவன. அவையே மித்தியா தரிசனத்துடன் கூடி குமதி குஸ் ருத விபங்கங்களென்னும் பெயரினால் அஞ் ஞானங்களாம். மனப்பரியய கேவல ஞானங் கள் ஸம்மியக் திரஷ்டிக்கன்றி பிறவாதாத லால் ஸம்மியக் ஞானங்களே.

இவ்வண்ணம் ஸம்மியக் ஞானங்கள் ஐந்துவிதமும் அஞ்ஞானங்கள் மூன்றுவிதமும் ஆக ஞானோபயோகம் எட்டுப் பிரகாரமாகும். இவற்றுள் மூன்று விதமாகிய அஞ்ஞானங்கள் எப்பிரகாரத்தாலும் நீக்கத்தகுந்தவையாம். ஸம்மியக் ஞானங்களுள்ளும் க்ஷாயோபசமிக ஞானங்களாகிய மதி சுருத அவதி மனப்பரியய மென்னும் நான்கு ஞானங்களும் வியவஹார நயத்தினுல் ஸ்வீகரிக்கத் தக்கவையாம்.

கேவல ஞான மொன்றே பலமாகியதும் க்ஷாயிக ரூபமுமாகையினுல் வஸ்துத் தன்மையினுல் முக்கியமாய் ஸ்வீகரிக்கத், தகுந்ததாம். ஆத்மா நிச்சய நயத்தினுல் ஒப்பற்ற ஏகமாகிய விசுத்த ஞான மயமானதாகும். வியவஹார நயத்தினுல் ஸம்ஸாராவஸ்தையில் கர்மங்களினுல் சூழப்பட்டதாகி, ஒருக்கால் மதி ஞானுவரணீய கர்மம் க்ஷயோபசமத்தை யடைந்துள்ளளவில் ஐந்து இந்திரியங்களினுலும் மனத்தினுலும் மூர்த்த அமூர்த்த வஸ்துக்களை விகல்ப ரூபத்தினுலறிகின்ற அறிவானது மதிஞானம் என்பதாகும். அதுவும் உபலப்தி பாவனை உபயோக மென்று மூன்று விதமாம்.

வஸ்துக்களின் தன்மையை முதலில் அறிவினுல் கிரஹிக்கும் சக்தி உபலப்தி யெனப்படும். அதைப் பற்றி ஆலோசிப்பது பாவனே. இது நீலம் இது மஞ்சள் என்றிவை முதலாக நிச்சயிக்கின்ற அர்த்தக் கிரஹண வியாபாரம் உபயோக மெனப்படும். அவ்வண்ணமே மற்றும், அவக்கிரஹ ஈஹா ஆவாய தாரணே யென்னும் பேதங்களினுலும் கோஷ்ட புத்தி பீஜபுத்தி பதானு ஸாரி ஸம்பின்னஸ்ரோத்ரத்வம் என்னும் பேதங்களினுலுந் தான் நாலுவித மாகும். அங்ஙன மாகிய இந்த மதிஞானம் ஸத்தாவலோகன தரிசன பூர்வகமாக ஆகுமென்று அறியவும்.

அவக்கிரஹம் முதலிய நான்கு பேதங்களினின்றும் ஏற்படும் விசேஷத்தினுல் முந்நூற்று முப்பத்தாறு பேதங்களுமாகும். எப்படியெனில், வஸ்துக்களின் பொதுவாகிய தன்மையினேஇந்திரியங்களின் மூலமாக ஸ்வீகரிக்கும் சக்தியாகிய அவக்கிரஹம் அர்த்தாவக்கிரஹ மென்றும், வியஞ்ஜனுவக்கிரஹ மென்றும் இரண்டு விதமாகும். அவற்றுள் வியஞ்ஜனுவக்கிரஹ மென்பது ஸ்பரிச ரஸ கிராண சக்ஷு ஸ்ரோத்திரம் மனம் என்னும் ஆறு இந்திரியங்களில் ஸ்பரிச ரஸ கிராண

ஸ்ரோத்திரம் என்னும் நான்கு இந்திரியங்க ளுக்கு மாத்திரம் ஏற்படுமே தவிர சக்ஷு மனம் என்கிற இரண்டிற்கும் இல்லை. அர்த் தாவக் கிரஹமென்பது ஆறு இந்திரியங் களுக்கு மாகும்.

இவ்விதமாக அவக்கிரஹம் இந்திரியங் களின் மூலங்களினுல் பத்துவித மாயிற்று. அவற்றுள் வியஞ்ஜனு வக்கிரஹத்திற்கு ஈஹா ஆவாய தாரணைகள் கிடையாதாகை யால் நான்கு இந்திரியங்களின் மூலத்தினுல் பஹு பஹுவிதம் ஏகம் ஏகவிதம் சீக்கிரம் தாமதம் ஏகதேசம் சகலம் சொன்னவை சொல்லாதவை துருவம் அத்துருவம் என்று பன்னிரண்டு விதமாகிய விஷயங்களை அவக் கிரஹம் செய்வதால் வியஞ்ஜனுவக்கிரஹம் நாற்பத்தெட்டு பேதமாயிற்று. அர்த்தாவக்கிர ஹம், ஈஹை ஆவாய தாரணைகளோடு கூடி ஆறு இந்திரியங்களுக்கும் இருபத்து நான்கு விதமாயிற்று.

முன் சொன்ன பன்னிரண்டு பேதமாகிய விஷயங்களிற் பெருக்க இருநூற் றெண் பத்தெட்டு பேதமாயிற்று. இவை இரண் டையும் கூட்ட மதி ஞானம் முந்நூற்று முப் பத்தாறு பேதமாகின்றது. அவக்கிரஹமென்

பது, ஸாமான்யமாய்க் கிரஹிக்கும் சக்தி. ஈஹா என்பது, அப்படி ஸாமான்யமாய்க் கிரஹிக்கப்பட்ட அர்த்தத்தை இது ஆணோ பெண்ணோ கறுப்போ சிவப்போ என்று வேறுபடப் பிரிக்கும் சக்தி. ஆவாயமென்பது இது கறுப்புதான் அல்லது சிவப்புதான் என்று உறுதி செய்கின்ற நிச்சயசக்தி. தாரணை என்பது அப்பொருளைப்பற்றி மறவாததாகும்.

அனந்தரம் சுருத ஞானம் எதுபற்றியதெனில் ? சுருதஞானவரணீய கர்மத்தின் க்ஷயோபசமத்தினால் உண்டாகக் கூடிய சுருதஞானம் லப்தியும் பாவனையும் வஸ்துக்களின் சகல அம்சங்களையு மறிகின்ற உபயோகமும் ஏகதேசத்தை யறிகின்ற நயமும் என்று நாலுவிதமாகும். அர்த்தங்களை ஸ்வீகரிக்கும் சக்தி லப்தியாம். அப்படி லப்தமான அர்த்தத்தினை உத்தர ஞானோத்பத்தி நிமித்தமாகப் பாவிப்பது பாவனையாம். அந்தப் பாவனையினால் அர்த்தங்களின் சகல அம்சங்களையும் அறிவது உபயோகமாம். அங்ஙனமாகிய அர்த்தங்களினுடைய நித்தியத்துவம் அநித்தியத்துவம் முதலிய அம்சங்களை அந்தந்த தர்மியேயாக எண்ணுவது

நயமென்பதாகும். ஜீவத்திரவியம் முதலிய திரவியங்களின் திரவிய ஸ்வபாவத்தைப் பற்றிய அபிப்ராயம் திரவியார்த்திகநயம். பரியாய ஸ்வபாவங்களைப்பற்றிய அபிப்ராயம் பரியாயார்த்திக நயம்.

ஆகமத்தில் சொல்லப்படுகிற நைகம ஸங்கிரஹ வியவஹார நயங்கள் திரவியார்த்திக நயத்தினுடைய விகல்பங்கள் ருஜு ஸூத்திர சப்த ஸமபீரூட ஏவம் பூதங்கள் பரியாயார்த்திக நயத்தினுடைய பேதங்கள். அவற்றுள் ருஜு ஸூத்திரம் அர்த்தநயம் ஒழிந்த மூன்று நயங்களும் ஆகம பாஷையினுலாகிய சப்த நயங்கள். அத்தியாத்ம பாஷையினுல் திரவியார்த்திக நயத்தினுக்கு நிச்சய நயம் என்று பெயர். பரியாயார்த்திக நயத்தினுக்கு வியவஹார நயமென்பதுபெயராம். அவற்றுள் நிச்சயநயம், சுத்த நிச்சயநயம் அசுத்த நிச்சயநயம் என இரண்டு விதமாகும். அவற்றுள் பொதிந்தும் மூடிந்தும் அவிழ்த்தும் வைத்த சமான வர்ணமும் விலையுமுள்ள மாணிக்கங்கள் அவைகளின் ஸ்வரூப மறிந்தவனுக்குச் சமானமாகின்றதுபோல சம்ஸார முக்த ஜீவன்களும் அவைகளின் ஸ்வரூபநிச்சயத்

தினை யறிந்த ஞானிக்கு ஞானம் முதலிய ஸர்வதர்மங்களால் ஸமானங்களேயென்னும் நிச்சயமான அபிப்ராயம் சுத்த நிச்சய நய மென்பதாகும்.

ஆத்மனுக்குக் கர்மங்களின் சேர்க்கை யினுலேற்பட்ட ஆசை முதலிய விபாவ பரிணமங்கள் ஆத்மனுடைய தென்னும் அபிப்ராயம் அசுத்த நிச்சயநயம். வியவஹார நயம் ஸத்பூத அஸத்பூத ரூபத்தினுல் இரு விதமாம். அவற்றுள் ஸத்திய ஸ்வரூபங்க ளைப் பேதப்பிரதானத்தாற்சொல்வது ஸத்பூத வியவஹார நயமாம். அஸத்திய ஸ்வ ரூபங்களாகிய பேதத் தன்மையினை வஸ்து விற்கு உண்டென்கிற அபிப்ராயம் அஸத் பூத வியவஹார நயமாகும். அவற்றுள் உப சரித அனுபசரித பேதத்தினுல் அந்த ஸத் பூத அஸத்பூத வியவஹார நயங்கள் ஒவ் வொன்றும் இரண்டு விதமாகும். அவற்றுள் மதிஞானம் முதலிய க்ஷாயோபசமிக தர்மங் கள் ஆத்மனுடைய ஸ்வரூப மென்னும் அபிப்ராயம் உபசரித ஸத்பூத வியவஹார நயமாம். கேவல ஞானம் முதலிய க்ஷாயிக தர்மங்கள் ஆத்மனுடைய தென்னும் அபிப் ராயம் அனுபசரித ஸத்பூத வியவஹார நய

மாம். கர்மங்களின் உதயங்களினுல் ஏற்பட்டு வர்த்திக்கின்ற காலத்தில் பிரித்தற்கு இயலாத சரீரம் ஆத்மனுடையதென்பதிது முதலான அபிப்ராயம் அனுபசரித அஸத்பூத வியவ ஹார நயம். கர்மங்களின் உதயத்தினுல் ஏற் பட்டவைகளாகி வர்த்திக்கின்ற காலத்தில் பிரிந்து நீங்கிவிடக்கூடிய தன்மையினவாகிய தனதானிய புத்திரமித்திர களத்திரம் முத லானவை ஆத்மனுடையவை யென்னும் அபிப்ராயம் உபசரித அஸத்பூத வியவஹார நயமாம்.

இவ்விதமாக அத்தியாத்மபாஷையினுல் நயங்கள் ஆறுவிதமாகும். அதற்பின் அவதி ஞாணவரணீயகர்ம க்ஷயோப சமத்தால் ஜீவன்களுக்கு உண்டாகக் கூடியதும், மூர்த்த வஸ்துக்களைப் பிரத்தியக்ஷமாக அறியக் கூடியதுமாகிய அவதி ஞானம் தேசாவதி பரமாவதி ஸர்வாவதி என மூன்று விதமாம். அந்த மூன்றுவிதமான அவதிஞானங்களும் ஸம்மியக்த்துவ ஸம்யமம் முதலிய குண விசேஷங்களின் நிமித்தமாக உண்டாவன வாகும்.

தேசாவதி ஒன்றும் தேவநாரகர்களுக்கு பவத்தினை நிமித்தமாகவே உண்டாகும்.

மனுஷ்ய ஜீவன்களுக்கும் திரியக்ஜீவன்களுக்கும் குணத்தினை நிமித்தமாக உண்டாகும். அதாவது தேவ நாரகர்களுக்குப் பவப்பிரத்தியயமும் மனுஷ்ய திரியக்குகளுக்குக் குணப்பிரத்தியயமுமாகித் தேசாவதி உண்டாவதாகும். அவற்றுள் குணப் பிரத்தியயமாகிய தேசாவதி அனுகாமி அனனுகாமி வர்த்தமானம் ஹீயமானம் அவஸ்திதம் அனவஸ்திதம் என ஆறுவிதம்.

அவற்றுள் அனுகாமி யென்பது, ஒரு பவத்தி லுண்டானதாகிப் பவாந்தரங்களுக்கும், ஒரு க்ஷேத்திரத்திலுண்டானதாகி மற்ற க்ஷேத்திரங்களிலும் செல்லும் சக்தியுடையதாகும். அனனுகாமி யென்பது, ஒருபவத்திலுண்டாகியது மற்றபவங்களிலும் ஒருக்ஷேத்திரத்திலுண்டானது மற்ற க்ஷேத்திரங்களுக்கும் செல்லும் சக்தியில்லாததாகும். வர்த்தமான மென்பது தோன்றியதுமுதல் பூர்வ பக்ஷ சந்திரகலைகள்போல் விருத்தி யாவதாகும். ஹீயமான மென்பது அபரபக்ஷத்து சந்திர கலைபோலத் தோன்றியதில் குறைந்து போவதாகும். அவஸ்திதமென்பது கேவல ஞானம் அடையும்வரை நிலையாக நிற்பதாகும். அனவஸ்திதமென்பது இடையிடை நீங்கிவிடுவதாகும்.

பரமாவதி ஸர்வாவதிகள் குணப்பிரத்தியயங்களேயாகியும் சரம சரீரத்தினேயுடைய ஸம்யதர்க்கே அதாவது அந்தப் பவத்திலேயே முக்தியினேயடையும் முனிவர்களுக்கே உண்டாகும். தேசாவதி ஞானத்திற்கு அந்த நியமமில்லை. அனந்தரம் மனப்பரியயஞானம் ருஜுமதி மனப்பரியய மென்றும் விபுலமதி மனப் பரியயமென்றும் இருவித மாகும். இவை ஸம்மியக்த்துவ ஸம்யம குண விசேஷத்தினு லுண்டாகுமாகையால் அப்பிரமத்தஸம்யதனுடைய பரிணும விசேஷத்தில் உண்டாவதாகும். மன வசன காயங்களுடைய ருஜுத்வத்தினே அபேக்ஷித்துப் பிறருடைய மனதில் வர்த்திக்கப்பட்ட அர்த்தங்களே அறிவது ருஜுமதி மனப்பரியய மென்பதாகும்.

அந்த மூன்றினுடைய ருஜுத்தன்மையையும் வக்கிரத் தன்மையையும் அபேஷித்துப் பிறருடைய மனதிலுண்டாகிய கருத்தினே அறிவது விபுல மதி மனப்பரியய மாகும். இவற்றுள் விபுலமதி ஞானம் சரம தேஹத்தினேயுடைய ஸம்யதர்களுக்கே உண்டாகும். அதற்பின் சகல ஞானங்களுக்கும் ஸாரமானதும் ஞானுவரணீயம் தரிசனுவரணீயம் மோஹனீயம் அந்தராயம் என்னும் காதி

கர்மங்களின் விநாசத்தினுல் உண்டானதும் அனந்தசுகம் முதலிய அனந்த குணங்களில் வேறில்லாததும் யதிவரர்கள் முதலிய பவ்விய ஜீவர்களினுல் பிரார்த்திக்கப்படுவதும் சமஸ்த தேவேந்திரர்கள் முதலிய தேவர்களின் மனதிற்கு ஆனந்தத்தை உண்டுபண்ணப்படுவதும் ஆத்மஸ்வரூபத்தில் வேறில்லாததுமாகிய கேவல ஞானத்தினுடைய தன்மை எப்படிப்பட்டதென்ருல்? கேவல ஞானமென்னும் ஞானம் அறியக்கூடிய வஸ்துக்களை (ஆஸ்ரயித்து) அடைந்து உண்டானதல்ல. சுருதத்தினுலறிதலாகிய சுருத ஞானமுமாகாது. ஆதலால் அஸஹாயமாகிய ஞானமாகும். அங்ஙனமாகிய கேவலஞானத்தையுடைய கேவலிக்குப் பலவிதமாகிய ஞானங்களும் பலவிதமாகிய அஞ்ஞானங்களுமில்லையாம். அர்த்தங்களை ஆஸ்ரயித்து இதர ஞானங்களுண்டாகும்.

சாஸ்திர மூலமாக அறியும் சுருத ஞானம் வஸ்துக்களை அவலம்பித்து உண்டாகாதாகிலும் அதுவும் பரோக்ஷஞானமே. கேவல ஞானம் ஞானத்தை மறைப்பதாகிய ஞானுவரணீயம் முதலிய காதி கர்மங்களின் விநாசத்தினுல் உண்டானதாகையால் அத

னிடத்து இதர ஞானங்கள் சூனியமாகும். அதற்பின் மூன்று விதமாகிய அஞ்ஞானங்கள் எத்தன்மையனவென்றால் தத்வார்த்த ஷ்ரத்தான லக்ஷணமாகிய சுத்த ஸம்மியக்த்வத்தினை மறைக்கும் ஸ்வபாவத்தினையுடைய மித்தியாத்துவத்தினுடைய உதயத்தினின்றும் அஞ்ஞானமாகும். அவிரத பரிணாமமுமாகும். அவ்வண்ணமே உபலப்தமாகிய வஸ்துக்களைக் குறித்து ஜீவத்திரவியம் முதலிய தத்துவ விசாரகாலத்து அந்த மித்தியாத்துவத்தினால் மயங்கி ஸுநயம் துர்நயமாகவும் ஸுப்பிரமாணம் துஷ்ப்பிரமாணமாகவும் ஆகும்.

குமதி குஸ்ருத ஞானங்கள் அனாதி மித்தியாத்திரஷ்டி பக்கல் மித்தியாத்துவத்தினுடைய உதயம் அனாதியாகையால் அனாதி அஞ்ஞானங்களாகும். ஸம்மியக் திரஷ்டி பக்கல் மித்தியாத்துவத்தினுடைய உதயமானவிடத்து மதி சுருதங்களே பேய்ச்சுரையுள் வார்த்த பால் (கைப்பேறினாற்போல) கசப்படைந்தது போல குமதி குஸ்ருதங்கள் என்னும் பெயரினால் ஸ்யாத் அஞ்ஞானங்களுமாகும். விபங்கஞானம் மித்தியாத்திரஷ்டி பக்கல் பரியாப்தி நிறைந்ததும் யோக்கிய

தானுஸாரத்தினுல் பிறக்கும். ஸம்மியக் திரஷ்டிபக்கல் உண்டாகிய அவதிஞானம் மித்தியாத்துவத்தி னுடைய உதயமான விடத்து விபரீதமாகப் பரிணமித்து விபங்க ஞானமென்பதாம். இங்ஙனமாகிய இந்த மூன்று அஞ்ஞானங்களும் நீக்கத்தகுந் தவைகளாகுமென்று அறியவும்.

ஜீவத்திரவியம் முதலிய திரவியங்களி னுடைய பொதுவாகிய தன்மையினைக் காண் பது தரிசனமாகும். அப்படி ஸ்வீகரித்த வஸ்துக்களின் விசேஷங்களைப் பற்றி அறி வது ஞானமாகும். இவ்வண்ணம் தரிசன ஞானங்களுக்கு ஸாமான்ய விசேஷங்கள் கேவல ஞானத்தை யடையும்வரையில் கிரமத் தினுல் விஷயங்களாகும். கேவலிக்குத் தரிசன ஞானங்கள் ஒருங்கே விஷயமாகும். தரிசனே பயோகம் சக்ஷுதரிசனம் அசக்ஷுதரிசனம் அவதிதரிசனம் கேவலதரிசனம் என நான்கு விதமாகும். அவற்றுள், நிச்சயநயத்தினுல் ஆத்மா ஒப்பற்றதாகிய அனந்த தரிசன ஸ்வ பாவத்தையுடையதாயினும், வியவஹார நயத் தினுல் ஸம்ஸாரவஸ்தையில் நிர்மலமாகிய சுத்தாத்மானுபவமில்லாததனுல் சம்பாதிக் கப்பட்ட கர்மத்தினுல் மறைக்கப்பட்டதாகி

யாதொரு காலத்தில் சக்ஷுதரிசனுவரணீய கர்மம் க்ஷயோபசமத்தை அடைந்ததாயின் அப்பொழுது பஹிரங்கமாகிய திரவிய நேத்திரேந்திரியத்தினை அடைந்து அதன் மூலமாக மூர்த்த வஸ்துக்களைப் பொதுவாகக் காண்பது சக்ஷுதரிசனமென்பது.

அவ்விதமாகவே மற்ற இந்திரியங்களினுடையவும் மனோ இந்திரியத்தினுடையவுமாகிய ஆவரணீய கர்மங்கள் க்ஷயோபசமமானவிடத்து இதர திரவியேந்திரியங்களின் மூலமாகவும் திரவியமனதின் மூலமாகவும் மூர்த்த அமூர்த்த வஸ்துக்களைப் பொதுவாகக் காண்பது அசக்ஷுதரிசனமாகும் அவதிதரிசனுவரணீயகர்மம் க்ஷயோபசமத்தை யடைந்துள்ளளவில் மூர்த்த வஸ்துக்களைப் பொதுவாகப் பிரத்தியக்ஷமாய்க் காண்பது அவதி தரிசன மென்பதாகும். கேவலதரிசனு வரணீய கர்மத்தின் க்ஷயத்தினுல் மூவுலகத்திலும் வர்த்திக்கப்பட்டசமஸ்த வஸ்துக்களையும் ஒரே ஸமயத்தில் காணக் கூடியது கேவலதரிசனமாகும். ஆத்மத்திரவியம் அங்ஙனமாகிய ஞான தரிசனமாகிய தனது குணங்களினின்றும் வசனம் முதலியவைகளினுல் கதஞ்சித்பேத முண்டாகிலும் பிரதேசத்தினுல் வேறில்லாததாகும்.

அந்த ஞான தரிசனங்கள் மதி சுருதம் முதலிய பேதங்களினுல் அநேகவிதமாகும். அந்தக் குணங்கள் பலவிதமான தன்மையினுல், அந்தக் குணங்களையுடைய திரவியத்திற்கும் பலவிதம் அவிரோதமாகையினுல் திரவியம் பல ரூபங்களை யுடையதென்று ஞானிகளால் சொல்லப்பட்டது. ஆகையால் ஆத்மனிடத்தினின்றும் ஞானங்கள் எப்பிரகாரத்தாலும் வேருனவையல்லவென்று அறியவும். அதன் பிறகு, திரவியம் குணங்களினின்றும் பின்னமாகில் திரவியங்கள் அனந்தமாகும். திரவியத்தினின்றும் குணங்களும் பின்னமாகில் திரவியத்தின் (அபாவமாகும்) இல்லாமையாகும். வசனம் முதலியவைகளினுலும் திரவிய குணங்களுக்கு வேறில்லாத தன்மையினையும் பிரதேசத்தினுல் வேருன தன்மையினையும் ஜைனர்கள் எண்ணுர்கள். பின்னை ஜைனர்களுடைய கருத்தென்னவெனில்? திரவிய குணங்களுக்குப் பிரதேசங்களினுல் வேறில்லாததும் வசனம் முதலியவைகளினுல் வேருனதுமாகிய கதஞ்சித் அபேத பேதங்களையுடைத்தென்று கருதுவர்.

திரவியகுணங்களுக்கு ஏகாந்தத்தினுல் பேதமில்லையாகில் வசனம் முதலியவை

களிஞலேற்படுகின்ற பேதம் எங்ஙனம் கூடு மெனில்? வசனம் அடையாளம் ஸங்கியை விஷயம் என்கிற இவைகள் பின்ன அபின்ன வஸ்துக்களுள்ளும் கூடுவனவாம். எப்படி யென்ருல்? தேவதத்தனுடைய பசு, தேவதத்த னுடைய பெரிய பசு, தேவதத்தனுடைய பத் துப்பசுக்கள் என்கிறஇந்தவசனங்கள் பின்ன வஸ்துக்களை அபின்னமாகக்குறித்தன. அவ் விதமாகவே விருக்ஷத்தினுடைய கிளைகள் ஜீவனுடைய அனந்த ஞானம் முதலிய குணங்கள் பெரிய மரத்தினுடைய பெரிய கிளைகள் மூர்த்தத் திரவியத்தினுடைய மூர்த்த குணங்கள் மரத்தினுடைய பத்துக்கிளைகள் திரவியத்தினுடைய அனந்த குணங்கள் இன்ன மரத்தினுடைய இன்ன கிளைகள் இன்ன திரவியத்தினுடைய இன்ன குணங் கள் என்கிற வசனங்கள் அபின்ன வஸ்து வின் விஷயங்களை பின்னமாகக் குறிக்கின்றன வாம்.

ஆதலால் அந்த வசனம் அடையாளம் முதலியன திரவியகுணங்களுக்கு எப்பிரகாரத் தாலும் ஏகாந்தமாக பேதத்தினை சாதிக்க மாட்டா. மற்றும் ஞானமும் தனமும் ஆகியவை முறையே அவற்றையுடைய புரு

ஷனை ஞானியென்றும் தனிகனென்றும் சொல்லும்படி செய்கின்றன. பின்னவஸ்து வாகிய தனமும் அபின்ன வஸ்துவாகிய ஞானமும் தனிகனென்றும் ஞானியென்றும் சொல்லச் செய்கிறது போலவே, பின்ன வஸ்துக்களுள்ளும் அபின்ன வஸ்துக்க ளுள்ளும் வசனம் அடையாளம் ஸங்கியை விஷயம் முதலியவற்றால் பேத அபேதங்கள் கூடுகின்றன. ஞானியாகிய ஜீவன் ஞான மாகிற குணத்தினின்றும் எப்பிரகாரத்தாலும் வேறுமாகில் அவ்விரண்டும் அசேதனத்தை யடையும். எப்படியெனில் ஆத்மன் ஞான மாகிற குணத்தினின்றும் நீங்கிய விடத்து அசேதனமாம்.

ஞானமும் ஆத்மாஸ்ரயமின்றி அசே தனமாம். அங்ஙனமாகில் அந்த மதம் ஜின மத ஸம்மதமல்ல. மற்றும் அந்த ஜீவனுக்கு ஞானம் முதலிய குணங்கள் வேறனவையா யிருந்து ஸமவாய ஸம்பந்தத்தினாற் கூடிற் றென்பதும் பொருந்தாது. எங்ஙனமெனில் ஞானஸமவாயம் ஆத்மனையடையாத முன் ஆத்மன் ஞானியோ அஞ்ஞானியோ, ஞானி யாகில் ஞான ஸமவாயத்தினால் பிரயோஜன மொன்றுமில்லை. அஞ்ஞானியாகில், அது

ஸமவாய ஸம்பந்தமோ? ஸ்வபாவத்தினு லுண்டானதோ? ஸமவாய ஸம்பந்தமாகில் மற்றுமொரு ஸமவாயம் ஆகாதாகையால் அவ்விடத்து ஞான ஸமவாயம் ஸம்ப வியாது. ஸ்வபாவத்தினுல் அஞ்ஞானியா கில் அவ்வண்ணமே ஞானமும் ஸ்வபாவ மாகக்கூடும். ஆகையால் ஆத்மனுக்கு ஞானம் முதலிய குணங்கள் ஸமவாய ஸம்பந்தமல்ல. குணமும் குணத்தையுடைய வஸ்துவும் கதஞ் சித் ஏகத்வத்தினுல் அனுதி தாதாத்மிய ஸம் பந்தத்தினை யுடையவாம். அதையே ஜைன மதத்தில் ஸமவாயமென்று சொல்லப்படும்.

அந்தக் குணத்திற்கும் அதனையுடைய வஸ்துவிற்கும் வசனம் லக்ஷணம் பிரயோ ஜனம் முதலியவற்றுல் பேதமாகிலும் பிர தேசபேதமில்லையாகையால் அபின்னமென்று சொல்லப்படும். ஆதலின் திரவிய குணங் களுக்கு அயுத ஸித்தியென்று சொல்லப் படும். பரமாணு திரவியத்தினிடத்தில் வர் ணம் முதலிய குணங்களுக்கு நிச்சய நயத் தினுல் பிரதேச பேதமில்லாததனுல் வேறில் லாததாகும். வியவஹார நயத்தினுல் வசனம் முதலியவைகளினுல் பேதங்களாம். அவ்வண் ணமே ஜீவனுடைய குணங்களாகிற ஞான

தரிசனங்களும் வியவஹார நயத்தினுல் வசனம் முதலியவற்றினுல் பேதங்களாகிலும் நிச்சய நயத்தினுல் பிரதேசபேதமில்லையாகையால் ஜீவனிடத்து வேறில்லாதவைகளேயாம்.

இவ்வண்ணமாகிய ஜீவன்கள் சுத்த பரம பாரிணுமிக பாவ ஸ்வீகாரத்தால் சுத்த திரவியார்த்திக நயத்தினுல் அனுதியாக என்றும் நாசமில்லாததும் உதய உபசம க்ஷயோபசம பாவா பேக்ஷையினுல் கதஞ்சித் விநாசத்துடன் கூடியதும் க்ஷாயிக பாவா பேக்ஷையினுல் முடிவில்லாததும் ஆகும். நிச்சய நயாபிப்பிராயத்தால் சுத்தமாகிய பாரிணுமிக பாவமாகிய ஒரே தன்மையையுடையவையாயினும் வியவஹார நயத்தினுல் அனுதியாகக் கர்ம பந்த வசத்தினுல் உதய உபசம க்ஷயோபசமம் முதலிய பாவங்களையு மடைவதால் ஐந்துவிதமான பாவங்களையுடையவையாகின்றன.

அங்ஙனமாகிய ஜீவன்கள் ஸங்கியையினுல் அனந்தமாவன. இவ்விதமாக ஜீவத் திரவியங்கள் பரியாயார்த்திக நயத்தினுலும், உதயபாவா பேக்ஷையினுலும் உத்பத்தி விநாசங்களை யுடையவை ஆகின்றன வென்று சொல்லுமிடத்துத் திரவிய பீடிகை அத்தி

யாயத்தில் ஜீவத்திரவியத்திற்கு உத்பத்தி விநாசங்கள் இல்லையென்று சொன்னது திரவியார்த்திக நயத்தைப்பற்றி யாதலால் விரோதமாகாது. ஜீவனுக்கு உத்பத்தி விநாசங்கள் நாரக திரியக் மனுஷ்ய தேவ யென்னும் நாம கர்மப் பிரக்கிரதிகளினுல் ஆகின்றன. ஸமுத்திரம் ஸமுத்திர ஸ்வரூபத்தினுல் விநாசமில்லாதிருந்தும் அலைகளினுல் உத்பாத விநாசங்களை யுடையதுபோல ஜீவத்திரவியமும் திரவியார்த்திக நயத்தினுல் நித்தியமாயினும் பரியாயார்த்திக நயத்தினுல் நாமகர்மங்களின் உதயத்தினுல் உத்பத்தி விநாசங்களை யுடையதாகின்றது. கர்மங்களினுடைய உதயத்தினுலும் கர்மங்களினுடைய உபசமத்தினுலும் கர்மங்களுடைய க்ஷயோபசமத்தினுலும் கர்மங்களுடைய க்ஷயத்தினுலும் கர்மங்களுடைய நிரபேக்ஷமாகிய ஸ்வபாவத்தினுலும் கூடின முன்சொன்ன ஐந்து பிரகாரமாகிய ஜீவகுணங்களைப்பற்றிப் பலவாக ஆகம கிரந்தங்களுள் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றுள் கர்மங்களினுடைய உதயத்தினுலேற்படும் காரணத்தினுல் ஔதயிக பாவம் சம்ஸார காரணம். கர்மங்களுடைய உபசம க்ஷயோப

சமங்களால் ஏற்பட்ட ஜீவனுடைய ஔபச மிக க்ஷாயோபசமிகங்கள் பரம்பரையினுலும் கர்மங்களுடைய க்ஷயத்தினுலான க்ஷாயிக பாவம் பிரத்தியக்ஷத்தினுலும் மோக்ஷ கார ணங்களாம். பாரிணுமிக பாவம் நிஷ்கிரிய மாகையினுல் பந்த மோக்ஷத்திற்குக் காரண மல்ல. உதயத்தினை யடைந்த திரவிய கர்மங்களின் பலமாகிய சுக துக்கங்களை யனுபவிக்கின்ற சம்ஸார ஜீவன் உதய பாவம் முதலாகிய பரிணுமங்களைப் பண் ணும். அப்பரிணுமத்திற்கு அந்த ஜீவன் கர்த்தாவா மென்று பரமாகமத்தில் சொல்லப் பட்டது. ஆத்மனுக்கு உதய உப சம க்ஷயோப சம க்ஷாயிக மென்னும் பரிணுமங் கள் திரவிய கர்ம நிரபேக்ஷமாகக் கூடா தாகையினுல் அப்பரிணுமங்களுக்குத் திரவிய கர்மம் வியவஹார நயத்தினுல் காரணமாகும். பாரிணுமிக பாவம் ஸ்வாபாவிகமாகையினுல், கர்ம நிரபேக்ஷமாகும். உதய பரிணுமங்கள் ஆத்மனுக்குக் கேவலம் ஏகாந்தமாகக் கர்மங் களினுலேயே பண்ணப்பட்டதாகில் ஆத்மா கர்மங்களுக்கு எப்படி கர்த்தாவாகும்? ஆத்மா தனது பரிணுமத்தை விட்டு வேருென்றைச் சிறிதாகிலும் பண்ணுவதல்ல.

ஆதலால் அந்த உதய பரிணமங்களுக்குத் திரவிய கர்மம் நிமித்த காரணமாகும். அந்தத் திரவிய கர்மத்தினுக்கு உதய பரிணமங்கள் நிமித்தமாகும்; ஒன்றுக்கொன்று உபாதான கர்த்தாவாகாது. ஜீவனிடத்து உண்டாகும் ஆசை கோபம் முதலிய உதய பரிணமங் களுக்கு ஜீவனே உபாதான கர்த்தாவாகும். திரவிய கர்மங்களுக்குக் கர்மவர்க்கணயோக்கிய புத்கலத்திரவியம் உபாதான கர்த்தாவென்று அறியவும். ஆத்மா தன்னுடைய ஸ்வபாவத் திற்குக் கர்த்தாவாகும். புத்கல கர்மங்களுக்குக் கர்த்தா வல்ல வென்பது ஜினருடைய உப தேசமாகும். கர்மமும் தானே தன்னுடைய ஸ்வபாவத்தினுல் தன்னைத் திரவிய கர்ம ஸ்வ பாவமாகப் பண்ணும். அவ்விதமே ஆத்ம னும் தன்னுடைய பரிணமத்தினைத் தன்னுல் தனக்குத்தன்னின்றுமேபண்ணும்.வேருென் றினுல் ஆக்கப்பட்டதல்ல என்னுமிடத்தில் ஏகாந்தமாக ஆத்மனும் கர்மமும் தத்தம் மைப் பண்ணுமாகில் ஆத்மன் தான் பண் ணுத கர்ம பலத்தினை எவ்வண்ணம் அநுப விக்கும்? கர்மமும் தன்னுடைய பலமாகிய சுக துக்கங்களை ஆத்மனுக்கு எவ்வண்ணம் கொடுக்கு மென்ருல் உலகம் முழுமையும்

கர்ம வர்க்கணைகள் முதலாகிய ஸூக்ஷ்மமும் ஸ்தூலமுமாகிய புத்கல காயங்களினால் நிறைந்திருக்கின்றது.

அங்ஙனமாகிய கர்ம வர்க்கணைகளால் நிறைந்த லோகப் பிரதேசத்திலிருந்து ஆத்மன் தனது பரிணமத்தைப் பண்ணும். அவ்விடத்திருந்த கர்மவர்க்கணைகளாகிய புத்கலங்கள் கர்ம ஸ்வரூபத்தினால் பரிணமிக்கும்படியான தம்முடைய ஸ்வபாவத்தினாலேயே ஜீவபரிணமத்தை நிமித்தம் பண்ணித் தாமே கர்ம பரியாயமாகி ஜீவனுடன் சேர்ந்து பந்தத்தினை யடையும். காலாதியினை நிமித்தம் பண்ணி இந்திர தனுசு பரிவேஷ்டம் முதலியவை பிறரால் பண்ணப்படாமல் தாமாகவே நிறைந்து காணப்படுவது போல ஆத்மனுடைய அசுத்த பரிணமத்தை நிமித்தம் பண்ணிக் கார்மணவர்க்கணைகள் ஞானவரணீயம் முதலிய கர்ம பரியாயங்களாகத் தம்முடைய உபாதான ரூபத்தினால் தாமே பரிணமிக்குமென்று அறியவும். ஆசை கோபம் மயக்கம் முதலிய ஸ்நிக்த பரிணமத்துடன் கூடிய ஜீவன்களும் ஸ்வபாவத்தில் ஸ்னிக்த ரூக்ஷ முதலிய குணங்களையுடைய புத்கல கர்மங்களும் மேற்கூறியவாறு ஒன்றுக்கொன்று

நிமித்தத்தினுல் பந்தத்தினை யடைந்து ஒன்ருேடொன்று நீங்குகின்ற பொழுது உதயத்தினை யடைந்த சுபாசுப கர்மங்கள் சுகதுக்கங்களைக் கொடுக்கும். அந்தப் பலத்தினை ஜீவன்கள் அனுபவிக்கும். திரவிய கர்மம் தனக்குத்தானே உபாதான கர்த்தாவாகும். உதயபாவம் முதலியவற்றினேடுகூடின ஜீவன் தனது அசுத்த பரிணமத்திற்கு உபாதான கர்த்தாவாம். அந்த அசுத்த பரிணமத்தினுல் இஷ்டானிஷ்ட விகல்பத்தினுல் கர்மங்களினுடைய பலமாகிய சுகதுக்கங்களை அனுபவிப்பதாகும்.

திரவிய கர்மம் தன்னுடைய உதயத்தினுலேற்படும் ஜீவனது அசுத்த பரிணமத்திற்கு நிமித்த கர்த்தாவாம். கர்மபலமாகிய சுகதுக்கங்களைச் சேதன ஸ்வரூபத்தினையுடைய ஜீவனே அனுபவிப்பதாகும். இச்சொன்ன பிரகாரத்தினுல் ஆத்மன் மோஹத்தினுல் மறைக்கப்பட்டதாகிக் கர்மங்களுக்குக் கர்த்தாவும், போக்தாவுமாகிப் பவ்வியாபேக்ஷையால் முடிவை யுடையதும் அபவ்வியாபேக்ஷையால்முடிவில்லாமையுமாகிய சம்ஸாரத்தினைப் பொருந்திச் சுழலும்.

இவ்வண்ணம் கர்மத்தினைப் பண்ணவும் அதனுடைய பலத்தினை அனுபவிக்கவும்

லப்தி வசத்தினுல் மோக்ஷமார்க்கத்தினை யடைந்து கர்மங்களை நாசம்செய்து யாதொரு சேர்க்கையு மில்லாத நிஜ ஸ்வரூபத்தினை யடைவதற்கும் பவ்விய ஜீவன்கள் ஸமர்த்த முடையவாம். அபவ்வியஜீவர்கள் பஹி ரங்க நிமித்தங்களைப் பெற்றும் ஸ்வரூபத் தினை யடையமாட்டாது எக்காலத்தும் சம் ஸாரத்தில் சுழல்வார்கள். பவ்விய ஜீவர்கள் ஜினருடைய உபதேசத்தினைப் பெற்று மோக்ஷமார்க்கத்தினைப் பொருந்தி மோஹ னீய கர்மத்தினுக்கு உபசமத்தினையும் க்ஷயத் தினையும் செய்து சுத்த ஞானஸ்வரூபத்தி லேயே வர்த்தித்து பரீஷஹங்களை யெல்லாம் ஜயிக்கும்படியான தன்மையை உடையவர்க ளாகி மோக்ஷத்தினை அடைவார்கள்.

இங்ஙனம் உபயோக ஸ்வரூபனுகிய ஆத்மன் சுத்த ஸங்கிரஹ நய விவக்ஷை யினுல் ஒருவனும், அந்த ஆத்மனே அசுத்த ஸங்கிரஹ நய விவக்ஷையினுல் ஸம்ஸார முக்த பேதத்தினுல் பவ்விய அபவ்விய பேதத்தினுல் தரிசன ஞானுப யோகத்தி னுல்தான் இரண்டு விகல்பனும், ஞானகர்ம கர்மபல சேதன விகல்பத்தினுல் துருவ உத் பத்தி விநாச பேதத்தினுல் ஞான தரிசன

சாரித்திர விகல்பத்தினுல் திரவிய குண பரி யாய விகல்பத்தினுல் தான் மூன்று லக்ஷணங் களை யுடையவனும், சம்ஸாராவஸ்தையுள் நாரக திரியக் மனுஷ்ய தேவ என்னும் நான்கு கதிகளைக் கர்மானு ஸாரத்தின்படி அடைகின்றவனுதலால் நான்குவிதமான ஸங் கிர மணத்தையுடையவனும், உதயபாவம் முதலாகிய பஞ்ச பாவங்களையுடைத்தானவ னுகையால் ஐந்துவித குணப்பிரதானனும், மற்றொரு கதியினை யடையுமிடத்து திக்குகள் நாலும் கீழ் மேல் என்னும் ஆறுவிதமாகிய செல்கையினை யுடையவனும் ஸ்யாதஸ்தி முதலான ஸப்த பங்கிகளாலான அஸ்தித்வத் தினையுடையவனும், எட்டு விதமாகிய கர்மங் களுக்கும் அவைகளின் விநாசத்தினு லேற் பட்ட எட்டுவிதமாகிய ஸித்த குணங்களுக்கும் ஆஸ்ரயமானவனும், உபயகர்ம ஸம்யோக வியோக விவக்ஷயினுல் ஜீவ அஜீவ முத லாகிய நவ பதார்த்த ஸ்வரூபத்தை யுடையவ னும், மோக்ஷாவஸ்தையில் ஒரேவிதமாயி னும் ஸம்ஸாராவஸ்தையில் பிருதிவி அப்பு தேஜோ வாத சாதாரண வனஸ்பதி பிரத்தி யேக வநஸ்பதி த்வீந்திரிய த்ரீந்திரிய சது ரிந்திரிய பஞ்சேந்திரியமென்னும் தச ஸ்தா னங்களையு முடையவனுகும்.

பிரக்கிரதி ஸ்திதி அனுபாக பிரதேசங்களென்னும் நான்கு விதமான பந்தங்களினின்றும் நீங்கின ஜீவன் ஸ்வாபாவிகமாகிய அனந்த ஞானம் முதலிய அனந்த குணங்களை யுடையதாகி மேல்நோக்கிச் செல்லும் ஸ்வபாவத்தினுல் ஒரேஸமயத்தில் லோகத்தினுடைய உச்சியாகிய ஸித்தி க்ஷேத்திரத்தினை யடையும். ஒழிந்த ஸம்ஸார ஜீவன்கள் வேறு கதியினை அடைகின்றபொழுது விதிக்குகள் நீங்கலாக முன்சொன்ன ஆறு திக்குகளில் செல்வனவாம்.

இரண்டாவது ஜீவாஸ்திகாய அத்தியாயம் முற்றும்.

3-வது புத்கலாஸ்திகாய அத்தியாயம்

புத்கலாஸ்திகாயங்கள் ஸ்கந்தங்களும் ஸ்கந்த தேசங்களும் ஸ்கந்தப் பிரதேசங்களும் பரமாணுக்களுமென்று நான்கு விகல்பங்களை யுடையன. அவற்றுள் தன்னுடைய எல்லா அவயவங்களாலும் நிறைந்தது ஸ்கந்தமென்றும், அவற்றில் பாதி அம்சத்தினையுடையது ஸ்கந்த தேசமென்றும், அவற்றில் பாதியினை ஸ்கந்தப் பிரதேசமென்றும், கூறுபடுக்க முடியாத புத்கலத்தினைப் பரமாணுவென்றும் கூறுப. ஸ்தூலமும் ஸூக்ஷ்மமும் ஆகிய ஸ்கந்தங்கள் புத்கலங்களென்று வியவஹார நயத்தினுல் சொல்லப்படும். அந்த ஸ்கந்தங்கள் ஆறு விதமாகும்.

அங்ஙனமாகிய அறுவகை ஸ்கந்தங்களினுல் லோகம் நிறையப்பட்டதாகும். அந்த ஆறுவகை ஸ்கந்தங்கள் எவை எனில் உடைந்த விடத்துத் தாமாகக் கூடாத பூமி பர்வதங்கள் முதலியன ஸ்தூல ஸ்தூல ஸ்கந்தங்களாம். உடைந்த விடத்துத் தமக்குத் தாமே ஒன்ருகக் கூடும்படியான ஜலம் தைலம் முதலியன ஸ்தூல ஸ்கந்தங்களாகும்.

கண்களுக்கு விஷயமானவையாயும் பிடித்தற்கும் மற்றொரிடத்தி லடைவித்தற்கும் இயலாத நிழல் புகை பிரகாசம்முதலியன ஸ்தூல ஸூக்ஷ்ம ஸ்கந்தங்களாகும். கண்களுக்கு விஷயமாகாது இதர நான்கு இந்திரியங்களுக்கும் விஷயமாகக் கூடிய ஸ்பரிச ரஸ கந்த சப்தங்கள் ஸூக்ஷ்ம ஸ்தூல ஸ்கந்தங்களாகும். இந்திரியங்களினுல் ஸ்வீகரிக்க வியலாத கர்ம வர்க்கணைகள் ஸூக்ஷ்ம ஸ்கந்தங்களாகும். கர்ம வர்க்கணைகளிலும் ஸூக்ஷ்மங்களாகி இரண்டணுக்கள் கூடின ஸ்கந்தப் பரியந்தமுள்ள ஸ்கந்தங்கள் ஸூக்ஷ்ம ஸூக்ஷ்ம ஸ்கந்தங்களாகும்.

இங்ஙனமாகிய சகல ஸ்கந்தங்களுக்கும் உபாதான காரணமாகியதும் ஸ்கந்தங்களை பேதித்த விடத்துக் கடைசியாய்க் கூறுபடுக்க முடியாது நின்றதுமாகிய திரவியம் பரமாணு வென்பது. அது திரவியார்த்திக நயத்தினுல் சாஸ்வதமானதும் வியக்தியினுல் சப்தமில்லாததும் ஒரே பிரதேசத்தையுடையதும் பிரிக்க வியலாத அம்சத்தினை யுடையதும் ஸ்பரிச ரஸ வர்ண கந்தங்களை யுடையதாகையால் மூர்த்தமானதுமாகும். அந்தப் பரமாணுக்களே பிருத்வி அப்பு தேஜோ

வாயுக்க ளென்னும் நான்கு தாதுக்களுக்கும் காரணமானவைகளாம். சப்தம் ஸ்கந்தத் தினுலேற்பட்டதாம். அந்த ஸ்கந்தம் பரமா ணுக்களினுடைய கூட்டத்தினுலான பிண்ட மாகும். அந்த ஸ்கந்தங்கள் ஒன்ருே டொன்று தாக்காநின்ற விடத்து சப்தம் உண்டாகும். அந்த சப்தம் உத்பாத மென் றும் நியதமென்றும் இரு விதமாம். அவற் றுள் தாஞக ஏற்படுகின்ற மேக கர்ஜ்ஜனை சமுத்திர கோஷம் முதலியன நியதங்களாம். ஜீவன்களாலுண்டுபண்ணக்கூடிய சப்தம் உத் பாதமென்பது. அதுவும் பாஷாத்மகம் அபா ஷாத்மகம் என இரண்டு பிரகாரம், அவற் றுள் பாஷாத்மகம் அக்ஷராத்மகம் அனக்ஷ ராத்மகமென இருவகையாம். ஸமஸ்கிரு தம் பிராக்கிரதம் முதலிய பாஷைகள் அக்ஷ ராத்மகம். த்வீந்திரிய ஜீவன்கள் முதலிய வற்றினுடைய சப்தமும் திவ்வியத்துவனி யும் அனக்ஷராத்மகம். அபாஷாத்மகமாகிய பிராயோகிக சப்தம் தத விதத கன ஸுஷிர விகல்பத்தினுல் நான்கு விதமாம். அவற்றுள் வீணை முதலிய நரம்புக் கருவிகளின் சப்தம் ததமென்பது. பேரிகை மத்தளம் முதலிய தோற்கருவிகளின் சப்தம் விததமென்பது.

தாளம் முதலிய கஞ்சக்கருவிகளின் சப்தம் கன மென்பது. புள்ளாங்குழல் முதலிய துளைக்கருவிகளின் சப்தம் ஸுஷிரமென் பது.

இவ்விதமாகிய சப்தங்களைச் சிலர் ஆகாசத் திரவியத்தினுடைய குணமென்பர். அப்படி யாகில் ஆகாசத்திரவியம் அமூர்த்தமாகையி னுல் ஸ்ரோத்திரேந்திரியத்திற்கு விஷயமா காதென வறியவும். பரமாணு தன்னுடைய ஏகப் பிரதேசத்தினுல் நித்தியமும் தன் னுடைய வர்ணம் முதலிய குணங்களுக்கு அவகாசத்தினைக் கொடுத்தலால் சாவகாசமும் பலவாகிய பிரதேசங்களில்லையாதலால் நிரவ காசமும் ஸ்கந்தங்களுக்குத் தனது ஏகப் பிரதேசத்தினுல் பேதமும் கர்த்தாவுமாகும். மற்றும் காலம் ஸங்கியை யென்னுமிவற்றை வேறுபடுப்பதாம். அவற்றுள் மந்தகதியினுல் ஆகாசப்பிரதேசத்தினை அப்பரமாணு புடை பெயருமிடத்து, ஸமயம் என்னும் வியவ ஹார காலம் வியக்தியினை யடைந்ததாலும், அவ்வண்ணமே ஒன்றிரண்டு முதலிய திரவிய ஸங்கியையும் பரமாணுவினுலேற்பட்டதாகை யால் திரவிய கால ஸங்கியைகளை அளவறுக் கப்பட்டதாகும்.

மற்றும், பரமாணு திரவியம் திக்த கடுக கஷாய ஆம்ல மதுரமென்னும் ஐந்து விதமாகிய ரஸங்களில் ஒவ்வொரு ரஸத்தினை யுடையதும், கறுப்பு சிவப்பு வெள்ளை மஞ்சள் பச்சை யென்னும் ஐந்து வர்ணங்களுள் ஒவ்வொரு வர்ணத்தினையுடையதும், ஸுகந்தம் துர்க்கந்தம் என்னும் இரண்டு கந்தங்களில் ஒவ்வொரு கந்தத்தினையுடையதும், ஸ்னிக்த ருக்ஷ சீத உஷ்ண குரு லகு மிருது கர்க்கச மென்னும் எட்டு விதமாகிய ஸ்பரிசங்களுள் ஸ்னிக்த ருக்ஷ சீத உஷ்ணங்களுள் அவிரோதங்களாகிய இரண்டிரண்டு ஸ்பரிசங்களையுடையதும், சக்தியினால் சப்தத்திற்குக் காரணமாகியதும் வியக்தியினால் சப்தமில்லாததுமாகும். எட்டுவிதமாகிய ஸ்பரிசங்களுள் மிருது கர்க்கச குரு லகு என்னும் நான்கு ஸ்பரிசங்களும் ஸ்கந்தங்களுக்கே தவிர பரமாணுவினுக்கில்லை. மற்ற நான்கு ஸ்பரிசங்கள் ஸ்கந்தங்களுக்கும் பரமாணுக்களுக்குமாகும். பரமாணு ஒரே பிரதேசத்தை யுடையதாகையால் அவிரோதமாகிய இரண்டு ஸ்பரிசங்களை யுடையதாகும். அதற்பின், உலகத்திலுள்ள புத்கல விகல்பங்கள் யாவை யெனில்? ஐந்து இந்திரியங்களால் அனு

பவிக்கப்படும் விஷயங்களும் ஐந்து வித மாகிய திரவியேந்திரியங்களும் ஔதாரிக வைக்கிரீயக ஆஹாரக தைஜஸ கார்மண மென்னும் ஐந்துவிதமாகிய சரீரங்களும் திரவிய மனமும் ஞானவரணீயம் முதலிய திரவிய கர்மங்களும் மற்றும் மூர்த்தமாகிய குணத்தையுடைய நோகர்மங்கள் முதலிய யாவும் புத்கலத் திரவியத்தின் விகல்பங்க ளாகும்.

மூன்றவது புத்கலாஸ்திகாய அத்தியாயம் முற்றும்

4-வது தர்மாஸ்திகாய அத்தியாயம்

தர்மாஸ்திகாயம் வர்ண கந்த ரஸஸ் பரிஸ சப்தங்களினின்றும் நீங்கினதாகி லோக மெங்கும் நிறைந்ததாகி லோகாகாசப்பிரமாண மாகிய அஸங்கியாத பிரதேசங்களையுடைய தாம். மற்றும், அனந்தமாகிய அகுருலகுத்வ மென்னும் குணங்களையுடையதாகி அதனல் அர்த்த பரியாயங்களினுல் உத்பத்தி விநாசங் களோடு கூடினதாகிலும் திரவியார்த்திக நயத் தினல் நித்தியமானதும், தான் ஒரு காரியத் தையும் செய்யாத நிஷ்கிரிய திரவியமா யிருந் தும், செல்கையோடு கூடிய ஜீவ, புத்கலத் திர

வியங்களின் செல்கைக்கு ஸஹகாரி காரண மாவதாகும். எங்ஙனமெனில்? எப்படி ஜல மானது தான் செல்லாமலும், செல்லும்படி யான மஸ்யம் முதலியவைகளைத் தூண்டா மலும் தானுகச் செல்லும்படியான அந்த மஸ்யம் முதலியவைகளின் செல்கைக்கு ஸஹ காரி காரணமாகின்றதோ, அப்படியே தர்மா ஸ்திகாயமும் தான் செல்லாமலும் ஜீவபுத் கலங்களைச் செல்லும்படி தூண்டாமலும் தாமாகச் செல்லும்படியான ஜீவபுத்கலங் களின் செல்கைக்கு ஸஹகாரி காரணமா கின்றது.

நான்காவது தர்மாஸ்திகாய அத்தியாயம் முற்றும்

5-வது அதர்மாஸ்திகாய அத்தியாயம்

அதர்மாஸ்திகாயம் முன் தர்மாஸ்தி காயத்திற்குச் சொன்ன குணங்களையுடையதாகி நிற்கும்படியான ஜீவபுத்கலங்களின் நிற்ற லுக்கு ஸஹகாரி காரணமென்று அறியவும். வழிப்போக்கர்களுக்கு நிழலைப்போலத் தாமாக நிற்கும்படியான திரவியங்களுக்கு, வியவ ஹாரத்தினுல் நிற்றலுக்கு ஸஹகாரி காரண மாகின்றது. ஜீவபுத்கலத் திரவியங்களின்

செல்கைக்கும் நிற்றலுக்கும் நிமித்தமானவை களும் யாவராலும் செய்யப்படாதனவும் தம் முடைய விசேஷ குணங்களால் வேருனவை யும் ஏககேஷத்திர அவகஹனத்திஞல் வேறல் லாதனவும் லோகாகாசப் பிரமாணத்தினையு முடைய தர்மாஸ்தி அதர்மாஸ்தி யென்கிற இந்த இரண்டு திரவியங்களின் அஸ்தித் வத்திஞலேயே லோகம் அலோகம் என்கிற விபாக நிச்சயம் ஆனதாகும். எப்படியெனில், ஆறுவிதமான திரவியங்களும் கூடியிருக்கப் பட்ட இடம் லோகமென்பது. அதற்குப் புறம்பு சுத்தாகாசமாகியது அலோகமென் பது.

லோகத்தில் செல்கையினையும் நிற்றலையு முடைய ஜீவபுத்கலத் திரவியங்களுக்குச் செல் கைக்கும் நிற்றலுக்கும் பஹிரங்க காரணத் தினையுடைய தர்மாஸ்தி அதர்மாஸ்திகள் இல்லையாகில் அப்பொழுது லோகத்திற்குப் புறம்பு சுத்தாகாசமாகிய அலோகத்திலும் ஜீவபுத்கலங்களின் செல்கையைத் தடை யிடுவதற்கில்லை. ஆகையால் லோகம் அலோக மென்கிற விபாகத்திஞலேயே தர்மாஸ்தி அதர்மாஸ்திகள் உண்டென்று அறியப் படும். மற்றும் தர்மாஸ்திகாயம் நிஷ்கிரிய

திரவியமாகையால் தான் உடன் போகாமலும் அன்னியத் திரவியங்களுக்கு வலியினுலாகிய செல்கையைத் தான் செய்யாமலும் ஜீவ புத் கலங்களின் செல்கைக்கு உதாசீனத்தினுல் காரணமாகும். அதர்மாஸ்திகாயமும் நிற்ற லுக்கு உதாசீனத்தினுல் காரண மென்றறிக. ஜீவ புத்கலங்க ளிரண்டும் செல்கையும் நிற் றலுமாகிய காரியங்களைத் தம்முடைய ஸ்வ பாவத்தினுலேயே செய்வனவாம். ஆகை யால் அவைகளுடைய செல்கை நிற்றலுக் குத் தர்மாஸ்தி அதர்மாஸ்திகள் உதாசீனத்தி னுல் காரணமாவன வென்றறியவும்.

ஐந்தாவது அதர்மாஸ்திகாய அத்தியாயம் முற்றிற்று.

6-வது ஆகாசாஸ்திகாய அத்தியாயம்

எல்லா ஜீவன்களுக்கும் புத்கலங்களுக் கும் தர்மாஸ்தி அதர்மாஸ்தி காயங்களுக்கும் இருக்க இடத்தினைக் கொடுக்கும் தன்மை யினை யுடையது ஆகாசமாகும். இதரமாகிய ஐந்து திரவியங்களினுல் கூடி வர்த்திக் கின்ற ஆகாசம் லோகாகாச மென்றும், அதன் புறம்பான சுத்தாகாசம் அலோக மென்றும் சொல்லப்படும். அவற்றுள்

லோகாகாசம் அஸங்கியாதப் பிரதேசத்தினை யுடையதும் அலோகாகாசம் அனந்தப் பிர தேசத்தினை யுடையதுமாகும். ஆகாசம் ஜீவ புத்கலங்களுக்கு இருக்க இடத்தினைக் கொடுப் பதுபோல செல்கை நிற்றலுக்கும் ஸஹகாரி காரணமானால் மேனோக்கிச் செல்லும் ஸ்வ பாவத்தினையுடைய ஸித்த ஜீவர்கள் லோகத் தினுடைய உச்சியில் எப்படி ஸ்திரமாக இருப்பார்கள்? யாதொரு காரணத்தினால் ஸித்த ஜீவர்களுக்கு லோகத்தினுடைய உச்சி யில் ஸ்தானமாகுமென்று ஜினவரரால் சொல் லப்பட்டிருப்பதால் ஆகாசாஸ்திகாயத்திற்கு அது காரணத்தினாலேயே செல்கை நிற்ற லுக்குக் காரணமாகிய குணம் இல்லையென்று அறியத் தகுந்தது. மற்றும் ஆகாசம்செல்கை நிற்றலுக்குக் காரணமாகில் அலோகத்தி னுடையஹானியும் லோகத்தினுடைய விருத் தியுமாகும். ஆகையால் தர்மாஸ்தி அதர் மாஸ்திகளே செல்கை நிற்றலுக்குக் காரண மாவன.

ஆகாசம் ஜீவ புத்கலங்களின் செல்கை நிற்றலுக்குக் காரணமல்லவென்று லோக ஸ்வபாவத்தைப் பற்றிக் கேட்கும் பவ்வியர் களுக்கு ஜினவரரா லுபதேசிக்கப்பட்டது.

தர்மாஸ்தியும் அதர்மாஸ்தியும் லோகாகாசமு மென்னும் இவைகள் வியவஹார நயத்தி ஞல் ஒரே க்ஷேத்திரத்துள் உள்ளவையாகை யால் அபின்னமானவைகளும் ஸமானப் பிரமாணங்களை யுடையவைகளுமாகும். நிச் சய நயத்திஞல் முறையே செல்கைக்கும் நிற்றலுக்கும் இடத்தினைக் கொடுத்தற்கும் காரணமாகிய விசேஷ குணங்களைத் தனித் தனியே உடையவையாகையால் வெவ்வேறு திரவியங்களுமாவன.

ஆறவது ஆகாசாஸ்திகாய அத்தியாயம் முற்றும்

7-வது பஞ்சாஸ்திகாய சூளிகை அத்தியாயம்

ஜீவ திரவியம் தர்மத்திரவியம் அதர்மத் திரவியம் ஆகாசத்திரவியம் காலத்திரவியம் என்கிற இவ்வைந்து திரவியங்களும் ஸ்பரிச ரஸ கந்த வர்ணம் முதலிய மூர்த்த குணங்கள் இல்லாதனவாகையால் அமூர்த்தத் திரவியங் களாம். புத்கலத் திரவியம் ஒன்றும் ஸ்பரிச ரஸ கந்த வர்ணங்களையுடைய தாகையால் மூர்த்தத் திரவியமாம். அந்த ஆறு திரவியங் களுள் ஜீவத்திரவியம் ஒன்றே சேதன ஸ்வ ரூபத்தினையுடையதாம். மற்ற ஐந்து திரவியங்

களும் அசேதனங்களாம். ஜீவ புத்கலத் திரவியுங்களிரண்டும் பஹிரங்க ஸஹகாரி காரணங்களைப் பெற்றுச் செல்கையும் நிற்றலு மாகிய தன்மையையுடையவையாகையால் ஸக் கிரியத் திரவியங்களாவன. மற்ற நான்கு திரவியங்களும் பஹிரங்க காரணமுண்டாகி லும் ஸக்கிரியங்களல்லன. ஜீவனுல் ஐந்து விதமாகிய இந்திரியங்களைக் கொண்டு ஸ்வீ கரிக்கும்படியான விஷயங்களெல்லாம் மூர்த் தங்களாகும். சக்தியினுலும் வியக்தியினுலும், இந்திரியங்களால் ஸ்வீகரிக்க வியலாத சுத்த ஜீவத் திரவியமும் தர்ம அதர்ம ஆகாச காலத் திரவியங்களும் ஆகிய இவைகள் அமூர்த்தங்களாம்.

அனீந்திரியமாகியமனம் மூர்த்த அமூர்த்த மாகிய இரண்டு விஷயங்களையு மறியும். ஐந்து விதமாகிய இந்திரியங்கள் அவையவை களின் விஷயங்களைப் பிரத்தியக்ஷமாக வறி யும். மனம் அந்த இந்திரியங்களின் வழிச் சென்று மூர்த்தங்களையும் அதனுலேற்பட்ட சுகதுக்கங்களையும் பிரத்தியக்ஷமாக வறியும். தர்மத்திரவியம் முதலிய அமூர்த்தத் திரவியங் களை பரோக்ஷத்தினுலறிவதாகும். அதற் பின் காலத்திரவியத்தைப்பற்றிச் சுருக்கமாக

இவ் விடத்துச் சொல்லப்படும். எங்ஙன மெனில்? ஸமயம் நிமிஷம் நாழிகை திவ ஸம் முதலிய வியவஹார காலங்கள் புத்கல பரமாணுமந்த கதியினுல் புடைபெயர்ந்து மற்றொரு பிரதேசத்தினை யடைவதும், கண் களை மூடித் திறத்தல் ஜலபாத்திரம் முதலிய கிரியைகளும் சூரியபிம்ப கமனம் முதலிய புத்கலக்கிரியா பரிணுமத்தினுல் வியக்தியினை யடைந்த காரணத்தினுல் வியவஹார நயத்தி னுல் புத்கலத்திரவிய பரிணுமத்தினுலுண் டானவை யென்று சொல்லப்படும். ஆனுலும் அவைகள் நிச்சயத்தினுல் காலாணுத்திரவிய ரூப நிச்சய காலத்தின் பரியாயங்களேயாவன.

அணு தானிருந்த இடத்தை விட்டு மந்த கதியினுல் மற்றொரு பிரதேசத்தினை யடை வது முதலாக முன்சொன்ன புத்கலத் திர விய பரிணுமங்கள் இரவில் படிக்கின்றவனுக் குத் தீபம் போலவும் குயவனுடைய சக்கரச் சுழற்சிக்குக் கீழுள்ள கற்சிலை பஹிரங்க காரணமாவது போலவும் வர்த்தனையினுக்கு பஹிரங்க ஸஹகாரி காரணமான காலாணு ரூபத் திரவிய காலத்தினு லேற்பட்டவைகளா கும். ஆதலால் வியவஹார காலம் புத்கலத் திரவிய பரிணுமத்தினுல் உண்டானதும்

நிச்சய காலம் அப்பரிணமங்களை யுண்டு பண்ணப்பட்டது மாகும். வியவஹார காலம் ஸமயாபேக்ஷையினுல் க்ஷண விநாசத்தினை யுடையதும் தனது குண பரியாயங்களுக்கு ஆதாரமானதாகி என்றும் அழியாத தன்மையை யுடையதாகையால் திரவியகாலம் நித்தியமும் ஆகும். காலம் என்கிற வசனத்தினுல் அக்காலத்தினது அஸ்தித்வத்தினைத் தெரிவியாநின்றது. அங்ஙனமாகிய நிச்சய காலம் திரவிய ரூபத்தினுல் நித்தியமாகும். வியவஹார காலமானது வர்த்திக்கின்ற ஸமயாபேக்ஷையினுல் உத்பன்னமான பொழுதே விநாசத்தினை யுடையதும் வியவஹார நயத்தினுல் ஆவளி உச்வாஸம் பல்லியோபமம் ஸாகரோபமம் முதலான விசேஷ காலாபேக்ஷையினுல் நீண்ட கால ஸ்தாயியானது மாகும்.

அவற்றுள் காலாணுக்கள் பரமார்த்த காலம் அல்லது நிச்சயகாலம் என்னும் பெயரினைப் பெற்று ஆறு திரவியங்களுள் தான் ஒரு திரவியமாம். அந்தத் திரவிய காலத்தினுடைய பரியாயங்களாகி ஸமயம் நிமிஷம் முதலிய பேதங்களினுல் கல்பிக்கப்பட்டவை வியவஹார கால மென்பனவாம். இவ்

விதமாகிய காலம் ஆகாசம் தர்மம் அதர்மம் புத்கலம் ஜீவன்களென்னும் இவ்வாறும் அஸ்தித்வ லக்ஷணத்தினையும் உத்பாத விய த்ரௌவ்ய லக்ஷணத்தினையும் குண பரியாய லக்ஷணத்தினையும் உடையவைகளாகையால் திரவியங்க ளென்று சொல்லப்படும். காலத் திரவியத்திற்கு சக்தியினாலும் வியக்தியினு லும் எவ்விதத்திலும் பஹுப்பிரதேசங்களில் விசாலிக்கும் சக்தியில்லை யாகையால், அஸ்தி காய மென்று காலத்தினைச் சொல்லப்பட மாட்டாது. மற்ற ஐந்து திரவியங்களுக் கும் பஹுப் பிரதேசங்களில் விரிந்து நிற்கும் சக்தியுண்டாகையால் அவை அஸ்தி காயங்க ளென்றும் சொல்லப்படும்.

இவ்விதமாகிய பஞ்சாஸ்திகாய ஸங் கிரஹமென்ற பெயரையுடையதும் விசால மாகிய ஆகமத்தின் ஸாரமுமாகிய இந்த முதலாவது அதிகாரத்தினை அப்பியசித் தறிந்து அதற்பின் நூதன கர்மாஸ்ரவத் திற்குக் காரணமாகிய ஆசை கோபம் முதலிய விபாவ பரிணாமங்களை நீக்கப்பட்ட பவ்வியர் கள் துக்கங்களுக்குக் காரணமாகிய நான்கு கதிகளினின்றும் நீங்கி மோக்ஷத்தினை யடைந்து அனந்தமாகியதும் அழியாததா

மாகிய சௌக்கியத்தினை யடைவர். எங்ஙன மெனில்? இந்தப் பஞ்சாஸ்திகாய ஷட் திரவியங்களினுடைய விஷயங்களைப் பற்றி அப்பியசித் தறிந்த பவ்வியர்கள் சுத்த ஜீவாஸ்திகாய லக்ஷணத்தினை அறிந்தவர்க ளாகி அங்ஙனமாகிய நிஜசுத்தாத்ம ஸ்வ ரூபத்தினை யடைந்து தன் மயமாகப் பரிண மிக்கப்பட்ட உத்தியோகத்தினை யுடையவர்க ளாகி, அதனால் சுத்தாத்ம ஸ்வரூபமே ஸ்வீ கரிக்கத்தகுமென்று ருசிபூர்வகமாய் அறி கின்ற நிச்சய ஸம்மியக்த்துவத்திற்குப் பிரதி கூலமாகிய தரிசன மோஹனீய கர்மத்தினை நீக்கி அதன் பிறகு ஆத்மஸ்வரூபத்தில் சலியாது நிற்கும் நிச்சய சாரித்திரத்திற்குப் பிரதிகூலமாகிய சாரித்திர மோஹனீயமாகிற குரோத, மான, மாயா, லோபங்களாகிய விபாவபரிணமங்களையும் நீக்கி அதனால் சம் ஸாரத்தினைக் கெடுத்து அபவர்க்க பதவியினை அடைந்து அனந்தம் காலம் அனந்த சுகத் தினை யடைந்திருப்பரென்றறியவும்.

ஏழாவது பஞ்சாஸ்திகாய சூளிகை அத்தியாயம் முற்றும்

2-வது ஜீவாதிநவபதார்த்தப் பிரதிபாதக மஹாதிகாரம்

அதற் பின் மோக்ஷ சுகத்தினையே அடையவேண்டு மென்னும் கருத்தினை யுடைய பவ்வியர்களுக்குப் பரம்பரையினால் மோக்ஷத்திற்குக் காரணமானவரும் தற்கால அபேக்ஷையினால் தர்மதீர்த்தத்தை யுண்டு பண்ணினவராயும் தேவாதி தேவருமாகிய பரமபட்டாரக பகவான் ஸ்ரீ மஹாவீரவர்த்த மான ஸ்வாமியினை என்னுடைய சிரஸினால் நமஸ்கரித்து முன் சொன்ன பஞ்சாஸ்தி காய ஷட் திரவியங்களின் ஸம்பந்த மாக ஏற்படும் நவபதார்த்த விகல்பங்களையும் மோக்ஷ மார்க்கத்தினையும் பற்றிச் சொல்லு வேன். மோக்ஷ மார்க்கம் எப்படி யெனில் ? லப்தி பஞ்சக ஸாமக்ரியினை யடைந்த பவ்வி யர்களுக்கு ஸம்மியக் தரிசன ஞானத்துடன் கூடினதும் ஆசை கோபம் முதலிய விபாவங் களின் நீங்கினதுமாகிய ஸம்மியக் சாரித்தி ரமுமாகிய இந்த இரத்தினத் திரயப் பரிணா மங்கள் மோக்ஷ மார்க்கமாகும்.

வீதராக ஸர்வஞ்ஞனாகிய ஜிநேந்திரனா லுபதேசிக்கப்பட்ட ஜீவபதார்த்தம் முத லிய நவ பதார்த்தங்களை அத்தியந்தம் ருசி

பூர்வகம் விஸ்வஸியானின்ற பவ்விய ஜீவர் களுக்கு மதிஞானா வரணீயத்தினுடைய க்ஷயோபசமம் ஆனபொழுது மதிஞானத் துடன் ஸம்மியக் தரிசனமும் பொருந்துவ தாகும். ஆத்ம பதார்த்தம் முதலிய சகல பதார்த்தங்களின் தன்மையினை விஸ்வஸிப் பது வியவஹார ஸம்மியக்த்வ மென்பதாம். அதற்பின் ஆத்ம ஸ்வரூபத்தினை மாத் திரம் விஸ்வஸிப்பது நிச்சய ஸம்மி யக்த்துவ மென்பது. இவற்றுள் வியவ ஹார ஸம்மியக்த்வம் பரம்பரையினால் மோக்ஷத்தினையும் நிச்சய ஸம்மியக்த்வம் ஸாக்ஷாத் மோக்ஷத்தினையும் அடைவிக் கும். ஆத்மா முதலிய பதார்த்தங்களை அத னதன் ஸ்வரூபத்தைப் பற்றி அறிந்து நம்புவது ஸம்மியக் தரிசன மென்பது. அவைகளைச் சந்தேஹம் விபரீதமின்றி ஊடா டித் தெளிவது ஸம்மியக் ஞானமாகும். விஷயங்களுள் ஸமத்வமான பரிணமம் ஸம் மியக் சாரித்திர மென்பது. இவை மூன்றும் வியவஹார ரத்னத் திரயமென்று சொல்லப் படும்.

இந்த வியவஹார ரத்னத்திரயம் நிச்சய ரத்னத்திரயத்திற்குச் சாதக மென்று அறிய

வும். நவபதார்த்தங்களுள் மோக்ஷ பதார்த்தமே பவ்விய ஜனங்களால் பிரார்த்திக்கப் படுவதாகையால் அதனைப் பெறும் உபாயமாகிய மார்க்கத்தினைச் சுருக்கமாக இவ்விதம் சொல்லி, அதற்பின் நவபதார்த்தங்களைப் பற்றித் தெரிவிக்கப்படும். அவற்றுள் ஜீவன்களும் அஜீவன்களு மென்றிவை பிரத்தியேக பதார்த்தங்கள். அவற்றின் ஸம்பந்தமாகி அவ்விரண்டின் ஸம்யோகத்தினால் புண்ணிய பாப ஆஸ்ரவ பந்த பதார்த்தங்கள் ஏற்பட்டன. ஸம்வர நிர்ஜ்ஜரா மோக்ஷபதார்த்தங்கள் அவ்விரண்டினுடைய வியோக தாரதம்யத்தினால் ஏற்பட்டவை. ஸம்வர நிர்ஜ்ஜரா பதார்த்தங்கள் மோக்ஷகாரணங்களாகையினால் அவை ஸ்வீகரிக்கத்தகுந்தன. மோக்ஷபதார்த்தம் எப்பிரகாரத்தினாலும் அடையக்கூடியதாகையினால் அது ஸ்வீகரிக்கத் தகுந்ததேயாம். ஜீவபதார்த்தம் சுத்த அசுத்த தன்மையினால் முறையே ஸ்வீகரிக்கவும் நீக்கவும் தகுந்ததாகும். மற்ற பதார்த்தங்கள் எவ்விதத்திலும் நீக்கத்தகுந்தவைகளேயாகும். அங்ஙனமாகிய நவபதார்த்தங்களுள் முதலில் ஜீவ பதார்த்தத்தினைப்பற்றித் தெரிவிக்கப்படும்.

முதலாவது மோக்ஷமார்க்க அத்தியாயம் முற்றும்

2-வது ஜீவபதார்த்த அத்தியாயம்

ஜீவன்கள் சம்ஸார ஜீவன்களென்றும் மோக்ஷ ஜீவன்களென்றும் இருவகைத்து. அவற்றுள் கர்ம கர்மபல சேதனையினையும், க்ஷாயோபசமிகஞான தரிசனோபயோகங்களை யும் உடையவைகளாகிச் சரீரத்துடன் கூடி வர்த்திக்கும் ஜீவன்களைச் சம்ஸார ஜீவன்க ளென்ப. சுத்த சேதனையினையும் அதன் விசேஷமாகிய கேவல ஞான தரிசனோப யோகங்களையுமுடையவையாகி ஐந்து வித மாகிய சரீரத்தினின்றும் அகன்ற ஜீவன்களை மோக்ஷஜீவன்களென்ப. அவற்றுள் சம் ஸார ஜீவன்கள் ஸ்தாவர த்ரஸபேதத்தினால் இரண்டு விதமாகும். அவற்றுள் ப்ரத்விகாய அப்காய தேஜஸ்காய வாதகாய வனஸ்பதி காயங்களென்னும் இந்த ஜீவன்கள் ஸ்பரிச னேந்திரியம் ஒன்றினையே உடையனவாகி, ஸ்தாவர நாமகர்மோதயத்தினால் உத்பன்னங் களும் திரவிய பாவபேதமாகிய மனமில்லாத வைகளுமாகி இருந்த இடத்தினை விட்டுச் செல்லக்கூடாதவைகளாகையினால் ஸ்தாவர ஜீவன்களென்று சொல்லப்படும். அங்ஙன மாகிய அந்த ஏகேந்திரிய ஜீவன்களுக்குச்

சைதன்ய பாவமானது முட்டைக்குள்ளிருக்கும் ஜீவனுடையவும் கர்ப்பத்திலிருந்த ஜீவன்களுடையவும் மூர்ச்சையினை யடைந்த மனிதர்களுடையவும் சைதன்ய ஸ்வபாவத்தைப் போல அவ்வியக்த சைதன்யங்களாகுமென்று அறியப்படும்.

ஆத்ம ஸ்வரூபமானது ஸ்பரிசனேந்திரியம் முதலியவைகளினின்றும் நீங்கின ஒப்பற்ற ஞானஸ்வரூபமாகும். அங்ஙனமாகிய அந்த ஆத்மபாவனை செய்யாது அல்ப்ப சுக நிமித்தம் ஸ்பரிசனேந்திரிய விஷயத்தில் ஆஸக்தியாக பரிணமிக்கப்பட்ட ஜீவன்களினால், ஸ்பரிசனேந்திரியத்தை மாத்திரம் உடைய ஏகேந்திரிய ஜாதி நாமகர்மம் சம்பாதிக்கப்பட்டது. அந்தக் கர்மம் உதயமாகின்ற காலத்து ஸ்பரிசனேந்திரிய ஆவரண க்ஷயோப சமத்தைப் பெற்று மற்ற இந்திரிய மனோ இந்திரியங்களின் ஆவரண உதயத்தினாலும், ஸ்பரிச விஷயத்தை மட்டும் அறிந்து பரிணமியாநின்றதுகள்.

அதற்பின் த்ரஸ ஜீவன்களைப்பற்றிச் சொல்லுமிடத்தில் அவற்றுள் கடல்நத்தைகளும் பலகரைகளும் சங்குகளும் சிப்பிகளும் காலில்லாத கிருமிகளும் இவை போன்ற

மற்றும் பலவாகிய ஜீவன்களும் ஸ்பரிசத்தினையும் ரஸத்தினையும் அறிவனவாகையால் அவை த்வீந்திரிய ஜீவன்களென்பன. சுத்த நிச்சய நயத்தினுல் த்வீந்திரிய ஸ்வரூபத்தினின்றும் வேருனதும் கேவலஞான தரிசன ஸ்வரூபத்தினை யுடையதுமாகிய சுத்த ஜீவாஸ்திகாய ஸ்வரூபத்தினைப் பாவனை செய்யாமலும் அதனுலேற்படும் பரமானந்த லக்ஷண சுகத்தை அனுபவியாமலும் ஸ்பரிசன ரஸனேந்திரிய விஷயசுகத்தில் பிரீதியினை யடைந்து அனுபவிக்கப்பட்ட ஜீவன்களால் த்வீந்திரியஜாதி நாமகர்மம் ஸம்பாதிக்கப்பட்டது. அது உதயமாகின்ற பொழுது வீரியாந்தராய ஸ்பரிச ரஸனேந்திரிய ஆவரண க்ஷயோபசமத்தைப் பெற்று மற்ற இந்திரிய மனே இந்திரியங்களின் ஆவரண உதயத்தினுல், த்வீந்திரியங்களையுடையதாகி மனமில்லாதவைகளாகின்றன.

அதற்பின் பேனும் மூட்டுப்பூச்சியும் செந்தேளும் எறும்பும் இலைத்தேள் முதலான கீடங்களும் இவை போன்ற மற்றும் பலவாகிய ஜீவன்களும் ஸ்பரிசத்தினையும் ரஸத்தினையும் கந்தத்தினையும் அறிவனவாகையினுல் அவைகள் த்ரீந்திரிய ஜீவன்க

ளென்று கூறப்படும். விசுத்த ஞான தரிசன ஸ்வபாவ ஆத்மபதார்த்த பாவனையுடலேற் படும் வீதராக பரமானந்த லக்ஷணசுகாம்ரதத் தினை யடைந்து அனுபவியாத ஜீவன்களி னுல் ஸ்பரிசன ரஸன கிராணேந்திரிய விஷய சுகங்களில் வாஞ்சையினையடைந்து யாதொரு த்ரீந்திரியஜாதி நாமகர்மம் பந்தித்துக்கொள் ளப்பட்டது. அதன் உதயவசத்தினுல் வீரி யாந்தராய ஸ்பரிசன ரஸன கிராணேந்திரிய ஆவரண க்ஷயோபசமத்தைப் பெற்று மற்ற இந்திரிய மனோ இந்திரியங்களின் ஆவரண உதயத்தினை யடைந்து மூன்று இந்திரியங் களை உடையனவாகி மனமில்லாதவைகளா கின்றன.

அதற்பின் கொசுவும் நுளம்பும் ஈயும் தேனீயும் தும்பியும் விட்டில் பூச்சிகளும் இவைபோன்ற மற்றும் பல ஜீவன்களும் ஸ்பரிஸ ரஸ கந்த ரூபத்தினையும் அறிவன வாகையினுல் அவை சதுரிந்திரிய ஜீவன்க ளென்று சொல்லப்படும். நிர்விகார ஸ்வஸம் வேதன ஞானபாவனை யில்லாமல் ஸ்பரி சன ரஸன கிராண சக்ஷுரிந்திரிய விஷய சுகானுபவங்களில் அபிமுகமாகிய பஹிராத் மர்களினுல் சதுரிந்திரியஜாதி நாமகர்மத்தினை

ஸ்வீகரிக்கப்பட்டது. அதனுதயத்தினுல் வீரி யாந்தராய ஸ்பரிசன ரஸன கிராண சக்ஷுரிந் திரியங்களின் ஆவரண க்ஷயோபசமங்களைப் பெற்று ஸ்ரோத்திரேந்திரிய மனே இந்திரிய ஆவரண உதயத்தினை யடைந்து, சதுரிந்திரி யங்களையுடையனவாகி மனமில்லாதவைகளா கின்றன. அதன் பிறகு தேவர் மனுஷ்யர் நரகர் திரியக்குகள் என்று சொல்லப்பட்ட இந்த ஜீவன்கள் ஸ்பரிச ரஸ கந்த வர்ண சப்தங்களை அறிவனவாகையால் இவை பஞ் சேந்திரிய ஜீவன்களென்று கூறப்படும். இவற்றில் திரியக் பஞ்சேந்திரிய ஜீவன்கள் ஜலசரங்களும் ஸ்தலசரங்களும் ஆகாச சரங் களும் ஆவன. தேவ மனுஷ்ய நாரக ஜீவன்களெல்லாம் பஞ்சேந்திரிய ஜீவன்கள்.

திரியக் ஜீவன்களில் ஏகேந்திரிய விக லேந்திரிய பஞ்சேந்திரிய ஜீவன்களுமுள. அவற்றுள் ஜல ஸ்தல ஆகாச சரஜீவன்கள் பலவும் அபலங்களும் ஜலசரங்களில் மகர மும் ஸ்தலசரங்களில் அஷ்டாபதமும் ஆகாச சரங்களில் பேருண்டமும் இவை முதலிய சில ஜீவன்கள் பலமுள்ளவைகளுமாவன. நிர்த்தோஷ பரமாத்ம ஸ்வரூபபாவனையா லேற்படும் ஞானனந்த லக்ஷண சுகத்திற்கு

மாறுதலாகிய பஞ்சேந்திரிய விஷய சுகங் களில் ஆஸக்தியினையுடைய பஹிர்முகஜீவன் களினுல் பஞ்சேந்திரிய ஜாதி நாமகர்மத் தினை யடைந்து அதனுதயவசத்தினுல் வீரி யாந்தராய ஸ்பரிசன ரஸன கிராண சக்ஷு ஸ்ரோத்திரேந்திரிய க்ஷயோப சமங்களைப் பெற்று மனே இந்திரிய ஆவரண உதயத் தினை யடைந்ததாகிய சில ஜீவன்கள் பகுத் தறிவிற்குக் காரணமாகிய மனமில்லாதவை யாகி அஸஜ்ஞிபஞ்சேந்திரிய ஜீவன்களா வன. மனே இந்திரிய ஆவரண க்ஷயோப சமத்தினையும் பெற்ற சில ஜீவன்கள் ஸஜ்ஞி பஞ்சேந்திரிய ஜீவன்களென்று கூறப்படும். அவற்றுள் நாரக மனுஷ்ய தேவஜீவன்க ளெல்லாம் ஸஜ்ஞிபஞ்சேந்திரிய ஜீவன்களே. திரியக்பஞ்சேந்திரிய ஜீவன்களில் ஸஜ்ஞி களும் அஸஜ்ஞிகளுமாவன. ஏகேந்திரியம் முதல் சதுரிந்திரியம் வரையிலுள்ள ஜீவன் கள் அஸஜ்ஞிகளேயாவன.

எறும்பு முதலிய ஜீவன்கள் வாசனை முதலிய விஷயத்தை ஸ்வீகரிக்கின்ற தாகை யால், அவைகளுக்கு மனம் இல்லையென்று சொல்லுவது எப்படியெனில்? அவைகளுக்கு இந்திரிய ஜாதிஸ்வபாவத்தினுல் விஷயங்

களை ஸ்வீகரிக்கும் சக்திமாத்திரம் உண்டே தவிர மற்ற விஷயங்களைப் பகுத்தறியும் சக்தி இல்லையாகையால் அவை மனம் இல்லாதவைகளேயாம். மனம் என்பது முக்காலத்திலும் மூவுலகத்திலும் வர்த்திக்கின்ற விஷயங்களை அறியும் கேவலஞானத்தையுடைய ஞானியினுல் உபதேசிக்கப்பட்ட சகல தத்வஸ்வரூபங்களையும் பரோக்ஷத்தினுலறியக்கூடியது மாகின்றதால், கேவல ஞானஸமானமுமாகும். அதற்பின் தேவர்கள் பவண வியந்தர ஜ்யோதிஷ்க கல்பவாஸிபேதத்தினுல் நான்கு விதத்தினராவார்கள். மனிதர்கள் போகபூமி மனிதர்கள், கர்மபூமிமனிதர்கள் என இரண்டு விதமாவார்கள். திரியக்ஜீவன்கள் திரஸ ஸ்தாவர முதலிய அவாந்தர பேதங்களினுல் பஹுப்பிரகாரமாவன. நாரகர்கள், முதல் நரகம் முதல் ஏழாவது நரகம் வரையிலுள்ள ஸ்தான பேதத்தினுல் ஏழுவிதமாவர். இங்ஙனமாகிய நான்கு கதிகளினின்றும் பின்னமாகிய லக்ஷணத்தினையுடையது ஸித்தகதி. அந்த ஸித்தஜீவனுக்கு ஸமானமாகிய தம்முடைய சுத்தாத்ம பாவனையில் பரிணமியாத ஜீவன்களினுல் ஸ்வீகரிக்கப்பட்ட சதுர்க்கதி நாமகர்மங்களின் உதய

வசத்தினுல் தேவாதிகதிகளில் ஜீவன்கள் பிறந்தும் இறந்தும் சுழல்கின்றன.

இவ்விதமாகிய நான்கு கதிகளுள் ஜீவன்கள் முன்பந்தித்த கதிநாமமும் ஆயுஷ்யமும் க்ஷயத்தினையடையும்பொழுது தத்தம் பரிணுமானு ஸாரத்தினுல் மற்ருெருகதியினையும் மற்ருேராயுஷ்யத்தினையு மடைவதாகும். கதிநாம கர்மத்துடன் அந்தந்தக் கதிகளுக்கு யோக்கியமாகிய ஜாதி சரீரம் இந்திரியம் முதலியமற்ற நாமகர்மங்களையும் ஆயுஷ்யத்தினையும் இதரமாகிய ஞானுவரணீயம் முதலிய மற்றக் கர்மங்களையும் ஜீவன்கள் தத்தம்முடையசுபாசுப பரிணுமங்களால் பந்தித்து அவைகளின் ஸ்திதி க்ஷயத்தினுல் மறுபடியும் மற்ருெரு கதியினையும் மற்ருேராயுஷ்யத்தினையு மடைந்து அவைகளால் ஏற்படும் சுக துக்கங்களை அனுபவிப்பனவாகி இந்தக் கிரமத்தினுல் சம்ஸாரசக்கரத்துள் ஜீவன்கள் சுழல்வனவாம்.

இவ்விதமாகிய சதுர்க்கதிகளில் வர்த்திக்கப்பட்ட ஜீவன்கள் சரீரத்துடன் கூடினவர்த்தனையினை யுடையவைகளென்று சொல்லப்பட்டன. கிட்டகாளிகைகளிலகன்ற ஸ்வர்ணத்தைப் போல ரத்னத்திரய பரிணுமத்தினுல் சரீரம் முதலிய சமஸ்தமாகிய அன்

னியத்திரவியங்களின் நின்றும் நீங்கித் தம தியல்பினையடைந்த ஜீவர்கள் ஸித்த பரமேஷ்டிகளென்று சொல்லப்படுவார்கள். மேற்கூறிய சதுர்க்கதிகளில் வர்த்திக்கும் சம்ஸார ஜீவர்கள், பவ்விய அபவ்வியபேதத்தினுல் இருதிறமாவார்கள். ஸம்மியக்தரிசன ஞான சாரித்திரங்களினுல் கேவலஞானம் முதலிய ஆத்மகுணங்கள் வியக்தியினையடைவதாகிய மோக்ஷத்தினையடையும் சக்தியுடைய ஜீவர்கள் பவ்விய ஜீவர்களாம். எக்காலத்தும் எவ்விதத்திலும் மோக்ஷத்தினையடையும் சக்தியில்லாத ஜீவர்கள் அபவ்விய ஜீவர்களாம்.

முன் சொன்ன ஐந்து விதமாகிய இந்திரியங்களும் ஆறு விதமான காயங்களும் நிச்சய நயத்தினுல் ஜீவன்களல்ல. பின்னை எது ஜீவனென்ருல்? அவைகளுக்குள் உளவாகிய ஞானஸ்வருபத்தினை ஜீவனென்று சொல்லப்படும். அனுபசரித அஸத்பூத வியவஹார நயத்தினுல் ஐந்துவிதமான இந்திரியங்களும் ஆறுவிதமான காயங்களும் அசுத்த நிச்சயநயத்தினுல் பாவேந்திரியங்களும். ஜீவஸ்வருபங்களென்று சொல்லப்படுமே தவிர சுத்த நிச்சயநயத்தினுல் அவற்றுள் அதீந்திரியமும் அமூர்த்தமும் கேவலஞானம் முதலிய அனந்தகுண ஸமூஹங்களை

யுடைய ஸ்வரூபமே ஜீவஸ்வரூபமாகும். மற்றும் ஜீவன் தான் எல்லாவஸ்துக்களையும் அறியும், காணும், சௌக்கியத்திற்கு இச்சிக்கும், துக்கத்திற்குப் பயத்தினையடையும், நன்மை தீமைகளைச் செய்யும்; அவற்றின் பலன்களை அநுபவிக்கும். இங்ஙனமாகிய கிரியைகள் ஜீவனுக்கே தவிர அதன் சம்பந்தமாகிய கர்ம நோகர்மங்களுக்கும் இதர திரவியங்களுக்கும் எப்பிரகாரத்தினாலும் ஆகா.

இவ்விதமாக ஜீவபதார்த்தத்தினுடைய ஸ்வரூபத்தினை வியவஹார நயத்தினால் பலவாகிய பரியாயங்களினால் குணஸ்தான மார்க்கணாஸ்தான ஜீவஸ்தானம் முதலியவைகளுள்ளும் சதுர்க்கதிகளுள் நாம .கர்மோதயத்தினால் ஸ்வீகரிக்கப்பட்ட சரீர சம்ஸ்தான ஸம்ஹனனம் முதலிய பஹிரங்க ஆகாரங்களிலும் அப்பியந்தரமான அசுத்தமாகிய ராகத்வேஷ மோஹங்களுள்ளும் நிச்சயத்தினால் ஸஹஜ சுத்த ஞான பரிணாமத்திலும் பரிணமிக்கும்படியான தன்மையினை யறிந்து அதன் பிறகு இவ்விதமாகிய ஞான குணமில்லாமல் ஜடஸ்வரூபத்தினையுடையது அஜீவபதார்த்தமென்று அறியத்தகுந்தது.

இரண்டாவது ஜீவபதார்த்த அத்தியாயம் முற்றும்

3-வது அஜீவபதார்த்த அத்தியாயம்

ஆகாசத்திரவியம், காலத்திரவியம், புத்கலத்திரவியம், தர்மத்திரவியம், அதர்மத்திரவியம் என்னுமிவற்றுள் ஜீவனது குணங்களாகிய ஞான தரிசனங்கள் முதலியன எவ்விதத்திலு மில்லையாகையினுல் ஆகாசம் முதலிய ஐந்து திரவியங்களும் அசேதனங்களேயென்று சொல்லப்பட்டன. ஜீவத்திரவியம் ஒன்றே சேதனமாகும். மேற்கூறிய ஆகாசம் முதலிய ஐந்து திரவியங்களுக்கும் சுக துக்க பரிஞானம் ஹிதத்தினை விரும்பல் அஹிதத்திற்கு அஞ்சுதல் என்பன முதலிய சேதன ஸ்வபாவங்கள் எக்காலத்திலும் எவ்விதத்திலும் இல்லையாகையால் அவைகளை அஜீவ பதார்த்தங்களென்று ஸர்வஞ்ஞர் உபதேசித்துளர். புத்கலத்திரவிய பரியாயமாகிய சமசதுரஸ்ரம் முதலிய ஆறுவித சம்ஸ்தானங்களும் ஔதாரிகம் முதலிய சரீர சம்பந்தங்களான ஐந்து விதமான ஸங்காதங்களும் மற்றுமுள்ள சப்தம் முதலியவைகளும் புத்கலத்திரவியத்தின் குணங்களாகிய ஸ்பரிச ரஸ வர்ண கந்தம் முதலியவைகளும் ஜீவத்திரவியத்துடன் பாலும் நீரும் கலந்தது

போல ஒன்ருகச் சேர்ந்திருந்தாலும் அவைக ளெல்லாம் நிச்சயத்தினுல் ஜீவத்திரவியத்தி னின்றும் வேருனவைகளேயாவன.

அங்ஙனமாகில் ஜீவஸ்வரூபம் பின்னே என்னவென்ருல் ? பஞ்சவர்ணம் பஞ்சரஸம் இருவகைக் கந்தம் அஷ்ட ஸ்பரிசம் பல வாகிய சப்தம் முதலியவைகளில்லாததும், அனுமான லக்ஷணத்தினுலும் பரோக்ஷ ஞானத்தினுலும் பிரத்தியக்ஷமாக அறியக் கூடாததும், நாற்சதுரம் முதலிய சம்ஸ் தானங்களி லகன்றதும், அஸாதாரணமான சேதன குணத்தினையுடையதுமென்று அறிய வும். திரவிய க்ஷேத்ர கால பவ பாவங்க ளென்னும் ஐந்து விதமான சம்ஸாரங்களில் வர்த்திக்கப்பட்ட ஜீவன்கள் ஆசை கோபம் முதலிய ஸ்னிக்த பரிணமங்களையுடையன வாம். அதனுல் ஞானவரணீயம் முதலிய திரவிய கர்மங்கள் பந்தமாகும். அந்தக் கர்மங்களின் உதயத்தினுல் அவை நான்கு கதிகளில் மாறி மாறி அடைவனவாம். அங்ஙனமடைந்த ஜீவன்களுக்கு ஔதாரிகம் முதலிய சரீரங்களாகும். அச்சரீரத்திற்குத் தக்கவாறு இந்திரியங்களமையும். அவற்ருல் ஸ்பரிசம் முதலிய விஷய ஸ்வீகாரமாம்.

அப்படி விஷயங்களை ஸ்வீகரிக்கின்ற போது இஷ்ட விஷயத்தில் ராகமும் அனிஷ்ட விஷயத்தில் துவேஷமும் ஆகும். அதனால் மறுபடியும் கர்மபந்தமாகும்.

இவ்விதத்தினால் சம்ஸாரசக்கரச் சுழற்சியுள் ஜீவன்கள் அபவ்வியா பேக்ஷையால் ஒருக்காலும் நீங்காதனவும் பவ்வியாபேக்ஷையால் நீங்கக்கூடியனவுமாகும். இவ்விதமாகிய ஜீவ அஜீவ பதார்த்தங்கள் அபரிணாமிகளாகில் புண்ணிய பாபம் முதலிய மற்ற ஏழு பதார்த்தங்களும் உண்டாகா. கதஞ்சித் பரிணாமத்தை யுடையவைகளாகையினாலேயே மற்ற ஏழு பதார்த்தங்களுமாகின்றன. அங்ஙனமாகிலும் அந்தப் புண்ணிய பாபம் முதலாகிய ஏழு பதார்த்தங்களுக்கு ஜீவ அஜீவ பதார்த்தங்களே மூலகாரணமாக இருப்பதாலும், அந்த ஏழு பதார்த்தங்களுடைய பிரயோஜனம் ஜீவ அஜீவ பதார்த்தங்களினாலேயே அடையப்படுகின்ற தாகையினாலும் அவை ஏழு பதார்த்தங்களும் இந்த ஜீவ அஜீவ பதார்த்தங்களினுடைய பரியாயங்களேயாவன. ஆகையால் அவைகளைப்பற்றிப் பேதமாக ஏன் சொல்லவேண்டுமென்றால், பவ்வியர்களுக்கு ஸ்வீகரிக்கவும் நீக்க

வும் கூடிய தத்துவங்களைத் தெரிவிக்கும் பொருட்டு சொல்லப்படும். எப்படி யென்றால்? துக்கம் நீக்கத்தகுந்ததாகும். அதற்குக் காரணம் சம்ஸாரம். சம்ஸாரத்திற்குக் காரணம் ஆஸ்ரவபந்த பதார்த்தங்கள். அவையிரண்டிற்கும் காரணம் மித்தியாதரிசன ஞான சாரித்திரமாவன. சுகம் ஸ்வீகரிக்கத்தகுந்ததாகும். அதற்குக் காரணம் மோக்ஷம். மோக்ஷத்திற்குக் காரணம் ஸம்வர நிர்ஜ்ஜரா பதார்த்தங்கள். அவை யிரண்டிற்கும் காரணம் ஸம்மியக் தரிசன ஞான சாரித்திரமாவன.

இவ்விதமாக முன் சொன்ன ஜீவ அஜீவ பதார்த்தங்களோடு புண்ணிய பாபம் முதலாகிய ஏழு பதார்த்தங்களும் கூடி நவபதார்த்தங்களென்று சொல்லப்படும். ஜீவர்களுக்குக் கதஞ்சித் பரிணமம் உண்டாகையால், அஞ்ஞான ஜீவர்கள் நிர்விகாரமான சுத்தாத்ம ஸ்வரூபபாவனையில் நீங்கினவர்களாகிப் பாப ஆஸ்ரவபந்த பதார்த்தங்களுக்குக் கர்த்தாக்களாவார்கள். ஒருக்கால் மித்தியாத்துவ கர்மத்தினுடைய மந்த உதயத்தினால் இனிமேல் இவ்விதமாகிய போகங்களை இதனால் அடையவேண்டுமென்று நிதானசல்லியத்துடன் கூடி மேல்வரும் காலத்துப்

பாபத்தை அனுபந்தியாகவுடைய பாபானு பந்தி புண்ணியத்திற்கும் கர்த்தாக்களாவர். ஞானி ஜீவர்கள் நிர்விகாரமான ஆத்மதத்வ விஷயத்தில் ருசியும் அதையே அறிகின்ற அறிவும் அந்தஸ்வருபத்திலேயே சலன மில்லாமல் வர்த்திப்பது மாகிய இந்தஅபேத ரத்னத்திரய பரிணமத்தினல் ஸம்வர நிர்ஜ் ஜரா மோக்ஷபதார்த்தங்களுக்குக் கர்த்தாக்க ளாவார்கள்.

யாதொரு பொழுது முன் சொன்ன அபேதரத்னத்திரய பரிணமத்தில் ஸ்திர மாகப்பரிணமிப்பதற்கு சக்தியில்லாதவர்களா யின் பரமாத்ம ஸ்வரூபத்தினை யடைந்த அருகர் ஸித்தர்களையும் அவர்களை ஆராதிக் கின்ற ஆசார்ய உபாத்தியாய சாதுக்களையும் மிகுந்த பக்தியினல் பூஜித்தலாகிற சம்ஸார விநாசத்திற்குக் காரணமானதும் பரம்பரை யினல் முக்திக்குக் காரணமானதும் தீர்த்தகர நாமகர்மப் பிரக்ரதி முதலிய புண்ணியானு பந்தி விசிஷ்ட புண்ணியத்திற்குக் காரணமா னதுமாகிய சுபபரிணமங்களை இச்சையில் லாமல் நிதானசல்லியமற்ற பரிணமத்தினல் செய்வதால் புண்ணியபதார்த்தத்திற்கும் கர்த் தாக்களாவார்கள்.

இவ்விதத்தினுல் அஞ்ஞானிகள் பாபம் முதலிய நான்கு பதார்த்தங்களுக்கும் ஞானிகள் ஸம்வரை முதலிய மூன்று பதார்த்தங்களுக்கும் கர்த்தாக்களாவார்கள்.

மூன்றவது அஜீவ பதார்த்த அத்தியாயம் முற்றும்

4-வது புண்ணிய பாபபதார்த்த அத்தியாயம்

யாவை சில ஜீவன்களுடைய மனதில் மோஹமும் ராகமும் த்வேஷமும் சித்தப் பிரஸாதமுமான பரிணமம் உண்டோ அந்த ஜீவன்களுக்கு சுப அசுப பரிணமங் களாவன தரிசன மோஹனீயகர்மம் உதய மாகில் அதனுல் ஜீவன்களுக்கு ஏற்படும் தத் துவார்த்த சிரத்தான மில்லாத பரிணமமும், சாரித்திரமோஹனீயகர்மம் உதயமாகில், அத னுலேற்படும் ராகத்வேஷ பரிணமங்களும் மோஹமென்று சொல்லப்படும். அவ்வித மாகிய மோஹனீயகர்மத்தினுடைய உதயம் மந்ததரமாகில் மனதில் ஏற்படும் விசுத்தி பரிணமம் சித்தப் பிரஸாதமென்பது. அவற் றுள் மோஹமும் த்வேஷங்களும் அசுப பரிணமங்களேயாவன. ராகபரிணமத்தில் பஞ்

சேந்திரிய விஷயங்களில் செல்லும் அப்பிர சஸ்தராகம் அசுபபரிணமமாகும். தான பூஜா விரதானுஷ்டானங்கள் முதலிய பிரசஸ்தராகமும் சித்தப் பிரஸாத பரிணமமும் சுபபரிணமங்களாகும்.

ஜீவன்களுடைய சுபபரிணமம் பாவ புண்ணியமென்பதாம். அசுபபரிணமங்கள் பாவ பாபமென்பதாம். அந்த இரண்டு பரிணமங்களும் நிமித்தமான விடத்துப் புத்கலத் திரவிய ஸம்பந்தமான கார்மணவர்க்கணைகள் திரவிய புண்ணிய பாபங்களாகிற பேதங்களை யடைவனவாம். ஜீவன்களினுல் திரவிய கர்மங்களின் பலமாகிய சுக துக்க ரூபமாகிய விஷயங்களை நிச்சயமாக ஸ்பரிசனேந்திரியம் முதலிய இந்திரியங்களால் அனுபவிக்கப் படும் காரணத்தினுலும் திரவிய கர்மங்கள் மூர்த்தமாகிய கார்மணவர்க்கண ரூபமாகையினுலும் மூர்த்தங்களே யென்றறியத்தக்கன.

ஜீவன்களிடத்து முன் கட்டப்பட்ட புராதன கர்மம் மூர்த்தமாதலால், நூதனமாகிய மூர்த்த கர்மங்களை ஸ்வீகரித்து பந்தத்தினை யடையும். ஜீவன்கள் ஸ்வபாவத்தினுல் அமூர்த்தமாகிலும், அனுதி கர்மபந்த வசத்தினுல் மூர்த்தத்தினை அடைந்து, மூர்த்தமாகிய

நூதன கர்மங்களை ஸ்வீகரித்து பந்தத்தினை அடைவதற்குக் காரணமாகின்றன. கர்மங்கள் எவ்விதத்திலும் மூர்த்தங்களேயென்று அறியவும்.

நான்காவது புண்ணிய பாப பதார்த்த அத்தியாயம் முற்றும்

5-வது ஆஸ்ரவ பதார்த்த அத்தியாயம்

பஞ்சபரமேஷ்டிகளின் குணானுராகம் முதலிய பிரசஸ்தராகமும் ஜீவதயவோடு கூடின மன வசன காய வியாபாரமாகிய அனுகம்பையும் மனதின்கண் குரோத மான மாயா லோபங்கள் இல்லாமையாகிற பரிணாமமும் ஆகிய இப்பரிணாமங்கள் திரவிய புண்ணியாஸ்ரவத்திற்கு நிமித்தமாகிய பாவபுண்ணியாஸ்ரவங்களாவன. அவற்றுள் பிரசஸ்தராகம் எப்பெற்றியதெனில்? அருகர் ஸித்தர் ஆசாரியர் உபாத்தியாயர் சர்வஸாதுக்கள் என்ற பஞ்சபரமேஷ்டிகளிடத்தில் உண்மையான பக்தியும், ஜினராலுபதேசிக்கப்பட்ட இல்லறம் துறவறமாகிய இருவகைத் தர்மங்களில் சக்திக்குத் தகுந்தவாறு உண்மையுடன் பிரயத்னமாய் நிகழ்வதும் குருக்களுக்கு அனுகூலவர்த்தனையினைச் செய்தலுமாகிய இந்தச்

சுப பரிணமங்களே பிரசஸ்தராக மென்று சொல்லப்படும்.

குற்றமற்ற பரமாத்ம ஸ்வருபத்திற்கு மாறுதலாகிய ஆர்த்த ரௌத்திரத் தியானங்களினல் ஸ்வீகரிக்கப்பட்ட ஞானவரணீயம் முதலிய மூலோத்தர பேதகர்மப் பிரக்கிரதிகளை ஆசை கோபம் முதலிய விகல்பங்களில் நீங்கிய தர்மத்தியானச் சுக்கிலத் தியானங்களினல் விநாசத்தினை அடைவித்துப் பசி தாகம் ஆசை கோபம் பயம் மோஹம் சிந்தனம் மூப்பு பிணி மரணம் வியர்வை வருத்தம் மதம் கொண்டாட்டம் ஆச்சரியம் பிறப்பு நித்திரை விஷாதம் என்னும் பதினெண் குற்றங்களில் நீங்கிக்கேவல ஞானம் கேவல தரிசனம் அனந்த சுகம் அனந்தவீரியம் என்னும் அனந்த சதுஷ்டயத்தையுடையவர்களாகியவர்கள் அருகர்களாவார்கள். ஞானவரணீயம் முதலிய எட்டுக்கர்மங்களிலகன்று க்ஷாயிகஸம் மியக்துவம் அனந்த ஞானம் அனந்த தரிசனம் அனந்த சுகம் அனந்த வீரியம் அவ்யாபாதத்துவம் அகுருலகுத்வம் அவகஹனத்வம் என்னும் எட்டுக் குணங்களையுடையவராகி லோகத்தினுடைய உச்சியில் வீற்றிருப்பவர்கள் ஸித்தர்களாவார்கள்.

விசுத்த ஞான தரிசன ஸ்வபாவத்தை யுடைய ஆத்மதத்துவ விஷயத்தில் நிச்சய ருசியும் அதனையே அறிகின்ற அறிவும் அதனிடத்துச் சலனமில்லாமல் வர்த்திப்பதும், அன்னியத் திரவியங்களில் இச்சையில்லாமல் ஆத்மத் திரவியத்தினிடத்திலேயே நிகழ்வதும், தனது சக்தியை ஒளியாமல் அதனையே அனுஷ்டிப்பதுமாகிய இந்த நிச்சய பஞ்சாசாரங்களையும் இவற்றை ஸாதிக்கும் படியான வியவஹார பஞ்சாசாரங்களையும் ஆகிய இவ்விருவகை ஆசாரங்களையும் தாங்களும் ஆசரித்து இதர பவ்வியர்களையும் ஆசரிக்கும்படி செய்விக்கின்றவர்கள் ஆசாரியர்களாவார்கள். பஞ்சாஸ்திகாய ஷட்திரவிய ஸப்த தத்துவ நவ பதார்த்தங்களுள், சுத்த ஜீவாஸ்திகாய, சுத்தஜீவத்திரவிய, சுத்தஜீவ தத்துவ சுத்த ஜீவபதார்த்தங்களே நிச்சயத்தினால் ஸ்வீகரிக்கத் தகுந்தவைகளென்றும், பேதாபேத ரத்னத்திரய லக்ஷணமாகிய மோக்ஷ மார்க்கத்தினையும் பவ்வியர்களுக்கு உபதேசித்துத் தாங்களும் பாவிக்கின்றவர்கள் உபாத்தியாயர்களாவார்கள். நிச்சயமாகிய ஞானாராதனை தரிசனாராதனை சாரித்திராராதனை தபாராதனை யென்னும் நான்கு விதமாகிய

ஆராதனைகளினால் சுத்தாத்ம ஸ்வரூபத்தை ஸாதிக்கின்றவர்கள் ஸாதுக்களாவார்கள்.

இங்ஙனமாகிய பஞ்ச பரமேஷ்டிகளுள் ஏற்படுகின்ற பக்தி, பிரசஸ்த ராகமென்று சொல்லப்படும். அந்தப் பிரசஸ்த ராகத்தினை அஞ்ஞான ஜீவர்கள் இதனால் இனி இவ் விதமாகிய போகங்களை அடையவேண்டு மென்கிற நிதானத்துடன் கூடிச் செய்வார் கள். ஞானிகள் விகல்பமில்லாத ஆத்ம பாவனையில் எக்காலத்தும் வர்த்திக்கமுடியாத தால், பஞ்சேந்திரிய விஷய ராகங்களையும் குரோத மான மாயா லோபங்களையும் நீக்கும் பொருட்டுச் செய்வார்கள்.

அதன்பின் அநுகம்பையினுடைய தன்மை எப்படிப்பட்டதென்றால், பசியினை யும் தாகத்தினையும் மற்றும் ரோகம் முதலிய பலவாகிய துன்பங்களையும் அடைந்தபிராணி களைக் கண்டு மனமிரங்கித் தயவினால் அத் துன்பங்கள் நீங்கும் விதமாகிய பிரதீகாரத்தி னைச் செய்வது அநுகம்பையாகும். மிகுந்த பசியினாலும் மிகுந்த தாகத்தினாலும் அசாத் தியரோகம் முதலியவைகளினாலும் பீடிக்கப் பட்ட பிராணிகளைக் கண்டு அஞ்ஞானிகள் எந்த உபாயத்தினால் எவ்விதமாக இவற்றிற்

குப் பிரதீகாரத்தினைச் செய்வேன் என்று தாங்கள் மிகுந்த வருத்தத்தை அடைந்தவர் களாகி மேற்கூறிய அனுகம்பையினைச் செய் வார்கள். ஞானிகள் தாங்கள் வருத்தத்தை யடையாமல், தமது பாவனையில் தளர்வின் றித் தங்கள் சக்திக்குத் தக்கவாறு பிரதீகாரத்தி னைச் செய்வார்கள்.

மேலும் அப்படி துக்கிதமானவர்களைக் கண்டு விசேஷ ஸம்வேக வைராக்கிய பாவனைகளை யடைவார்கள். கோபம் கர் வம் மாய்கை லோபம் என்னுமிவைகளில் வர்த்தித்து ஜீவர்கள் சித்த காலுஷ்யத்தினை அடைவார்கள். அவ்வித காலுஷ்யத்தில் நீங்குவது அகாலுஷ்ய மென்பது. இவ்வித மாகப் பிரசஸ்த ராகம் அனுகம்பை அகா லுஷ்ய சித்தம் என்கிற இந்தப் பரிணாமங் கள் திரவிய புண்ணியாஸ்ரவ காரணங்களா வன. இப்பரிணாமங்கள் மித்தியாதிரஷ்டி களுக்கு மோஹனீய கர்மத்தின் மந்த மந்ததர மந்ததம உதயத்தினாலும் ஸம்மியக் திரஷ்டி களுக்கு அந்த மோஹனீய கர்மத்தின் உபசம க்ஷயோபசம க்ஷயங்களாலும் ஆவன. இங் ஙனமாகிய சுபபரிணாமங்கள் ஸம்மியக்துவ பரிணாமத்துடன் கூடியவைகளாகில் பரம்

பரையினுல் மோக்ஷத்திற்குக் காரணமான தர்மானுபந்தி புண்ணியாஸ்ரவத்திற்குக் காரணமானவைகளும் மித்தியாத்துவத்துடன் கூடியவைகளாகில் பிறகு பாபத்தை அடைவிக்கின்ற பாபானுபந்தி புண்ணியாஸ்ரவத்திற்குக் காரணமானவைகளுமாகின்றன.

இப்பரிணுமங்களுடன் புண்ணியா ஸ்ரவத்திற்குக் காரணமான மற்றுமுள்ள பலவாகிய சுபபரிணுமங்களை இதர ஆகமக் கிரந்தங்களில் தெரிவிக்கப்பட் டிருப்பதை அறிந்து கொள்ளவும். அதன் பிறகு பாபாஸ்ரவம் எத்தன்மையதென்ருல்? விகதைகள் முதலிய பிரமாதங்களை மிகுதியாகவுடைய நிகழ்ச்சி குரோத மான மாயா லோபங்களாகிய சித்த காலுஷ்ய பரிணதி ஸ்பரிசம் முதலிய விஷயங்களில் மிகுதியான பற்றுதல் பிறருக்குப் பரிதாபத்தினைச் செய்தல் பிறரைப் பழித்தல் பார்த்தும் பாராமலும் பிறருக்கு உண்டானதும் இல்லாததுமாகிய தோஷங்களைச் சொல்லுவதாகிய அபவாத கதனம் என்றிவை முதலான அசுப பரிணுமங்கள் அஸாதவேதனீயம் முதலிய திரவிய பாபாஸ்ரவத்திற்குக் காரணமான பாவ பாபாஸ்ரவங்களாவன.

இவைகளின் நிமித்தத்தினுல் மன வசன காயங்களின் மூலமாக அப்பிரசஸ்த பிரக்

கிரதிகள் வந்துசேருவது திரவியபாபாஸ்ரவ மென்பதாம். மற்றும் ஆஹார பய மைதுன பரிக்கிரஹங்கள் என்னும் நான்கு வித ஸஞ் ஞைகளும் கிருஷ்ண நீல கபோதங்களென் னும் மூன்று வித அசுப லேஸ்யா பரிணமங் களும் பஞ்சேந்திரியங்களில் வசமான தன் மையும் ஆர்த்த ரௌத்திரத் தியானமும் மித் தியாத்துவத்தோடு கூடின ஞானமும் தரிசன சாரித்திர மோஹனீயமும் இவை முதலாக அஸங்கியாத லோக மாத்ரமாகிய துஷ்பரி ணம ஸமூஹங்கள் திரவிய பாபாஸ்ரவத் திற்குக் காரணங்களாவன.

ஐந்தாவது ஆஸ்ரவ பதார்த்த அத்தியாயம் முற்றும்.

6-வது ஸம்வர பதார்த்த அத்தியாயம்

ஸம்மியக் ஞானிகள் ஸம்வரைக்குக் காரணமான மோக்ஷமார்க்கத்திற் பொருந்தி ஐந்து விதமாகிய இந்திரியங்களையும் குரோத மான மாயா லோபங்களென்னும் கஷாயங் களையும் முன் சொன்ன நான்கு விதமான ஸஞ்ஞைகளையும் எவ்வளவுக் கெவ்வளவு நீக்குகின்றார்களோ அவ்வளவுக் கவ்வளவு

அவர்களுக்குப் பாவபாபாஸ்ரவம் தடைப் படுவதாகும்.

ஜீவன்களுக்கு நரக துக்கம் முதலியவை களுக்குக் காரணமாகையால் பாபகர்மங்கள் நீக்கத்தகுந்தவைகளாவதுபோலவே மோக்ஷ சுகாபேக்ஷையால் தேவசுகம் முதலிய கல்பித மாகிய சம்ஸார சுகமும் நிச்சயத்தினால் துக்க ரூபமாகையால் சுபாசுப கர்மங்களை அவசி யம் ஸம்வரை செய்யவேண்டியதாகையால் அங்ஙனம் புண்ணிய பாப கர்மங்களிரண்டை யும் தடுக்கும்படியாகிய பரிணாமங்கள் எவை யென்றால்? சுக துக்கங்களுள் ஸமபாவத் தினையுடைய முனிவரனுக்குச் சுபமும் அசு பமுமாகிய எல்லா அன்னியத் திரவியங்க ளுள்ளும் ராகம் த்வேஷம் மோஹம் என் றிந்த விபாவபரிணாமங்கள் இல்லையாகில் அந்த முனிவரனுக்கு ஸாதவேதனீயம் முத லிய சுபகர்மங்களும் அஸாதவேதனீயம்முத லிய அசுபகர்மங்களும் ஆஸ்ரவிப்பதாகாது.

மற்றும் மன வசன காயங்களினால் புண் ணிய பாபங்களில் பரிணமிக்காத சுத்தோப யோகத்துடன் கூடின பரமயோகிகளுக்கு சுபாசுப கர்மங்களின் ஆஸ்ரவமின்றி யிருந்த விடத்துச் சகல கர்மங்களுக்கு ஸம்வரையாவ

தாகும். ஆத்மனுடைய சுபாசுப பரிணுமங்கள் முறையே புண்ணிய பாபகர்மாஸ்ரவத்திற்குக் காரணங்களாவன. அப்பரிணுமங்களின் விநாசத்திஞல் சகல கர்ம ஸம்வரம் அவசியம் ஆகுமென்று அறியவும்.

ஆறவது ஸம்வர பதார்த்த அத்தியாயம் முற்றும்-

7-வது நிர்ஜ்ஜரா பதார்த்த அத்தியாயம்

அதன் பிறகு நிர்ஜ்ஜரையினுடைய தன்மை எப்படிப்பட்டதென்ருல்? எந்த ஒரு பரம யோகியாகிய முனிவரன் நிர்மலமாகிய சுத்தாத்ம ஸ்வரூபத் தியான பலத்திஞல் சுப அசுப பரிணுமங்களை நீக்கிப் புண்ணிய பாப கர்மங்களுக்கு ஸம்வரையினைச் செய்து சுத்தோப யோகத்துடன் கூடி, அனசனம் ஆவமோதர்யம் விரத்தி பரிஸங்கியானம் ரஸபரித்தியாகம் விவிக்தசை யாஸனம் காயக்கிலேசம் என்னும் சுத்தாத்ம பாவனைக்கு ஸஹகாரி காரணங்களாகிய ஆறுவிதமாகிய பாஹ்ய தபங்களோடும் பிராயச்சித்த விநய வையாப்பிரத்ய ஸ்வாத்யாய தியான வியுத்ஸர்க்கமென்னும் ஆத்மசுத்த ஸ்வரூபத்தில் பொருந்துகின்ற லக்ஷணங்க

ளாகிய ஆறுவிதமான அப்பியந்தரதபங்க ளோடும் கூடி வர்த்திப்பானாகில் அந்தப் புருஷன் பஹுவாகிய கர்மங்களினுடைய நிர்ஜ்ஜரையினை அவசியம் செய்வான்.

கர்மங்களினுடைய சக்தியினை விநாசம் செய்யும்படியான மேற்கூறிய பன்னிரண்டு விதமான தபங்களினால் ஏற்பட்ட சுத்தோப யோக பரிணாமம் பாவ நிர்ஜ்ஜரை யென்பது. அந்த சுத்தோப யோக ஸாமர்த்தியத்தினால் ஆத்மனிடத்தில் முன்னால் கட்டப்பட்ட கர்ம புத்கலங்கள் ஆத்மப் பிரதேசத்தை விட்டு நீங்குவது திரவிய நிர்ஜ்ஜரை யென்பதாகும்.

மற்றும் முன் சொன்ன ஸம்வரையுடன் கூடி சுத்தாத்ம ஸ்வரூபத்தைப் பரமகுருவினுடைய உபதேசத்தினாலறிந்து இதரமாகிய எல்லா விஷயங்களினின்றும் நீங்கிப் பல விதமாகிய உபசர்க்கங்கள் நேர்ந்தபொழுதும் ஆத்ம ஸ்வரூபத்தையே சலனத்தையடையாமல் தியானிக்கப்பட்ட ஞானியானவன் கர்மங்களின் நிர்ஜ்ஜரையினை இடைவிடாமல் செய்பவனாவான். ஆத்மத்தியானமே நிர்ஜ்ஜரைக்கு முக்கிய காரணமாகும். அதன்பின் அவ்விதமாகிய தியானத்தின் லக்ஷணமும் அந்தத் தியானம் உண்டாவதற்கு வேண்டிய

காரணமும் எத்தன்மையதென்றால், யாதொரு யோகிகளுக்கு ராகத்வேஷ மோஹ பரிணாமங்களும் மன வசன காயக் கிரியா ரூப வியாபாரமும் இல்லாமலாகின்றனவோ அவை தியானத்திற்குக் காரணமாகும்.

அங்ஙனமாகிய யோகிகளுக்கு சுப அசுப கர்மங்களாகிற விறகுகளைக் கொளுத்தும்படியான லக்ஷணத்தினையுடைய தியானமயமாகிற அக்னி உண்டாவதாகும். எப்படியென்றால், நெருப்பானது பலவாகிய விறகு முதலியவைகளைச் சீக்கிரகாலத்தில் தஹித்துவிடுவதுபோல மித்தியாத்துவம் முதலிய விபாவ பரிணாமங்களில் நீங்கின லக்ஷணமாகிய பெருங்காற்றினால் வீசப்பட்டு அபூர்வ பரமசுக லக்ஷணமாகிய தைலத்தினால் நனைக்கப்பட்டு, சலனமில்லாமல் ஆத்மஸ்வரூபத்தில் வர்த்திக்கும் லக்ஷணமாகிய ஆத்மத்தியானமாகிற அக்கினியும் மூலோத்தரப் பிரக்கிரதி பேதங்களினால் பலவாகிய கர்மங்களாகிற விறகு ஸமூஹங்களைச் சிறிது காலத்திற்குள் தஹிப்பதாகும்.

ஆகமங்களில் உத்தம ஸம்ஹனனமாகிய சரீர பலத்தினை யுடையவர்களுக்கும் பத்து அல்லது பதினான்கு பூர்வாகமங்களை அப்பியசிக்கப்பட்டவர்களுக்கும் தான் தியானமாகு

மென்று சொல்லப்பட்டிருப்பதால் நாம் வசிக்கும் இந்தப் பரத க்ஷேத்திரத்தில் அவஸர்ப்பிணியின் பிரிவாகிய தீக்கால மென்னும் ஐந்தாம் காலமாகிய தற்காலத்தில், மனிதர்களுக்கு உத்கிரஷ்டமாகிய சரீர பலமும் பூர்வாகமங்களின் அப்பியாச ஞானமும் இல்லாத காரணத்தினுல் மேற்கூறிய ஆத்மத்தியானம் இவ்விடத்தில் தற்காலத்தில் வர்த்திக்கப்பட்ட மனிதர்களுக்கு இல்லை யென்று சொல்லும்பக்ஷத்தில் அப்படி யல்ல; ஆகமங்களில் சொல்லப்பட்டிருக்கும் தியானத்திற்கு வேண்டிய மேற்கூறிய நியமங்கள் உத்கிரஷ்டத்தினுல் சொல்லப்பட்டனவாகும்.

ஜகன்னியத்தினுல் கொஞ்சம் ஸ்ருதாப்பியாசத்தினை யுள்ளவர்களும் கூட ஆத்மத்தியானத்தில் வர்த்திக்கலாம். உத்கிரஷ்டமாகிய சரீர பலமிருந்தால்தான் தியானமாகுமென்று சொல்லப்பட்டிருப்பது, சுக்கிலத்தியானுபேக்ஷயினுலாகும். அபூர்வ கரண குண ஸ்தானத்தில் நின்று உபசம க்ஷபக ஸ்ரேணிகளில் ஏறிச் சுக்கிலத் தியானத்தில் வர்த்திக்கு மவர்களுக்கு உத்கிரஷ்டமாகிய சரீர பலம் அவசியம் வேண்டும். மற்றக் கீழ்க்குண ஸ்தானங்களில் தர்மத் தியானத்தில் வர்த்திக்குமவர்களுக்கு உத்கிரஷ்ட

மாகிய சரீரபலம் அவசியம் வேண்டுமென்கிற நியமமில்லை. ஆதலால் இந்தப் பரதக்ஷேத்திரத்தில் தற்காலத்திலும் ஆத்ம ஞானிகளுக்கு தர்மத்தியானம் ஆகுமென்பதற்கு யாதொரு சந்தேஹமுமில்லை.

ஆகையால் இப்பொழுதும் இங்குள்ளவர்கள் ஆத்ம ஸ்வரூபத்தைத் தியானித்து இந்திர பதவியினையும் லௌகாந்திக தேவ பதவியினையும் அடைந்து அங்கு நின்றும் வந்து நிர்வாண யோக்கிய க்ஷேத்திரங்களில் உத்தம மனிதர்களாகப் பிறந்து தீக்ஷையினை யடைந்து மோக்ஷத்தினை யடைவார்களென்றும் ஆகமங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் சிறிது சாஸ்திராப்பியாசத்தினாலேயும் அல்ப பலத்தை யுடையவர்களுக்கும் கூட தியானமாகுமென்று அறிந்து சுத்தாத்ம ஸ்வரூபத்தைப்பற்றித் தெரிவிக்கும்படியானதும் ஸம்வரை நிர்ஜ்ஜரைகளுக்குக் காரணமானதும் ஜனன மரண ஸ்வரூபமாகிய சம்ஸாரத்தினை நீக்கக்கூடியதுமாகிய அத்தியாத்ம சாஸ்திர ஸம்பந்த ஸாரமாகிய உபதேசத்தினைக் கூடுமானவரை சிறிதாகிலும் அறிந்து அதனுல் ஆத்மத்தியானத்தினை அவசியம் செய்தல்வேண்டும்.

ஏழாவது நிர்ஜ்ஜரா பதார்த்த அத்தியாயம் முற்றும்

8-வது பந்தபதார்த்த அத்தியாயம்

ராகத்வேஷ மோஹங்களால் ரஞ்ஜிக்கப் பட்ட ஜீவன்கள் சுபமும் அசுபமுமாகிய பரிணமங்களைச் செய்வனவாம். அப்பரிண மங்கள் காரணமாகப் பலவிதமாகிய ஞாண வரணீயம் முதலிய திரவிய கர்மங்களினல் பந்திக்கப்படுவனவாகும். இளக்கமுள்ள சரீ ரத்தினைத் தூள்கள் வந்தடைவது போல மேற்கூறிய ராகத்வேஷம் முதலிய ஸ்னிக்த பரிணமங்களில் பரிணமிக்கப்பட்ட ஆத்மனை யும் பலவிதமான திரவிய கர்மங்கள் கட்டுவன வாகும். கர்மங்களை ஸ்வீகரிக்கும் ரூபத்தி னல் பிரக்கிரதி பிரதேச பந்தங்களுக்குக் கார ணங்களாகிய மன வசன காயமென்னும் யோகங்கள் பந்தத்திற்குப் பஹிரங்க காரண மாவன: ஸ்திதி அனுபாக பந்த காரணங்க ளாகையால் குரோத மான மாயா லோபங்கள் முதலிய விபாவ பரிணமங்கள் அந்தரங்க காரணமாவன.

மற்றும் மித்தியாத்துவம் அவிரதம் கஷாயம் யோகம் என்னும் திரவிய ரூபத்தி னல் நான்கு விகல்பங்களை யுடையனவாகி உதயத்தினை யடைந்த திரவிய கர்ம ரூப

மாகிற திரவிய பிரத்தியயங்கள் ஞானுவரணீயம் முதலிய எட்டு விதமாகிய கர்மங்களுக்கு பஹிரங்க காரணங்களென்று சொல்லப்பட்டது. அந்தத் திரவிய பிரத்தியயங்களுக்கு ஜீவன்களுடைய ராக த்வேஷம் முதலிய பரிணுமப் பிரத்தியயங்கள் காரணங்களாகும். அவ்விதமாகிய பரிணுமப் பிரத்தியயங்களில் ஜீவன்கள் வர்த்திக்காதபொழுது திரவிய பிரத்தியயங்கள் உண்டாகி யிருந்தும் அந்த ஜீவன்கள் சமஸ்த இஷ்டானிஷ்ட விஷயங்களில் நிர்மமத்துவமாகப் பரிணமிக்கின்ற காரணத்தினுல் நூதனமாகிய கர்மங்களினுல் பந்தத்தினை யடையார்.

ஜீவன்களுக்கு விபாவ பரிணுமமில்லாமலிருந்தும் திரவிய பிரத்தியயங்களின் உதய மாத்திரத்தினுலேயே கர்ம பந்தமாகுமென்ருல் எல்லா ஜீவன்களுக்கும் எக்காலத்தும் எவ்விதத்திலும் கர்ம பந்தமே ஆவதாகும் ; மோக்ஷமாவதற்கில்லை. ஏனென்ருல், சம்ஸார ஜீவன்களுக்கு எப்பொழுதும் திரவிய கர்மங்களின் உதயம் நீங்காமலிருந்து கொண்டே யிருக்கும். ஆகையால் நூதன திரவிய கர்மங்களின் பந்தத்திற்கு உதயத்தினையடைந்த புராதன திரவிய பிரத்தியயங்

களும் யோகங்களும் பஹிரங்க காரணங்க ளாவன. அவைகளுக்கு ஜீவன்களுடைய மித்தியாத்துவம் ராகம் முதலிய பரிணமப் பிரத்தியயங்கள் அப்பியந்தர காரணங்க ளாவன.

எட்டாவது பந்தபதார்த்த அத்தியாயம் முற்றும்.

9-வது மோக்ஷ பதார்த்த அத்தியாயம்

அதன்பிறகு சுத்தாத்ம அனுபவ லக்ஷணமாகிய நிர்விகல்ப ஸமாதியினாலும் ஆகம பாஷையினால் சுக்கிலத் தியானத்தினா லும் ஸாத்தியமாவதாகிய மோக்ஷ பதார்த் தத்தைப்பற்றிச் சொல்லுமிடத்தில் முதலில் கேவலஞான உத்பத்தியென்றும், அருகத்பத மென்றும் ஏகதேச மோக்ஷமென்றும் சொல் லப்படும் பாவமோக்ஷத்தின் தன்மை எப்ப டிப்பட்ட தென்றால்? யாவர் சிலர் ஞானி களுக்கு முன் சொன்ன திரவிய பாவபிரத்தி யயங்கள் கிரமத்தினால் நீங்கினவிடத்து நிச்ச யத்தினால் அந்த ஞானிகளுக்கு பாவாஸ்ர வங்கள் தடைப்படும். அதனால் மோஹ னீயம் முதலிய நான்கு விதமாகிய காதிகர்ம ரூபமாகிய திரவிய கர்மங்களினுடைய ஸம்

வரையும் அதன் பிறகு நிர்ஜ்ஜரையுமாவ தாகும். அங்ஙனமான விடத்து அந்த ஆத்மன் லோகா லோகம் முழுவதையும் அறியவும் காணவும் கூடியதாகிய கேவல ஞான தரிசனங்களை அடைந்து அதீந்திரியமும் யாதொரு பாதை யில்லாததும் அனந்தமுமாகிய பரம சுகத்தினை அடைவதாகும்.

எங்ஙனமெனில் யாதொரு பொழுது பவ்விய ஜீவர்கள் ஆகம பாஷையினால் சொல்லுமிடத்தில் காலலப்தியினையும் அத்தியாத்ம பாஷையினால் சுத்தாத்ம அபிமுக பரிணாம ரூபமாகிய ஸ்வஸம்வேதன ஞானத்தினையும் பெற்று அப்பொழுது முதலில் மித்தியாத்துவம் முதலாகிய தரிசன மோஹனீய கர்மங்களாகிற ஸப்தப் பிரக்கிரதிகளின் உபசமத்தினாலும் க்ஷயோப சமத்தினாலும் ஸராக ஸம்மியக் திரஷ்டிகளாகிப் பஞ்ச பரமேஷ்டிகளின் பக்தி முதலிய பராஸ்ரித தர்மத்தியான ஸஹகாரி காரணத்தினால் ஆத்மாவாகிய நான் நிச்சயத்தினால் அனந்த ஞானம் முதலிய ஸ்வரூபங்களை யுடையவன் என்னும் இவை முதலாகிய ஸ்வரூப பாவனையாகிற ஆத்மாஸ்ரித தர்மத்தியானத்தை யடைந்து ஆகமங்களில்

சொல்லப்பட்ட விதமாக அஸம்யத ஸம்மியக் • திரஷ்டி குணஸ்தானம் முதல் நான்கு குணஸ்தானங்களில் எந்தக் குணஸ்தானத்திலாவது முன்சொன்ன தரிசன மோஹனீயமாகிற ஸப்தப் பிரகிரதிகளின் க்ஷயத்தினுல் க்ஷாயிக ஸம்மியக்துவத்தினை அடைந்து அதன் பிறகு அபூர்வகாணம்முதலிய குணஸ்தானங்களில் பிரதக்த்வ விதர்க்க வீசாரமென்னும் சுக்கிலத் தியானத்தால் வீதராக சாரித்திரத்தினை அடைந்து மற்றச் சாரித்திர மோஹனீய கர்மங்களையும் க்ஷயம்செய்து அதன்பிறகு க்ஷீணகஷாய குணஸ்தானத்தில் அந்தர்முகூர்த்த காலம் வர்த்தித்து அதன் அந்திய ஸமயத்தில் ஏகத்வ விதர்க்க வீசாரமென்னும் இரண்டாவது சுக்கிலத்தியானத்தினுல் ஞானுவரணீயம் தரிசனு வரணீயம் அந்தராயங்க ளென்கிற மூன்று கர்மங்களையும் நிர்மூலனம் செய்து கேவல ஞானம் முதலிய அனந்த சதுஷ்டய ஸ்வரூபத்தினையுடைய பாவ மோக்ஷத்தினை அடைவார்களென்று அறியவும்.

மேற் கூறிய சுத்த ஸ்வபாவத்தினை அடைந்த ஸாதுக்களுக்குத் தரிசன ஞானங்களால் பரிபூர்ணமானதும் அன்னியத் திர

வியங்களில் பற்றில்லாததுமாகிய சைதன்ய ஸ்வரூபமான உபசாரத்தியானமானது சகல கர்மங்களின் நிர்ஜ்ஜரைக்குக் காரணமாகின்றது. அதாவது முன்சொன்ன பாவமோக்ஷத்தினை யடைந்த கேவலிகள் விகாரமற்ற பரமானந்த லக்ஷணத்தினை யுடைய ஆத்மனிடத் துண்டாகிய சுகத்தினுல் திருப்தி யடைந்தவர்க ளாகையால் பிரீதியினையும் வெறுப்பினையும் முறையே உண்டுபண்ணுவதாகிற சம்ஸார சுக துக்க விக்கிரியைகளிலகன்றதும் கேவலஞான தரிசனுவரணீயங்களின் க்ஷயத்தினுல் அஸஹாயமாகிய கேவலஞான தரிசனத்துடன் கூடின சுத்த சைதன்ய பரிணதமானதும் இந்திரிய வியாபாரம் முதலியவற்ருல் அன்னியத் திரவியங்களை ஸ்வீகரியாததும் அன்னிய வஸ்துக்களின் சேர்க்கையில்லாததும் ஸ்வரூபத்தில் சலனமில்லாமல் வர்த்திப்பதும் ஆகிய யாதொரு சுத்தாத்ம ஸ்வரூபவர்த்தனையினுல் ஆத்மனிடத்து முன் கட்டப்பட்ட அகாதி கர்மங்கள் ஸ்திதி விநாசத்தினையும் நிர்ஜ்ஜரையினையும் அடைவதைக் கண்டு அந்த சுத்த ஸ்வரூபவர்த்தனையினை உபசாரத்தினுல் தியானமென்று சொல்லப்படும்.

அதன்பின் திரவிய மோக்ஷத்தின் தன்மை எப்பெற்றியதெனில் முன்சொன்ன பரமஸம்வரையுடன் கூடி எல்லாக் காதி கர்மங்களேயும் நிர்ஜ்ஜரையினே அடைவித்து வேதனீய ஆயுஷ்ய நாம கோத்திரங்களென்னும் அகாதி கர்மங்களினுலும் அகன்ற தன்மை திரவிய மோக்ஷமென்பது. அஃதெங்ஙனமெனில், பாவ மோக்ஷத்தினே அடைந்த கேவலிகள் சகல ஸம்வரத்தினேச் செய்தவர்களாகி முன்சொன்ன சுத்தாத்ம ஸ்வரூபப் பிரவர்த்தியாகிற உபசார தியானத்தினுல் சகல கர்மங்களேயும் நிர்ஜ்ஜரையினே அடைவிக்கின்றவர்கள் ஆயுஷ்யப் பிரமாணம் அந்தர் முகூர்த்தமானபொழுது அந்த ஆயுஷ்ய கர்ம ஸ்திதியைக் காட்டிலும் வேதனீய நாம கோத்திரங்களென்கிற மூன்று கர்மங்களின் ஸ்திதி அதிகமா யிருக்கும் பக்ஷத்தில் அவைகளின் அதிக ஸ்திதியினே விநாசம் செய்யும்பொருட்டும் சம்ஸார ஸ்திதி விநாசத்தின் பொருட்டும் தண்ட கவாட பிரதர லோக பூரணமென்று சொல்லப்படும், கேவலி ஸமுத்காதத்தினேச் செய்தும், ஆயுஷ்ய கர்மத்தோடு மற்ற மூன்று கர்மங்களின் ஸ்திதியும் சம்ஸார ஸ்திதியும் சமான

மாகில் மேற்கூறிய கேவலி ஸமுத்காதத்தி னைச் செய்யாமலும் சுத்தாத்ம ஸ்வரூபத்தில் சலியாமல் வர்த்திப்பதாகிற ஸூக்ஷ்மக் கிரியா பிரதிபாதி யென்னும் மூன்ருவது சுக் கில தியானத்தை உபசாரத்தினுல் உடைய வர்களாகி அதன்பிறகு 'ஸயோகி குண ஸ்தா னத்தினின்றும் அயோகி குண ஸ்தானத்தை அடைந்து சமுச்சின்னக் கிரியை என்னும் நாலாவது சுக்கிலத் தியானமாகிற பரம யதாக் கியாத சாரித்திரத்தினை அடைந்து அந்த அயோகி குண ஸ்தானத்தில் அந்தியத்தில் இரண்டு ஸமயங்களில் முதல் ஸமயத்தில் சரீரம் முதலிய எழுபத்திரண்டு பிரக்கிரதி களையும் இரண்டாவது ஸமயத்தில் வேத னீய ஆயுஷ்ய நாம கோத்திர கர்மங்களின் ரூபமாகிய பதின் மூன்று பிரகிரதிகளையும், ஆத்மப் பிரதேசத்தினின்றும் நீக்குவது திர விய மோக்ஷமாகும்.

அதன் பிறகு பகவானுகிய அந்த ஆத் மன் பூர்வப் பிரயோகத்தினுல் குயவனுடைய சக்கரம் சுழல்வது போலவும் இதர திரவியங் களின் சேர்க்கையினின்றும் நீங்கின தன் மையால் மண் பூச்சினு லகன்ற சுரை ஓடு ஜலத்தில் மேலே கிளம்புவது போலவும்

பந்தத்தில் விடுபட்ட தன்மையினுல் வெடித்த ஆமணக்குக் கொட்டையைப் போலவும் அக்கினியின் சிகையைப்போல மேனேக்கிச் செல்லும் ஸ்வபாவத்தினுலும் ஒரே ஸமயத்தில் லோகத்தின் உச்சியிலுள்ள ஸித்தி க்ஷேத்திரத்தினே அடைகின்றது. அதற்குப் புறம்பு செல்கைக்குக் காரணமாகிய தர்மாஸ்திகாயம் இல்லாததால் அவ்விடத்திலேயே நின்றதாகி என்றைக்கும் அழிவில்லாத பரம சுகத்தினே அனந்தம் காலம் அனுபவிப்பதாகும்.

ஒன்பதாவது மோக்ஷபதார்த்த அத்தியாயம் முற்றும்

3-வது சூளிகாஸ்வருப மஹாதிகாரம்

அதன் பிறகு மோக்ஷ மார்க்கத்தைப் பற்றிச் சொல்லுமிடத்தில் வேருென்றினுல் கலக்கத்தினே யடையாத ஞானமும் தரிசனமும் ஜீவனின்நின்றும் வேறில்லாதவைகளானதால் ஜீவஸ்வபாவங்களாகும். அந்த ஞான தரிசனங்களிலேயே நிச்சயமாக வர்த்திப்பது சாரித்திரமாகும். அந்த சாரித்திரமே ஆசை கோபம் முதலிய விபாவபரிணமங்களில் நீங்கினதாகையால் நிந்தனேயில்லாததும் மோக்ஷமார்க்கமுமாகும். அங்ஙன

மாகிய சாரித்திரம் ஸ்வசரிதம் பரசரிதம் என இரண்டு விதமாவன. அவற்றுள் தன்னால் ஆசரிக்காவிட்டாலும் பிறரால் அனுபவிக்கப் படுகின்ற போகங்களைக் கண்டு வாஞ்சையினை அடைகின்ற லக்ஷணமாகிய பலவிதமாகிய அன்னிய வஸ்துக்கள் ஸம்பந்தமாக ஏற்படு கின்ற பரிணாமம் பரசரிதமாகும்.

தன்னுடைய ஆத்மஸ்வபாவத்திலேயே பரிணமிப்பது ஸ்வசரிதமாகும். இந்த ஸ்வ சரிதமே மோக்ஷத்திற்குக் காரணமென்று அறியாதவர்களாகி மோக்ஷத்திற்குப் பின்ன மாகிய அஸாரமாகிய சம்ஸாரத்திற்குக் கார ணங்களாகிய மித்தியாத்துவம் ராகம் முதலிய வைகளில் பரிணமித்து அனந்த காலமாக சம்ஸாரத்தில் சுழன்றோமென்றறிந்து, அந்த ஜீவஸ்வபாவ நியதசரிதமே மோக்ஷத்திற்குக் காரணமென்று இடைவிடாமல் தியானிக்கத் தகுந்ததாகும். ஜீவன் சுத்த நயத்தினால் விசுத்த ஞான தரிசன ஸ்வபாவத்தை யுடையதாயினும் வியவஹாரத்தினால், அனாதி யாக மோஹனீய கர்மத்தின் உதய வசத்தி னால் மதி ஞானம் முதலிய விபாவ குணங் களிலும் நரக மனுஷ்ய முதலிய விபாவ பரி யாயங்களிலும் பரிணமிக்கப்பட்டதாகிப் பர

ஸமயத்தில் ரமித்ததாகிப் பரசரிதத்தினை யுடையதாகின்றது. யாதொரு பொழுது நிர்மலமாகிய விவேகமாகிற ஜ்யோதியினுல் ஆத்மாவினுடைய சுத்த ஸ்வரூபத்தில் பரிணமிக்கின்றதோ அப்பொழுது ஸ்வஸமயத்தினை அடைந்து ஸ்வசரிதத்தில் வர்த்திப்பதாகிறது.

இவ்விதமாக ஸ்வஸமய பரஸமய ஸ்வரூபங்களை அறிந்து நிர்விகாரமாகிய ஸ்வஸமயத்தில் பரிணமிக்குமாகில் அந்த ஜீவன் கர்ம பந்தங்களினின்றும் விடுதலையினை அடையும். ஆகையால் ஜீவ சுத்த ஸ்வபாவத்தில் நிச்சயமாய் நிகழ்வதே மோக்ஷமார்க்கமென்றறியவும். யாவர் சிலர் அங்ஙனமாகிய ஸ்வசரிதத்தில் நீங்கினவர்களாகி ராக பரிணமத்தால் அன்னியத் திரவியங்களில் சுபமும் அசுபமுமாகிய பரிணமத்தினை அடைவார்களாகில் அவர்கள் பரசரிதத்தில் வர்த்திக்கப்பட்டவர்களாவார்கள். அவர்கள் அவ்விதமாகிய ஆஸ்ரவ பரிணமங்களில் பரிணமிப்பதால் புண்ணிய பாப கர்மங்கள் அவர்களிடத்தில் ஆஸ்ரவமாவதால் அவர்கள் பரசரிதத்தில் வர்த்திப்பவர்களென்று ஜினேஸ்வரரால் சொல்லப்பட்டார்கள். ஆகையால் ஆஸ்

ரவ பரிணாமங்களினால் மோக்ஷமாகாதென்று அறியவும். யாவர் சிலர் அன்னிய வஸ்துக்களின் சேர்க்கையில் நீங்கின ஞான தரிசனோப யோகத்தை யுடையவர்களாகி இதரமாகிய எல்லாப் பரிக்கிரகங்களையும் நீக்கினவர்களாகித் தனது ஆத்ம ஸ்வரூபத்தில் தவிர வேறு விஷயங்களில் பரிணமியாதவர்களாகித் தன்னை ஞான தரிசன ஸ்வபாவ லக்ஷணத்தினால் அறியவும் காணவும் பட்டவர்கள் ஸ்வசரிதத்தில் வர்த்திப்பவர்களாவார்கள்.

ஞான தரிசன ஸ்வபாவத்தையுடைய ஆத்மனிடத்தில் தன் மயமாகி வர்த்திப்பது ஸ்வசரிதமாகும். மற்றும் அங்ஙனமாகிய ஸ்வசரிதத்தில் வர்த்திக்கப்பட்ட யோகீந்திரர்கள் சமஸ்தமாகிய மோஹனீய கர்மங்களினின்றும் நீங்கினவர்களாதலால் அன்னியத் திரவிய ஸ்வபாவ பரிணாமத்தில் நீங்கினவர்களாகி நிஜாத்மத்திரவிய ஸ்வபாவத்திலேயே வர்த்திக்கப் பட்டவர்களாகி ஆத்மனுடைய ஸ்வபாவமாகிய தரிசன ஞான விகல்பங்களையும் நிச்சய நயத்தினால் ஆத்மனிடத்து அவிகல்பமாக வர்த்திக்கப்பட்டவர்களாகும்.

எங்ஙன மென்றால்? ஆரம்பத்தில் ஆத்மாவைப்பற்றி விகல்பமாகத் தியானிக்கின்ற

பொழுது ஞானத்தையுடையேன் தரிசனத்தை யுடையேன் என்கிற விகல்பங்கள் ஆகும். நிர் விகல்பமாகிய சுத்தாத்ம ஸ்வரூபத்தில் முக் கியமாய்ப் பரிணமிக்கின்றபோது ஞான தரி சனங்கள் ஆத்மனிடத்து அபின்னமானவை களே யென்று தியானிக்கப்படும். அதன் பிறகு முன்னல் ஜீவாதி நவபதார்த்தப் பிரதி பாதக இரண்டாவது மஹாதிகாரத்தில் முத லில் மோக்ஷமார்க்க அத்தியாயத்தில் வியவ ஹார மோக்ஷமார்க்கத்தைப்பற்றிச் சொல்லப் பட்டிருந்தாலும் மறுபடியும் நிச்சய மோக்ஷ மார்க்கத்திற்கு ஸாதகமாவதென்று தெரிவிக் கும் பொருட்டு இவ்விடத்தும் சொல்லப் படும்.

தர்மத் திரவியம் முதலிய திரவியங் களுள் ஸ்வீகரிக்கவும் நீக்கவும் தகுந்ததாகிய தன்மைகளைத் தெளிவது ஸம்மியக்துவ மென்பது. அவைகளின் தன்மைகளை விசேஷமாகத் தெரிவிக்கும்படியான அங்க பூர்வ விகல்பங்களின் சம்பந்தமான ஆக மத்தினை அறிவது ஸம்மியக் ஞானமென் பது. அனசனம் முதலாகிய பன்னிரண்டு விதமான தபங்களில் வர்த்திப்பது ஸம்மியக் சாரித்திரமென்பது. இவை மூன்றும் பின்ன

பின்ன விஷயங்களாகையினுல் வியவஹார நயாபிப்ராயத்தினுல் வியவஹார மோக்ஷ மார்க்கமென்பதாம். தரிசன மோஹநீய கர்மங்களின் உபசம க்ஷயோபசம க்ஷயங்களென்னும் நிமித்தத்தினுல் ஆத்மனுக்கு ஏற்படுகிற வியவஹார ஸம்மியக்துவம் பரம்பரையினுல் கர்ம க்ஷயத்திற்குக் காரணமாகையால் நிச்சய ஸம்மியக்துவத்திற்கு ஸாதகமாகும்.

மற்றும் அங்க பூர்வாகம ஞானம் ஸம்மியக்திரஷ்டிக்கன்றி பரிணமியாத காரணத்தினுல் அதுவும் சுத்தாத்ம ஸ்வரூபத்தை அறிவதற்கு நிமித்தமாகையால் நிச்சயஞான ஸாதகமாகும். அங்ஙனமாகிய ஸம்மியக் தரிசன ஸம்மியக் ஞானங்கள் இல்லாமல் அணுவிரத மஹா விரதானுஷ்டானங்கள் ஸம்மியக்சாரித்திரமாகாதென்று ஆகமத்தில் கூறப்பட்டிருப்பதால் தபத்தில் வர்த்திக்கும்படியான ஸம்மியக் சாரித்திரம் ஸம்மியக்துவ ஸம்மியக் ஞானமில்லாமல் கூடாது. ஆகையால் ஸம்மியக்துவத்துடன் கூடின தபோனுஷ்டானங்களில் வர்த்திப்பதே ஸம்மியக் சாரித்திரமென்பது. அந்த சாரித்திரமும் நிச்சய சாரித்திர ஸாதகமாகும். யோக்

கியமாகிய அறிவுள்ளவனுக்கு உபாத்தியாயர் புஸ்தகம் முதலியவைகளும் கிரமத்தினுல் நிச்சய ஞானத்திற்கு ஸாதகங்களென்னு மிடத்து வியவஹார ரத்னத்திரய பரிணுமம் நிச்சய ரத்னத்திரய பரிணுமத்திற்குச் சாதக மென்றே அவசியம் அறியத் தகுந்தது.

ஸம்மியக் தரிசன ஸம்மியக் ஞான மென்கிற இவை இரண்டும் கிரஹஸ்தர்களாகிய ஸ்ராவகர்களுக்கும் தபஸ்விகளாகிய யதிகளுக்கும் சமானமேயாகும். சாரித்திரம் மாத்திரம் தபஸ்விகளுக்கு ஆசாராங்கம் முதலிய சாரித்திரங்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கும் ஆகமானு ஸாரத்தினுல் பிரமத்த அப்பிரமத்த குண ஸ்தானங்களுக்கு யோக்கியமாகிய பஞ்ச மஹாவிரதம் பஞ்ச ஸமிதி த்ரி குப்தி ஷடாவசியகம் முதலிய சாரித்திரங்களாகும். ஸ்ராவகர்களுக்கு உபாச காத்தியயனம் முதலிய ஸ்ராவகாசாரங்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கும் ஆகமானு ஸாரத்தினுல் ஐந்தாவது குணஸ்தானத்திற்கு யோக்கியமாகிய தானம் சீலம் பூஜை உபவாஸம் முதலியவைகளும் தரிசனீகன் விரதீகன் முதலிய பதினெரு விதமாகிய ஸ்ராவக நிலைகளில் அனுஷ்டிக்கும்படியான அனுஷ்டானங்களும் சாரித்திரங்களாவன.

தரிசன ஞான சாரித்திரங்களென்னும் மூன்றையும் ;ஒரு தன்மையாக அடைந்து ஆத்மனில் அன்னியமாகிய குரோதம் முதலானவைகளைச் சிறிதாகிலும் செய்யாமலும் ஆத்மனுடைய ஸ்வபாவ குணங்களைச் சிறிதும் விடாமலும் வர்த்திக்கும் நிலைமையினை உடைய ஆத்மனை நிச்சய நயத்தினால் நிச்சய மோக்ஷ மார்க்கமென்று சொல்லப்படும். அதாவது முன்சொன்ன வியவஹார மோக்ஷ மார்க்கத்தில் நின்று குணஸ்தானக் கிரமமாக சுத்தாத்ம ஸ்வரூப பாவனையில் தரதமமாக வர்த்தித்து வந்து பிறகு சுத்தாத்ம ஸ்வரூப ருசிலக்ஷணமாகிய நிச்சய தரிசனத்திலும் அங்ஙனமாகிய சுத்தாத்ம ஸ்வரூபத்தை அறிகின்ற அறிவாகிய நிச்சய ஞானத்திலும் ஆத்ம ஸ்வரூபத்தையே அனுபவிக்கின்றதாகிய நிச்சய சாரித்திரத்திலும் பரிணமிக்கின்ற ஆத்மன் நிச்சய மோக்ஷ மார்க்கமென்று சொல்லப்படும். ஆதலால் ஸ்வர்ண பாஷாணத்திற்கு அக்கினியைப்போல நிச்சய மோக்ஷ மார்க்கத்திற்கு வியவஹார மோக்ஷ மார்க்கம் சாதகமாவதாகும்.

மற்றும் நிஜஸ்வரூபத்திலேயே வர்த்திக்கப்படுவதும் ஸ்வஸம்வேதன ஞானத்தி

ணுல் தனது ஸ்வரூபத்தையே அறியப்படுவதும் தனது சுத்த ஸ்வரூபத்தில் ருசி அடைவதுமாகிய இந்த நிச்சய சாரித்திர ஞான தரிசனங்களில் பரிணமிக்கப்பட்ட ஆத்மா நிச்சய மோக்ஷ மார்க்கமாகும். அபேத விவக்ஷையிஞல் ஆத்மாவே தரிசன ஞான சாரித்திரமாகும். ஆகையால் ஜீவசுத்த ஸ்வபாவத்தில் நிச்சயமாய் வர்த்திப்பது நிச்சய மோக்ஷ மார்க்கமாகும்.

ஆத்மா கேவலஞான தரிசனத்தை அடைந்து மூவுலகத்திலும் முக்காலத்திலும் வர்த்திக்கின்ற வஸ்து ஸ்வபாவங்களை அறியவும் காணவும் கூடியதாகி அந்தக் கேவல ஞான தரிசனத்தினின்றும் வேறில்லாததாகிய அனந்த சௌக்கியத்தையும் அனுபவிக்கக் கூடியதென்று அறியப் பட்டவர்களாகி அவ்விதமாகிய அனந்த சுகத்தினையே ஸ்வீகரிக்க வேண்டுமென்கிற விஸ்வாஸத்தினையும், தத்தம் குணஸ்தான அனுஸாரமாக அனுபவத்தினையும் அடைபவர்கள் பவ்வியர்களாவார்கள். ஆதலால் ஆத்ம ஸ்வாபாவிக சுகத்திலே விஸ்வாஸத்தை உடையவர்கள் ஸம்மியக் திரஷ்டிகளென்று சொல்லப்படுவார்

கள். அபவ்வியர்கள் அவ்விதமாக விஸ்வா ஸத்தினை அடைய மாட்டார்கள்.

பவ்விய ஜீவர்கள் மித்தியாத்துவம் முதலாகிய தரிசன மோஹனீயமாகிற ஸப்தப் பிரக்கிரதிகளினதும், சாரித்திர மோஹனீயத்தினதும் உபசம க்ஷயோபசம க்ஷயங்களினுல் தத்தம் குணஸ்தானத்திற்கு யோக்கியமாக விஷய சுகத்தினை வியோகபுத்தியினுல் அனுபவிக்கப்பட்டவர்களாகி, நிஜ சுத்தாத்ம பாவனையினு லேற்படக் கூடிய அதீந்திரிய சுகமே ஸ்வீகரிக்கத் தகும் என்கிற எண்ணத்தினையுடையவராவார்கள். அபவ்வியர்கள் அவ்விதமாகிய எண்ணத்தினை உடையவர்களாகார். ஏனென்ருல்? அவர்களுக்கு முன் சொன்ன தரிசன சாரித்திர மோஹனீயங்களது உபசம க்ஷயோபசம க்ஷயங்களாகிய நிமித்தங்கள் முக்காலத்தும் ஆவதில்லை. என்றதனுல் எல்லாச் சம்ஸார ஜீவன்களுக்கும் மோக்ஷ மார்க்கத்தினை அடையும் யோக்கிய மில்லையென்று அறியவும். தரிசன ஞான சாரித்திரங்கள் மோக்ஷ மார்க்கமாகையினுல் ஞானிகளால் அவை ஸேவிக்கப்படுமென்று சொல்லப்பட்டது.

அந்தத் தரிசன ஞான சாரித்திரங்களால் நிஜசுத்தாத்ம ஸ்வருபத்தில் வர்த்தித்த

பொழுது மோக்ஷத்திற்குக் காரணமும் அன்னியத் திரவியங்களில் அடைந்து வர்த்திக்கின்ற பொழுது பந்தமும் ஆவதாகும். நெய்யானது ஸ்வபாவத்தினுல் குளிர்ச்சியையுடையதாயினும் அக்கினியின் சேர்க்கை வசத்தினுல் ஸந்தாபத்தினே யடைவது போல தரிசன ஞான சாரித்திரங்களும் ஸ்வபாவத்தினுல் மோக்ஷத்திற்குக் காரணங்களாயினும் பஞ்சபரமேஷ்டிகள் முதலிய பிரசஸ்த திரவியங்களே அடைந்து புண்ணிய பந்தத்திற்குக் காரணங்களாயும் மித்தியாத்துவ விஷய கஷாயங்களுக்கு நிமித்தமான இதர திரவியங்களே அடைந்து பாபபந்தத்திற்கும் காரணங்களாகின்றன.

மற்றும் ஸம்மியக் தரிசன ஞான சாரித்திரங்கள் ஸம்பூர்ணமாகத் தனது ஸ்வரூபத்தில் கூடி வர்த்திக்காத வரையில் கர்மபந்தங்களே முழுமையும் நீக்க மாட்டாமல் பந்தத்திற்குக் காரணங்களாகிய பரிணமங்களோடு கூடி வர்த்தித்து சேனுஸமூஹ பலமில்லாதவனுகிய அரசன் பகைகளேக் கெடுக்கமாட்டாதிருந்தாலும் இந்த அரசனே பகைகளேப் பெருக்கினுனென்று ஜனங்கள் வியவஹாரத்தினுல் சொல்லுவதுபோல

கர்ம பந்தத்திற்குக் காரணங்களென்று உப சாரத்தினுல் சொல்லப்படும். ஆதலால் ஸம்மியக் தரிசனத்தை மாத்திரம் உடைய அஸம்யதனுக்கு மித்தியாத்துவம் முதலிய நாற்பத்தொரு பிரகிரதிகளின் பந்தம் நீங்குவ தாகும். இவ்விதமாக ஸம்மியக்த்வம் முத லிய குணங்களின் தரதம விருத்திகளால் யதா யோக்கியமாக பந்தங்களினின்றும் நீங்கும் கிரமத்தை ஆகமங்களில் அறிந்துகொள்ள வும்.

மற்றும் ஜீவன்கள் அஞ்ஞானத்தினுல் பஞ்ச பரமேஷ்டிகளின் பக்தியாகிற பரிணு மத்தினுலேயே துக்கத்திற்குக் காரணமாகிற சம்ஸார விநாசமாகுமென்று எண்ணுவார்க ளாகில், அப்பொழுது அவர்கள் பரஸமயத் தில் பிரீதியினே யடைந்தவர்களாகி அந் தப் பரஸமயத்தில் வர்த்திக்கப்பட்டவர்களா வார்கள். யாவர் சிலர் நிர்விகாரமாகிய சுத் தாத்ம பாவனு லக்ஷணமான பரம வீதராக சாரித்திரத்தில் பொருந்தவேண் டிய மனதை யுடையவராகி, அங்ஙனம் இடைவிடாமல் அதனில் பரிணமிப்ப தற்குச் சக்தியில்லாதவர்க ளானபொழுது, இதரமாகிய அசுத்த பரிணுமங்களே நீக்கும்

பொருட்டுய் சம்ஸார ஸ்திதியை விநாசம் செய்யும் பொருட்டும் பஞ்சபரமேஷ்டிக ளுடைய குணங்களை ஸ்துதித்தல் முதலாகிய பக்தியைச் செய்வார்கள். அப்பொழுது அவர்கள் ஸூக்ஷ்ம பரஸமயத்தில் பரிண மிக்கப்பட்டவர்களாகி ஸராக ஸம்மியக் திரஷ்டிகளென்று சொல்லப்படுவார்கள்.

அவ்விதமாகாமல் சிலர் சுத்தாத்ம ஸ்வ ரூபத்தில் இடைவிடாமல் பரிணமிக்கும் சக் தியையுடையவர்களாயினும் அதைவிட்டுவிட் டுச் சுபோப யோகத்தினாலேயே மோக்ஷமாகு மென்று ஏகாந்தமாக எண்ணுவார்களாகில், அப்பொழுது அவர்கள் ஸ்தூல பரஸமயத் தில் பரிணமிக்கப்பட்டவர்களாதலால் அஞ் ஞானியும் மித்தியா திரஷ்டிகளுமாவார்கள். முன்சொன்ன பஞ்சபரமேஷ்டிகளின் பக்தி முதலாகிய சுபோபயோக அனுஷ்டானத்தை யுடைய ஜீவர்கள், பஹுவாகிய புண்ணிய கர்மங்களினால் பந்திக்கப்படுவார்கள்; கர்மங் களுக்கு க்ஷயத்தினைச் செய்யார்கள். சுத்த மாகிய நிஜாத்ம ஸ்வரூபத்திலேயே வர்த்திக் கும் பரிணாமத்தினால் மோக்ஷம் ஆகின்ற காரணத்தினால் அன்னியத் திரவியங்களி லடைந்து வர்த்திக்கும் பரிணாமத்தினால் மோக்ஷமாகாதென்று அறியவும்.

மற்றும் யாவர் சிலருடைய மனதில் சுப அசுப விகல்பங்களாகிய அன்னியத் திரவியங்களில் ஆசையானது சிறிதாகிலும் ஏற்படுமாகில் அவர்கள் பலவாகிய ஆகமாப்பியாச ஞானத்தை யுடையவர்களாயினும் தம்முடைய நிஜாத்ம ஸ்வரூபத்தை அறியாதவர்களாவார்கள். வீதராக ஸ்வரூபத்தினை யுடைய பரமாத்ம தத்துவத்திற்கு மாறுதலாகிய ஆசை முதலியவைகள் யாவர் சிலருக்கு உண்டோ அவர்கள் தமது சுத்த ஸ்வரூபத்தை அறியாதவர்களாவார்கள். ஆகையால் முதலில் பஞ்சேந்திரிய விஷயங்களில் ஏற்படும் ஆசையினை நீக்கி அதன் பிறகு குணஸ்தான வரிசைக் கிரமத்தினுல் ஆசை முதலான விபாவ பரிணுமங்களில் நீங்கின நிஜசுத்தாத்ம ஸ்வரூபத்தில் நின்று பஞ்சபரமேஷ்டிகளின் விஷயத்தில் ஏற்படுகின்ற பக்தியாகிற சுபராகத்தினையும் கிரமத்தினுல் நீக்கத்தகுந்ததாகும்.

மற்றும் யாவர் சிலர் நிஜசுத்தாத்ம ஸ்வரூபத்தினைத் தியானிக்கவில்லையோ அவர்களுக்கு மாயாசல்லிய நிதான சல்லிய மித்தியாசல்லியம் முதலிய பல விதமான விபாவ பரிணுமங்களில் வர்த்திக்கும் மனதினைத் தடை

யிடுவதற்கு இயலாது. அங்ஙனமாகில் அவர்களுக்குப் புண்ணிய பாபகர்மங்களி னுடைய ஸம்வரை ஆவதற்கில்லை. ஸம்வரை ஆகாத பொழுது சம்ஸார விநாசமாகாது. ஆகையால் இந்த அனர்த்த பரம்பரைக்கு ராகமே மூலகாரணமாவதாகும். மேற்கூறிய வண்ணம் ஆசை முதலாகிய விபாவ பரிணா மங்கள் அனர்த்தத்திற்குக் காரணங்களாகை யினால் மோக்ஷத்தினை இச்சிக்கும் பவ்வியர் கள் ஆத்மதத்துவத்திற்கு இதரமாகிய எல் லாப் பரிக்கிரகங்களினின்றும் நீங்கினவர்க ளாகி மோஹனீயகர்மத்தின் உதயத்தால் ஏற் படும் யான் என்னுடையதென்னும் இவை முதலாகிய விகல்ப பரிணாமங்களில் நீங்கின வர்களுமாகி ஸித்தபரமேஷ்டிகளின் குணங் களுக்குச் சமானமாகிய அனந்த ஞானம் முத லிய நிஜாத்ம குணங்களில் பரமார்த்தமாகிய பக்தியினைச் செய்யக் கடவர்கள். அதனால் அவர்கள் சுத்தாத்மஸ்வரூபத்தை அடைத லாகிற மோக்ஷத்தினை அடைவார்கள்.

நவபதார்த்த ஸ்வரூபத்தினையும் தீர்த் தங்கரர்களின் ஸ்வரூபத்தையும் பற்றி நன் ருக அறியப்பட்டவர்களும் பரமாகமத்தில் விஸ்வாஸத்தினையும் உடையவர்கள் பன்னி

ரண்டு விதமாகிய தபங்களோடுகூடி வர்த்தித்தாலும் நிஜாத்ம சுத்த ஸ்வரூபத்தில் பொருந்தி வர்த்தியாததனுல் மோக்ஷம் அவர்களுக்குக் காலாந்தரத்து ஆவதாகும். அதாவது ஸம்மியமம் தபம் முதலாகிய சாரித்திரங்களுடன்கூடி வர்த்தித்தாலும் இடைவிடாமல் அந்தச் சாரித்திரத்தில் வர்த்திப்பதற்குச் சரீர சக்தியில்லாததனுல் ஒருக்கால் சுத்தாத்ம பாவனைக்கு அனுகூலமாகிய ஜீவாதி பதார்த்தங்களின் தன்மையைத் தெரிவிக்கப்படுவதாகிய பரமாகமத்தில் ருசியினையுடையவர்களாகின்றனர்.

மற்றும் ராமரென்பவர் தேசாந்தரத்தில் வர்த்திக்கப்பட்ட தனது தேவியாகிய சீதையினிடத்தினின்றும் வரப்பட்ட புருஷர்களுக்கு அவள் நிமித்தமாக தான ஸன்மானம் முதலியவைகளைச் செய்வதுபோல மோக்ஷலக்ஷ்மியை வசீகரிக்கும்பொருட்டு குற்றமற்ற பரமாத்மஸ்வரூபத்தை அடைந்த தீர்த்தங்கர பரம தேவர்களுடையவும் கணதர தேவ பரத ஸகர ராம பாண்டவர் முதலிய மஹா புருஷர்களுடைய சரிதம் புராணம் முதலியவைகளைத் தர்மானுராகத்தினுலும் அசுபராகங்களை நீக்கும் பொருட்டும் அப்பியசிக்

கின்றவர்களாகி, மற்றும் பேதாபேத ரத்னத் திரய பரிணுமங்களில் வர்த்திக்கின்றவர்களாகிய ஆசாரியர் உபாத்தியாயர் முதலானவர்களுக்குக்கிரஹஸ்தாஸ்ரமத்திலிருந்து தானம் பூஜை முதலியவற்றைச் செய்வதனுல் அவர்களுக்குப் புண்ணியாஸ்ரவ மாவதனுல் அந்தப்பவத்தில் மோக்ஷத்தை அடையார்கள்.

ஆயினும் மறுஜன்மத்தில் தேவேந்திர பதவி முதலானவைகளை அடைந்து அவ்விடத்து விமான பரிவாரங்கள் முதலிய ஸ்வர்க்கலோக ஸம்பத்தினைத் துரும்புக்குச் சமானமாக எண்ணினவர்களாகிப் பஞ்ச மஹா விதேஹங்களை யடைந்து ஸமவ சரணத்தில் சென்று வீதராக ஸர்வஞ்ஞனையும் கணதர தேவர்களையும் நேரில் கண்டு தர்மத்தில் விசேஷமாக நிச்சயத்தினை அடைந்தவராகி நாலாவது குணஸ்தானத்திற்கு யோக்கியமாகிய ஆத்ம பாவனையில் நீங்காமலே தேவலோகத்தில் தங்களுக்குள்ள ஆயுஷ்ய காலத்தினைக் கழித்தவர்களாகி அங்கு நின்றும் மனுஷ்ய பவத்தினை அடைந்து சக்கரவர்த்தி பதவி முதலியவற்றைப் பெற்றுலும் பூர்வ பவத்தில் பரிணமிக்கப்பட்ட சுத்தாத்ம பாவனையின் பலத்தினுல் மோஹத்தினை

அடையாதவர்களாகி விஷய சுகானுபவங்களை நீக்கி ஜின தீக்ஷையினை ஸ்வீகரித்து நிர்விகல்ப்ப ஸமாதியினால் விசுத்த ஞான தரிசன ஸ்வபாவத்தினையுடைய நிஜ சுத்தாத்மனிடத்து வர்த்தித்து மோக்ஷத்தினை அடைவார்களென்று அறியவும்.

அருகத் பரமேஷ்டிகளிடத்தும் ஸித்த பரமேஷ்டிகளிடத்தும் அவர்களின் பிரதி பிம்பங்களினிடத்தும் பரமாகமங்களினிடத்தும் பக்தி யுடையவர்களாகித் தபோனுஷ்டானங்களை உத்கிரஷ்டமாகச் செய்தபோதிலும் அவர்கள் அந்தபவத்தில் மோக்ஷத்தினை அடையார்கள். அவர்களுக்கு அந்த பக்தி விசேஷத்தினால் புண்ணியபந்தமாவதால் தேவகதியினை அடைவர். பவாந்தரங்களில் பரமாத்ம பாவனையில் நிச்சயமாக வர்த்தித்த காலத்து மோக்ஷத்தினையும் அடைவர். ஆகையால் பஞ்சபரமேஷ்டிகளின் பக்தி முதலாகிய சுபோபயோக அனுஷ்டானங்களால் அந்தப் பவத்தில் மோக்ஷமாகாதென்று அறியவும்.

பஞ்ச பரமேஷ்டிகளிடத்தில் ஏற்படுகின்ற சுபராகமும் சந்தன மரத்தினால் ஏற்பட்ட அக்கினியும் சுடுவதுபோல புண்ணிய பந்தத்தினால் தேவ கதி முதலாகிய சம்சாரச்

சுழற்சி லக்ஷணமாகிய ஸந்தாபத்திற்குக் காரணமாகையால் மோக்ஷத்தினை அடைய வேண்டு மென்னும் விஸ்வாஸமுள்ள பவ்வியர்கள் இந்தப் பஞ்சாஸ்திகாய சாஸ்திரத்துள் மோக்ஷமார்க்கத்திற்கு வீதராக பரிணாமமே முக்கிய காரணமென்று தெரிவிக்கப் பட்டிருப்பதால் சுபாசுப விகல்பங்களை யுடைய எல்லா வஸ்துக்களிடத்தும் சிறிதாகிலும் ஆசையினைச் செய்யாதிருக்கக் கடவர்கள். அதனால் வீதராகர்களாகிய பவ்வியர்கள் சகல துக்கங்களுக்கும் இருப்பிடமாகிய சம்ஸாரமாகிற சமுத்திரத்தினைக் கடந்து மோக்ஷத்தினை யடைந்து ஆத்ம சுத்த ஸ்வரூபத்தினிடத் தேற்பட்ட பரம சுகத்தினை அனந்த காலம் அனுபவிப்பர்.

இவ்விதமாகச் சொல்லப்பட்ட இந்த பஞ்சாஸ்திகாயம் என்னும் பெயரினையுடைய சாஸ்திரத்தினுக்கு வீதராகமே தாத்பரியமென்று அறியவும். அந்த வீதராக பரிணாமமானது நிச்சய வியவஹார நயங்களால் ஸாத்திய ஸாதகமாகும் தன்மையினை அறிந்து அந்த இரண்டு வித நயானுஷ்டானங்களினாலும் மோக்ஷத்தினை அடைவதற்குக் காரணமாகின்றது. நிச்சய வியவஹார நயானுஷ்டானங்களுள் ஒன்றை ஒன்று அபேக்ஷியாமல் வர்த்திப்பதால் மோக்ஷம்

ஸித்தியாகாது. அஃதெங்ஙன மெனில்? சிலர் விசுத்த ஞான தரிசன ஸ்வபாவத்தினை யுடைய சுத்தாத்ம தத்துவத்திலேயே விஸ்வாஸமும் அறிவும் அனுஷ்டானமுமாகிய நிச்சய மோக்ஷமார்க்கத்தை அபேக்ஷிக்காதவர்களாகிச் சுபானுஷ்டான ரூபமாகிய வியவஹார நயானுஷ்டானத்தினையே மோக்ஷமார்க்கமென்று கருதப்பட்டவர்களாகி அதனுல் தேவகதிமுதலாகிற சதுர்க்கதி சம்ஸாரங்களில் சுழல்வர்.

மற்றும் சிலர் சுத்தாத்ம ஸ்வரூபத்தில் நிகழ்வதே நிச்சய மோக்ஷமார்க்க மென்று கருதப்பட்டவர்களாகி அங்ஙனமாகிய நிச்சய மோக்ஷ மார்க்கானுஷ்டானத்தில் இடைவிடாமல் நிகழ்வதற்கு சரீரசக்தி யில்லாததனுல் நிச்சயத்தினை ஸாதிக்கக்கூடிய சுபானுஷ்டானங்களை அனுஷ்டிக்கப் பட்டவர்களாகிப் பரம்பரையினுல் மோக்ஷத்தினை அடைகின்ருர்கள். அவர்கள் ஸராக ஸம்மியக்திரஷ்டிகளென்று சொல்லப்படுவார்கள். மற்றும் சிலர் கேவலம் வியவஹார நயத்தை அபேக்ஷிக்காமல் நிச்சய நயத்தினையே பற்றினவர்களாகிச் சுத்தாத்ம ஸ்வரூபத்தை அடையமாட்டாமல் இருக்கின்ற அவர்கள் யதிகளால் அனுஷ்டிக்கும்படியான குப்தி சமிதி முதலிய அனுஷ்டானங்களையும்

ஸ்ராவகர்களால் அனுஷ்டிக்கக் கூடிய தானம், பூஜை முதலிய அனுஷ்டானங்களை யும் தூஷிக்கின்றவர்களாகி நிச்சய வியவ ஹார நயானுஷ்டானங்க ளிரண்டையும் விட்டவர்களாகி நிச்சய நயானுஷ்டானத் திற்கு வியவஹார நயானுஷ்டானம் ஸாதக மாகிற தென்பதை யறியாதவர்களாகிப் பாப கர்ம பந்தத்தினை அடைகின்றார்கள்.

மற்றும் சிலர் சுத்தாத்மானுஷ்டான ரூபமாகிய நிச்சய மோக்ஷ மார்க்கத்திற்கு வியவஹார மோக்ஷமார்க்கம் ஸாதக மென்று யதார்த்தத்தினை அறிந்தவர்களாயினும் சாரித் திர மோஹனீய கர்மத்தின் உதயத்தினால் மோக்ஷ மார்க்கத்தில் பொருந்தும் சக்தி யில் லாததனால் சுபாசுப அனுஷ்டானங்களில் வர்த்திக்காதவர்களாகிய வியவஹார ஸம்மியக் திரஷ்டிகள் சுபானுஷ்டானங்களில் வர்த் திக்குமவர்களுக்குச் சமானமாகாமல் போனா லும் பரம்பரையினால் மோக்ஷத்தினை அடை வார்கள். ஆதலால் நிச்சய நயானுஷ்டானத் தைப்பொருந்துவதற்கு வியவஹார நயானுஷ் டானங்கள் ஸாதகமா யிருப்பதால் இவ் விரண்டு நயங்களையும் அபேக்ஷித்து மோக்ஷ மார்க்கத்தில் வர்த்திப்பவர்களே மோக்ஷத் தினை அடைவார்களென்று அவசியம் அறியத் தகுந்ததாம்.

அதற்பின் இந்நூலாசிரியராகிய குந்த குந்தாசார்ய தேவர் தமது பிரதிக்ஞையினை நிறைவேற்றினவராகி இங்ஙனம் கூறுகின்றார் :

சம்ஸார சரீர போகங்களில் வைராக்கிய லக்ஷணமும் நிர்மலமாகிய சுத்தாத்ம ஸ்வரூப அனுபவமுமாகிய மோக்ஷமார்க்கத்தில் தானும் பரிணமித்து இதரமாகிய பவ்வியர்களையும் பரிணமிக்கச் செய்வது மார்க்கப் பிரபாவன மென்பது. அதன் பொருட்டு பரமாகம பக்தியினால் தூண்டப்பட்ட என்னால் பஞ்சாஸ்திகாய ஷட்திரவியம் முதலிய சமஸ்த வஸ்து ஸ்வரூபங்களைச் சுருக்கமாகத் தெரிவிப்பதனால் துவாதசாங்க பரமாகமத்தின் ஸாரமாகிய பஞ்சாஸ்திகாய மென்னும் பெயரினையுடைய இந்த சாஸ்திரம் சொல்லப்பட்டது. பவ்வியர்கள் இதனை அப்பியசித்து இதிற் கூறியவாறு வியவஹார நிச்சய நயங்கள் இரண்டையும் அபேக்ஷித்து மோக்ஷமார்க்கத்திற் பொருந்தி ஆத்ம சுத்த ஸ்வரூபப் பிராப்தியாகிற மோக்ஷத்தினை அடைந்து பரமானந்த சுகத்தினை அடையக் கடவர்களென்பது தாத்பரியம்.

பஞ்சாஸ்திகாயம் முற்றும்